Registered as a Newspaper

பெண்மணிகளுக்கும்
சிறுவர் சிறுமியருக்கும்
ஏற்ற
இறக்குமதி செய்யப்பட்ட
நவீன
புடவை தினுசுகளுக்கும்
றெடிமேட்
ஆடைகளுக்கும்
புகழ் பெற்றவர்கள்
இளவரசி
S12, நவீன சந்தை,
சுன்னுகம்.

# சஞ்சீவி

## அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 2-50

குறுகிய காலத்தில்
மக்களின்
நன்மதிப்பையும்
ஆதரவையும் பெற்ற
ஒரே ஜவுளி நிறுவனம்
இளவரசி
S12, நவீன சந்தை,
சுன்னுகம்.

மலே:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ ஆவணி மீ 27 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 முஹறம் பிறை 17 (12-09-1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:-36

★ மாகாணங்களாக இன்றி

# வடக்கு, கிழக்கை மாநிலமாகக் கருதி உதவி வழங்குங்கள்

## பிரிட்டிஷ் அமைச்சரிடம் சிவத்தம்பி

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 12

வடக்கையும், கிழக்கையும் இரண்டு மாகாணங்களாகக் கொள்ளாது, புதிய மாநிலமாகக் கருதியே புனருத்தாரண உதவிகளை வழங்க வேண்டும்.

இவ்வாறு தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி, நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த பிரிட்டிஷ் அமைச்சர் திரு. ரிமொதி றென்ரனிடம் கேட்டுக்கொண்டார்.

பிரிட்டிஷ் குடிவரவு, குடியகல்வுத் துறை அமைச்சரான திரு. ரிமொதி றென்ரன் நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். அவருடன் ஏழு அதிகாரிகளும் வந்திருந்தனர்.

யாழ். கச்சேரியில் பிரிட்டிஷ் அமைச்சர், பிரசைகள் குழுக்களின் பிரதிநிதிகள், அகதிகளுக்கு உதவி செய்யும் மற்றும் தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளை யாழ். செயலகத்தில் சந்தித்து உரையாடினர்.

அப்போதே பேராசிரியர் சிவத்தம்பி முன் கண்டவாறு தெரிவித்தார்.

திரு. ரிமொதி றென்ரன் குழுவினர் கொழும்பில் இருந்து விமானம் மூலம் நேற்றுப் பிற்பகல் 3 மணி அளவில் பலாலிக்கு வந்து சேர்ந்தனர்.

பின்னர் ஹெலிக்கொப்டர் மூலம் வடமராட்சிப் பகுதிக்குச் சென்று அங்கு சேத

(10ஆம் பக்கம் பார்க்க)

## 48 பூஸா இளைஞர்கள் யாழ்ப்பாணம் வந்தனர்

யாழ்ப்பாணம், செப். 12

பூஸாமுகாமில் இருந்து விடுதலையான 48 பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

புதன்கிழமை பூஸாவில் இருந்து கப்பல் மூலம் புறப்பட்ட இவர்கள் நேற்றுப் பகல் 4. 12 மணியளவில் காங்கேசன்துறை வந்து சேர்ந்தனர்.

பூஸாவில் இருந்து வந்த இளைஞர்கள் ஒவ்வொருவருக்கும் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் தலா 25 ரூபா வீதம் வழங்கி போக்குவரத்துச் செலவையும் பொறுப்பெடுத்துக் கொண்டது.

யாழ் செயலகத்துக்கு வந்த பூஸா இளைஞர்களுக்கு செயலக ஊழியர்கள் சிற்றுண்டி வழங்கி உபசரித்தனர்.

இதேவேளை பூஸாமுகாமில் மேலும் 950 இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-10)

## யாழ் பொலீஸ் நிலையம் திறந்துவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செப்.12

யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையம் கடந்த இரண்டரை வருடங்களுக்குப் பின்னர் நேற்று உத்தியோக பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

பிரிகேடியர் ஜெயரட்ண தலைமையில் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

பொலீஸார் தங்கும் விடுதி ஒன்றிலேயே இந்த பொலீஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்து கிறிஸ்தவ, இஸ்லாமிய மதகுருமாரும் இந்த விழா நிகழ்ச்சியில் பங்குபற்றினர்.

இருபாலையில் இடம் பெற்ற முறைப்பாடு ஒன்று முதன் முதலாக இந்தப் பொலீஸ் நிலையத்தில் பதியப்பட்டது

(இ-10)

## ஆயுதமின்றி கடமையில் ஈடுபட்ட பொலீஸார்

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாணத்தில் பொலீஸாரின் சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் குடி வரவு அமைச்சர் உட்பட ஏழு அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது யாழ் பொலீஸாரும் அவர்களுடன் கூட வந்தனர். ஆயுதம் எதுவும் அவர்கள் வைத்திருக்கவில்லை.

யாழ் பொலீஸ் நிலையம் தாக்கப்பட்டு சிவில் நிர்வாகம் சீரடைந்திருந்த இரண்டரை வருடத்தின் பின் நேற்று யாழ்ப்பாணத்தில் பொலீஸாரின் நடமாட்டம் முதல் தடவையாகக் காணப்பட்டது.

[இ-ஓ-10)

கருத்துக் கலசம் — மதுரா

## பன்முகப் பாரதி

நேற்று செப்டம்பர் 11ஆம் திகதி மகாகவி பாரதியாரின் நினைவு தினம். அவர் இவ்வுலகை விட்டு பிரிந்த 105ஆவது நினைவு நாள். பாரதி நினைவு தினம் நேற்றுப் பல இடங்களிலும் கொண்டாடப்பட்டது.

''பாட்டுக்கொரு புலவன் பாரதியடா'' என்று மகாகவியை தனியக் கவிஞனுகவே பலர் பார்க்கிறுர்கள். பாமரரும் விளங்கிக்கொள்ளும் இலகு தமிழில், எளிய நடையில் கவிதை வடிக்கும் மரபைத் தோற்றுவித்த புதுமைக் கவிஞன் அவன் என்பதில் ஐயமில்லை.

அவனது கவிதைகள் சாகா வரம் பெற்றவை எனலாம் தமிழ் உள்ளளவும் பாரதியின் கவிதைகள் தங்கமென மின்னிச் சுடர் விடும். அவை காலத்தை வென்றவை. எக்காலத்துக்கும் பொருத்தமானவை. எந்தக் காலத்தையும் விட இந்தக் காலத்துக்கே மிகமிகப் பொருத்தம் என்று எல்லாக் காலத்திலும் கூறி உரிமை கொண்டாடக் கூடிய பெருமை பெற்றவை பாரதியின் கவிதைகள். கருத்துச் செறிவும், தத்துவ மிளிர்ச்சியும், இலக்கியச் செறிவும் பொதிந்தவை அவரது பாடல்கள்.

அவர் பக்தனுக நின்று எண்ணற்ற பக்திப் பாடல்களை எழுதினுர்.

சுதந்திர தாகம் கொண்ட வீரனுக நின்று உணர்ச்சி ததும்பும், வீறுகொண்ட பாடல்களை இயற்றினுர். அவற்றின் மூலம் மக்களிடையே சுதந்திர உணர்வை ஊட்டினுர். அந்த வகையில் அவர் தேச பக்தனுகவும், சுதந்திர வீரனுகவும் திகழ்ந்தார்.

தமிழின் புகழ்பாடும் தமிழ்த் தாசனுகவும் அவர் செயற்பட்டார். தமிழினத்திற்குப் புத்திபுகட்டும் போதகராகவும் அவர் திகழ்ந்தார். தேசாபிமானியாக மட்டுமின்றி, இனப்பற்றுள்ளவராகவும், மொழிப் பற்றுள்ளவராகவும் பாரதியார் தொண்டாற்றினுர்.

அவர் தமது வாழ்க்கையின் பல கட்டங்களிலும் பத்திரிகையாளராகவும் பணிபுரிந்தார்

மூட நம்பிக்கைகளையும், சமூகக் கொடுமைகளைச் சாடும் சீர்திருத்தவாதியாகவும், சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்கவேண்டும் என்ற தாகம் கொண்ட புரட்சிவாதியாகவும் பாரதி திகழ்ந்தார். சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை ஆகிய நன்னெறிகளை ஆதரித்தும் சிலாகித்தும் பாடினுர்.

மொத்தத்தில் பாரதி ஒருவனுக இல்லாமல் பல துறை வல்லுநராக பன்முகப் பாரதியாக விளங்கினுன்.

அவனது இலட்சியங்க

(10ஆம் பக்கம் பார்க்க)

திருமலையில்

## ஸ்ரீலங்கா இராணுவ கெடுபிடி தளரவில்லை

திருகோணமலை.செப்.12

திருகோணமலையில் ஸ்ரீலங்கா இராணுவப்படையினரின் கெடுபிடி குறையவில்லை.

திருகோணமலையிலும் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் ஆங்காங்கே தடைமுகாம்களை அமைத்து அப்பாதையால் பிரயாணம் செய்யும் பயணிகளை அவர்கள் தொடர்ந்து சோதனை செய்து வருகிறுர்கள்.

கடந்த வியாழக்கிழமை இரவு 7மணிக்கும் 8மணிக்கும் இடையில் - ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு வருவதற்கு சுமார் ஒரு மணி நேரத்துக்கு முன்னதாக - திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த எமது ஸ்தாபனத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவரின் கார் 4 தடைமுகாம்களில் வழிமறிக்கப்பட்டது. சிங்களச் சிப்பாய்கள் ஆங்காங்கே கடும் சோதனையையும் மேற்கொண்டனர்.

சுமார் 6 மைல் இடைவெளிக்குள் பன்குளம், மொறவெவ, பன்மதவாச்சி, 10ஆம் கட்டை பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களில் முகாமிட்டிருந்த படையினரே இச்சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

(உ)

## முல்லைத்தீவில் மறியல் தொடர்கிறது

யாழ்ப்பாணம், செப். 12

முல்லைத்தீவுக் கச்சேரிக்கு முன்பாக கடந்த 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மறியல் போராட்டம் நேற்று ஏழாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது.

இம்மறியல் போராட்டத்தில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவுப் பிரதேசத்திலுள்ள சகல சிங்களக் குடியேற்றங்களும் அகற்றப்பட வேண்டும்—

இப்பகுதியிலுள்ள சகல இராணுவ முகாம்களும் அகற்றப்பட வேண்டும்—

இங்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் அனைத்துக்கும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் — ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தே மறியல் போராட்டம் நடக்கிறது.

[ஓ]

## தொலைபேசிச் சேவையா? இப்போதைக்கு இல்லை!

யாழ்ப்பாணம். செப் 12

யாழ்ப்பாணம் தொலைத் தொடர்புச் சேவையை இப்போதைக்கு ஆரம்பிக்க முடியாதவாறு இணைக்கள இயந்திரங்கள் மிகப் பலத்த சேதமுற்றுள்ளன.

தொழில்நுட்ப சாதனங்கள் யாவும் திருத்த முடியாத அளவுக்குச் சேதமுற்று உள்ளன எனவும். பல முற்றுமுழுதாகப் பழுதடைந்திருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது

தொலைத்தொடர்புக் கட்டடத்தில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவம் வெளியேறிய பின்னர், திணைக்கள உயர் அதிகாரிகள் நேற்று முதல் தடவையாக அங்கு சென்றிருந்தனர்.

தொலைத் தொடர்பு திணைக்களத்துக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடும்படி தலைமை அலுவலகம் கேட்டிருந்தது.

முற்றுமுழுதாகப் புதிய தொலைத் தொடர்பு சாதனங்களையே பொருத்தி சேவையை ஆரம்பிக்க வேண்டியுள்ளது என்று தொலைத் தொடர்பு நிலையத்துக்கு நேற்று சென்றுவந்த உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

## கல்முனையில் 20 கடைகள் தீக்கிரை!

கொழும்பு செப். 12

கல்முனைக் கலவரத்தில் சுமார் 20 கடைகள் தீக்கிரையாகின நிலைமை கட்டுப்பாட்டுக்குள்இருக்கின்றது.

இப்படி பிரதமர் பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்காவின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்குமாகாணங்கள் இப்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன என்றும் பிரதமர் சொன்னுர்.

தங்காலை, தெனியாய தொகுதிகளின் புதிய எம். பிக்கள் நேற்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

(இ-எ)

## இருபாலையில் ஒருவர் கொலை

யாழ்ப்பாணம், செப் 12

குடும்பஸ்தர் ஒருவர் இனந் தெரியாதோரால் வெட்டிக்கொலைசெய்யப்பட்டார்.

வியாழக்கிழமை இரவு ஒன்பது மணிஅளவில் இருபாலை கிழக்குவிதானையார் வீதியில் இச் சம்பவம் இடம்பெற்றது

கொலையுண்டவர் கிட்ணன் வரதராஜன் (வயது 35) என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை பதில் நீதிவான் திரு அன்ரனி நடத்தினுர்.

சாட்சிகளை பொலீஸ் கான்ஸ்டபிள் திரு. ஜீ. சந்தியாப்பிள்ளை நெறிப்படுத்தினுர்.

விசாரணையின் பின் பதில்நீதிவான் திரு. அன்ரனி கொலை எனத் தீர்ப்பளித்தார்.

(ஓ-10)

## பூநகரியில் நடந்த ஊர்வலம்

பூநகரி, செப். 12

நேற்று பூநகரியில் இடம்பெற்ற ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

பூநகரி வாடியடியில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் 4ஆம் கட்டை இந்திய இராணுவ முகாம்வரை சென்று 22 அம்சக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தது.

பூநகரி பிரசைகள்

(10ஆம் பக்கம் பார்க்க)

வைத்திய தாதிமார் பரீட்சை

## தமிழ்இளைஞர்,யுவதிகள் வாய்ப்பு இழந்தனர்

மானிப்பாய், செப். 12

வைத்தியத் தாதிமார்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பரீட்சை இன்று கொழும்பில் நடைபெறுகிறது.

இப்பரீட்சையை நடத்துவது சம்பந்தமான எதுவித அறிவித்தலும் வடபகுதி மக்களுக்கு தெரியப் படுத்தப்படாததால் இப்பகுதிவாழ் படித்த இளைஞர், யுவதிகள் இப் பரீட்சைக்கு தோற்றும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

தாதிகள் சேவையில் சேர்ந்துகொள்ள விரும்பும் தகுதியுடைய வடபகுதி தமிழ்ப் பரீட்சார்த்திகளுக்கு வசதியாக மீண்டும் ஒருபரீட்சையை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக, பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களை உடனடியாக பிரதேச சுகாதாரசேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு போதன வைத்தியசாலைகள் பணிப்பாளர் டாக்டர் நச்சினுர்க்கினியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

[இ-90]

## முன்னுள் எம். பி. நெவில் விளக்கமறியலில்!

பாணந்துறைத் தொகுதியின் முன்னுள் எம்.பி. டாக்டர் நெவில் பெர்ணண்டோ அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் நவம்பர் 28வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பாணந்துறைநீதிவான் சரத் டி. ஆப்ரு விளக்க மறியலில் வைக்கும் உத்தரவைப் பிறப்பித்தார். ஜூலை 29 வன்செயல்களில் டாக்டர் பெர்ணண்டோ சம்பந்தப்பட்டிருந்தார் என்பதற்குரிய சாட்சியங்கள் கிடைத்துள்ளன என்று தலைமைக்காரியாலயப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஆரியபாலா தெரிவித்தார்.

[ஓ-எ]

### சாண்டில்யன் காலமானுர்

தமிழகத்தின் பிரபல சரித்திர நாவலாசிரியர் சாண்டில்யன் நேற்றுக் காலை சென்னையில் காலமானுர்

அவருக்கு வயது 77.

(10-ம்பக்கம் பார்க்க)

# ஷெல் குண்டு வெடித்து இருவர் மரணம்

## கொட்டடியில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 12

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஷெல் குண்டு ஒன்று வெடித்ததில் இருவர் பலியாஞர்கள்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் நடந்தது.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

கொட்டடி முத்தமிழ் வீதியைச் சேர்ந்த பிரேமச் சந்திரன் (வயது 20) செல்வசாந்தி (வயது 19) ஆகிய இருவரும் தெருவில் புதைத்து கிடந்த ஷெல் குண்டு ஒன்றை எடுத்து அதனை நிலத்தில் குத்திப் பார்த்தனர்.

அப்பொழுது அக்குண்டு வெடித்ததில் பிரேமச்சந்திரன் அந்த இடத்திலேயே சிதறி மரணமாஞர்.

கால்கள், கைகள், சிதறிய நிலையில் செல்வசாந்தி யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பின்னர் மரணமாஞர்.

ஏற்கனவே கோட்டை இராணுவத்தினரால் ஏவப்பட்டு வெடிக்காத நிலையில் கிடந்த ஷெல் ஒன்றே இப்படி வெடித்தது என்று கூறப்படுகிறது.

(ஓ-10-90)

### சுபநேரம்

12-09-1987
சனிக்கிழமை
ஆவணி 27
சுபநேரம்:
3 03 முதல் 4.33 வரை
ராகுகாலம்:-
9.03 முதல் 10.33 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
மஹாபரணி

### 21 பஸ்கள் வந்தன

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாணம் கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு 21பஸ்கள்கொண்டு வரப்பட்டுள்ளன.

(இ-10)

விளையாட்டு ரசிகர்களே!
உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி குறித்து என்ன நினைக்கிறீர்கள்.
நாளைய உதயனைத் தவருது வாங்கிப் படியுங்கள்.

புதுமையும் எழிலும் நிறைந்த பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★

## தேவை

சங்கம் ஒன்றினால் நிர்வகிக்கப்படும் சுன்னாகம் வியாபார நிலையத்திற்கு சமயாசமய அடிப்படையில் அனுபவம் உள்ள கணக்குத் தெரிந்த பொறுப்பாளர் தேவை. சகல விவரங்களுடன் மனுச் செய்க. விளம்பர எண்-72 C/O உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

M G.A மோட்டார் வாகனம், ஹாலி டேவிட்சன் (Harley Davidson) மோட்டார் சைக்கிள், உடனடியாக கொள்வனவு செய்வதற்குத் தேவை. விலை மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்க. அஜித் 97 கொட்டாரோட், கொழும்பு 8.

விறகு கொத்தவும், வண்டி இழுக்கவும் நல்லொழுக்கமுடைய ஊழியர்கள் உடனடியாகத் தேவை. தம்பிஐயா விறகுசாலை, 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. [1509]

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும். நிக்கலஸ் 38, 5 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (1677)

புடைவை, கூல்பார், இரும்புக் கடை, பல சரக்குக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும். நேரில் வந்து சந்திக்கவும் கடையின் நீளம் 30 அடி அகலம் 13 அடி. பிளேட் கட்டிடம், கருக்குகேற், பரணி ஸ்ரோர்ஸ், கே, கே எஸ், ரோட், கொக்குவில். (1671)

## விற்பனைக்கு

57 கே.கே.எஸ். வீதியில் தேனீர்க் கடை சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- விளம்பரஎண் 71 மே/பா உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1681)

புங்குடுதீவு 6ஆம் வட்டாரம் சொல்லன் தண்டுவன் நிலப்பரப்பு 2 பிரிவு கல்வீடு, கிணறு வான் பயிர், தென்னை, பனை, வேம்பு ஆகியவை விற்பனைக்கு விடப்படும். சொக்கன்சரந்தலிபரப்பு 66 பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு:- க. அம்பலவாணர், இல 122/11ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (1594)

## புத்தகம்

வாங்கி விட்டீர்களா? "உலகத் தமிழர் குரல்" 4ஆவது மாநாட்டு சிறப்பு மலர். பிரதி ஒன்று பத்து ரூபா மட்டுமே. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 67, புகையிரத நிலையவீதி, யாழ்ப்பாணம். ஸ்ரீவாணி ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி. யூனிவேர்சல் றேட்ஸ், திருநெல்வேலி. (1667)

## வகுப்புகள்

11-ஆம் ஆண்டிற்கான கணிதபாடத்தில் துரித மீட்டலும் வினாவிடை வகுப்புகளும் விரைவில் ஆரம்பமாக உள்ளன. பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். கோகுலன் 93A, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (1664)

# மூதூர்ப் பிரதேசத் தமிழ்க் கிராமங்கள்

# முகங்கொடுத்த வன்முறைத் தாக்குதல்கள்

-க. இரத்தினராஜசிங்கம் -

முஸ்லிம், தமிழ், சிங்கள மக்கள் கூட்டாக வாழ்ந்து வந்த மூதூர்த் தொகுதியில் இன்று தமிழர்கள் விரட்டி அடிக்கப் பட்டுள்ளனர்.

உயிருடன் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளனர். தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டுள்ளன.

இவற்றைப் பார்வையிடுவதற்காக யாழ் பத்திரிகையாளர் என்ற பெருமையுடன் மூதூர்த் தொகுதிக்குள் நுழைய ஆயத்தமாகின்றேன். இரண்டாம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணி மூதூர் செல்வதற்காக திருகோணமலைத் துறைமுக அதிகாரசபை கட்டடத்தினுள் நிற்கின்றேன்.

மூதூரில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காக விடுதலைப் புலிகள் எம்மை அழைத்துச் செல்லும் போது கூடவே ஒன்பது புதிய சைக்கிள்களும் வாங்கி வந்தனர்.

அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கும் கடல் பகுதியின் துறைமுக கரையில் மூதூர் செல்வதற்காக படகு (லோஞ்சி) அணைக்கப்படுகிறது. பல விதப்பட்ட பொருள்களும் லோஞ்சியில் ஏற்றப்பட்டு மூதூரை நோக்கி புறப்பட ஆயத்தமாகிறது.

12-45 மணி அளவில் உள்ளும் புறமும் நூற்றுக்கணக்கான பயணிகள் நிரம்பி வழிய படகு புறப்படுகிறது.

ஒன்றேகால் மணிநேரப் பயணம் நீண்ட நாட்களாக கடலில் பயணம் செய்து பழக்கம் இல்லாததனால் மனதினுள் ஒருவித பயம்.

என்னுடன் வந்த சக பத்திரிகையாளர் சிலர் கடலையும் படகையும் கண்டு பயந்து பயணத்துக்கு மறுத்துவிட்டனர். எனினும் மனத்தைரியம் ஊட்டி அவர்களையும் படகுக்குள் ஏற்றி பயணத்தைத் தொடர்கின்றோம்.

சரியாக இரண்டு மணி. மூதூர் இறங்குதுறையில் படகு கட்டப்படுகிறது.

நாம் புதிய சைக்கிளில் பயணத்தை ஆரம்பிக்கிறோம்.

### தலைதப்பியது

மூதூரில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் காரியாலயத்தை நாம் அடைந்ததும் எல்லோரும் களைப்பு அடைந்து விட்டோம். மூதூரில் சேதமடைந்த இடங்களைப் பார்வையிடுவதற்காக சுதர்சன் (சுதன்) என்ற இளைஞன் எம்முடன் அனுப்பி வைக்கப் பட்டிருந்தான்,

'மச்சான் இன்னும் எவ்வளவு தூரம் போக வேணும்' நான் கேட்டேன்.

இன்னும் ஒரு நாலு மைல் போக வேணும்.

ஐயோ என்றால் சைக்கிள் ஓட முடியாதப்பா சக பத்திரிகையாளர் ஒருவர் தமது களைப்பைத் தெரிவித்தார்.

சரி இங்கேயே தங்குவோம் நாளைக் காலை வாகனம் ஒன்று எடுத்து சேதமடைந்த இடங்களைப்பார்வையிடுவோம்

மற்றொரு பத்திரிகையாளர் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

எல்லோருக்கும் அது சரியாகவே பட்டது. எனினும் மூதூர்ப் பிரதேசப் பொறுப்பாளரிடம் எம்மைக் கையளிக்க வேண்டும் என்று சுதர்சன் தெரிவித்தமையால் மூதூரில் உள்ள கூனித்தீவை நோக்கி எமது பயணம் ஆரம்பமாகிறது.

நாம் கூனித்தீவு நோக்கிப்பயணம் மேற்கொண்டிருந்த பொழுது சம்பூரில் அகதிகள் சிலரைச் சந்தித்தோம்.

சம்பூர் மகாவித்தியாலயத்தில் இருந்து அப்பொழுது இராணுவம் அகற்றப்பட்டிருந்தது.

கல்வீடுகளில் ஓரளவு வசதியுடன் வாழ்ந்தவர்கள் பத்தடி நீள அகலம் கொண்ட ஓலைக் கொட்டிலில் வசித்து வருகிறார்கள்.

அவர்களில் சிலரைச் சந்தித்தோம்.

மேன்காமம், கிளிவெட்டி, எல். பி. 6, எல். பி 3., தங்கநகர், பாரதிபுரம் ஆகியபகுதிகளைச் சேர்ந்த மக்கள் அங்கு குடியமர்ந்திருந்தனர்.

திரு. யேசுதாசன் என்பவரை நாம் அங்கு சந்தித்தபொழுது-

சம்பூர் அகதி முகாமில் நாம் இருந்தபொழுது எட்டுமாதமாக இலங்கை அரசு எந்த விதமான நிவாரணமும் எமக்கு வழங்கவில்லை.

நாம் பரம்பரை பரம்பரையாக கமத்தொழில் செய்துவந்தோம் எமது வீடுகளும் பொருள்களும் சிங்கள ஊர்காவல்படையினரால் கொள்ளையடிக்கப்பட்டன. இந்த நிலையில் எம்மால் என்ன செய்யமுடியும்?



நெஞ்சில் துஞ்சும் அவலத்தை முகத்தில் ஏந்தும் தாயும் சேயும்

தற்பொழுது விறகு வெட்டியும், மீன்பிடித்தும் எமது சீவியத்தை நடத்துகிறோம்.

எமது பரம்பரைத் தொழிலையே செய்ய முடியாத நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

—இப்படி அவர் சொன்னார். அங்கிருந்த பலரிடம் பேட்டிகளை முடித்துக் கொண்டு கூனித்தீவு நோக்கிப் பயணமாகிறோம்.

### கூனித்தீவு

அப்பப்பா! என்ன பயங்கரம். நாம் செல்லும் வீதியின் இருமருங்கிலும் உருக்குலைந்து சிதறிய நிலையில் இராணுவ வாகனங்கள் காணப்பட்டன.

இவைபற்றி விசாரித்த போது,

அவ்வப்போது போராளிகளின் தாக்குதலுக்கு இலக்கான ஸ்ரீலங்கா இராணுவ வாகனங்கள் அவை எனத் தெரிந்தது.

எமது மூதூர் முதல் பயணம் கூனித்தீவில் முடிவுற்றது.

கூனித்தீவு பல போராளிகளை வளர்த்து, உருவாக்கிய கிராமம்.

அன்றிரவு அங்கு நாம் தங்கினோம்.

3 ஆம் திகதி காலை எட்டுமணி. கூனித்தீவில் [illegible] பார்வையிடுவதற்கு வும், செய்தி சேகரிப்பதற்காகவும் நாம்சென்று கொண்டிருந்தோம்.

அப்பொழுதுதான் ஒரு திடுக்கிடும் செய்தி கிடைத்தது. மூதூர் உதவி அரசாங்க அதிபர் சுட்டுக்கொலை செய்யப் பட்டுள்ளதாகவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் காரியாலயம் அடித்து நொருக்கப்பட்டதாகவும் அந்தச் செய்தி தெரிவித்தது.

இரண்டாம் திகதி இரவு விடுதலைப் புலிகளின் காரியாலயத்தில் நாம் உறங்கியிருந்தால்......

எனக்கு மயிர்க்கூச் செறிந்தது.

இதனையடுத்து மூதூரில் முஸ்லிம் தமிழ் கலவரம் ஏற்பட முனைந்தும் இந்தியப் படையினரால் அக்கலவரம் ஓரளவு தவிர்க்கப்பட்டது.

எனினும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சில முஸ்லிம்களின் தாக்குதலுக்கும் இலக்கானார்கள்.

கூனித்தீவைச் சுற்றி செய்தி தேடத் தொடர்ந்து புறப்பட்டோம்.

கூனித்தீவு கிராம சேவையாளர் திரு. யோகநாதனை நாம் அங்கு சந்தித்தபோது அவர் தெரிவித்ததாவது;

1987 ஆம் ஆண்டு ஆரும் மாதம் 28 ஆம் திகதி கூனித்தீவுக் கிராமம் முதல் முதலாக இராணுவத்தினால் சுற்றி வளைக்கப்பட்டது.

கடற்பகுதி காட்டுப் பகுதி ஊடாக வந்த படையினர் கூனித்தீவில் கொலைவெறியை நடத்தினர்.

இச்சம்பவத்தில் ஆறு பேர் பலியானார்கள். கூனித்தீவில் உள்ள 400க்கும் அதிகமான வீடுகளை எரித்தார்கள், உடைத்தார்கள்.

உடைமைகள் அனைத்தும் கொள்ளையடிக்கப் பட்டன. கூனித்தீவை அண்டியுள்ள சில கிராமங்கள் பற்றிய தகவல்களையும் அவர் அப்போது எமக்குத் தந்தார்.

### சம்பூர்

13 ஆம் திகதி ஆரும் மாதம் 85 ஆம் ஆண்டு சம்பூருக்கு ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் கடல் மார்க்கமாகக் கொண்டுவரப்பட்டனர்.

வந்த அன்றைய தினமே இராணுவத்தினர் தமிழ் பகுதிக்குள் புகுந்து தமது வேட்டைகளையும் பலியெடுப்புகளையும் நடத்தினர்.

இராணுவ வேட்டையையடுத்து சம்பூர், கட்டைப்பறிச்சான் பகுதிகளில் இருந்த இரண்டாயிரத்து நூற்றி இருபது குடும்பங்கள் காட்டுக்குள் ஓடி ஒளிந்து வாழ்ந்தனர்.

இராணுவம் நடத்திய வெளித் தாக்குதலினால் சம்பூரில் மட்டும் 16 பேர் எரிக்கப்பட்டனர்.

தொடர்ந்து வேட்டை நடத்திய இராணுவம் [illegible] பொதுமக்களது வீடு [illegible] முகாம்களை அமைத்துக் கொண்டது.

மக்கள் வாழ்க்கையில் திருப்புமுனைகள் ஏற்பட்டன.

நாட்டு வாழ்க்கையை விட்டுக் காட்டு வாழ்க்கையை அவர்கள் அனுபவிக்கத் தொடங்கினர்.

பரமபரைத் தொழில்களை விட்டு மாற்றுத் தொழில்களை அவர்கள் நாடத் தொடங்கினர்.

கடந்த இரண்டரை வருடங்களாக சம்பூரில் இராணுவம் நடத்திய அடாவடித்தனத்தால் 25 பேர்வரையில் கொல்லப்பட்டனர்.

கல்வீடுகள் இடிக்கப்பட்டு, ஓலை வீடுகள் எரிக்கப்பட்டன.

விளைநிலமான வயல் காணிகள் எல்லாம் பாலைவனமாகக் காட்சியளித்தது.

சம்பூரில் இராணுவம் நடத்திய தாக்குதலினால் மட்டும் ஏழு கோடியே இருபத்திரண்டு இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

### கட்டைப்பறிச்சான்

கட்டைப்பறிச்சான் கிராமத்தில் மட்டும் 1240 குடும்பங்கள் இராணுவத் தாக்குதல்களினால் வெளியேறின.

இராணுவத் தாக்குதலினால் 150 வீடுகள் எரிக்கப்பட்டன.


விவசாயிகளின் சொத்துக்கள், டிராக்டர்கள் அனைத்தும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

மக்கள் ஓடி ஒளித்தனர். பிள்ளைகளின் படிப்புப் பாழாகியது. பாடசாலைகளில் இராணுவம் முகாம் அமைத்துக் கொண்டது. மீண்டும் 86 ஆம் ஆண்டு திடீரென இராணுவம் தனது சுற்றிவளைப்பினை நடத்தியது.

இச்சம்பவத்தின்போது கடையில் இருந்த இருவர் வெளியே இழுத்துப் போட்டு உயிருடன் கொளுத்தப்பட்டனர்.

மாடு தேடிப்போன இருவர் கொமாண்டோக்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

(தொடரும்)



அழிபாடு ஒருபுறம் அவலம் மறுபுறம்

## மணமகள் தேவை

44வயதுடைய வெளிநாட்டில் தொழில் புரியும் இந்து வேளாள மாப்பிள்ளைக்குத் தகுதியான குடும்பப் பெண் தேவை. எல்லா விவரங்களும் முதல் கடிதத்தில் படத்துடன் கோரப்படுகிறது. விளம்பர எண்-73 மே/பா உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# பிரயாண ஒழுங்குகள்

★ பின்வரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் எம்மிடமுண்டு

**A American Company (JEDDHA)**

1. 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும் சாப்பாடு இருப்பிட வசதியுடன், சம்பளம் 500 SR
2. 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் Cleaners சாப்பாடு இருப்பிடவசதியுடன் சம்பளம் 350 SR

தெல்லிப்பளை, கட்டுவன், ஏழாலை, காங்கேசன்துறை மக்களின் வசதிக்காக எமது காங்கேசன்துறைக் காரியாலயம் வழமையான இடத்தில் நடைபெறுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்!

**B. ★ லெபனன் ★ CLEANERS**

1. ★ ஆண்கள் 18 வயதிற்கு மேற்பட்டோர் அடிப்படைச் சம்பளம் 3500/- (சாப்பாடு, இருப்பிடவசதியுடன்)
2. ★ பெண்கள் 18 வயதிற்கு மேற்பட்டோர் அடிப்படைச் சம்பளம் 2500/- (சாப்பாடு, இருப்பிட வசதியுடன்)

**C. ★ IRAQ ★ Hospital Cleaners**

★ 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் இருப்பிட வசதியுடன் சம்பளம் 65 டினார்

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

★ T. இந்திரநாதன் ★
☆ M 3 ரவல்ஸ் ☆
சற்குணவாசா (சோதிலேன்)
காங்கேசன்துறை.
(பஸ்வழி இலக்கம்:- 769)

★ T. இந்திரநாதன் ★
**M. THREE TRAVELS**
96, Kachcheri Nallur Road,
Nallur, Jaffna.
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு வழியின்றி ஜே. ஆர். ஏற்றார்

இந்திய - இலங்கை ஒப்பந்தம் பத்தாண்டுகளின் பின்னர் இலங்கையில் அமைதியைக் கொண்டு வந்திருக்கின்றதா?

சொர்க்க பூமியில் திரிந்த பாம்பு இறுதியில் கொல்லப்பட்டு விட்டதா?

26 ஆயிரம் சதுரமைல் பிரதேசத்தில் 15 லட்சம் தமிழர்களுக்குத் தனி நாடு அமைக்க இறுதி மூச்சு வரை போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள பிராந்தியச் சுயாட்சியை ஏற்றுக் கொள்ளச் சம்மதிப்பார்களா?

வன்செயல்களைக் கைவிட்டு, ஜனநாயக முறைகளில் பங்கு கொண்டு 1 கோடி 45 லட்சம் சிங்களச் சிங்கங்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள விடுதலைப்புலிகள் முன்வருவார்களா?

இவையும் இவை போன்ற இன்னும் நூறுக்கு மேற்பட்ட கேள்விகளும்தான் இலங்கையிலும் வெளியேயும் வாழுகின்ற இலங்கை-யர்களின் வாசலில் அடிபடுகின்றன.

இந்த இலங்கையர்கள் இரத்தஆறு ஓடிய கடந்த பத்து ஆண்டுகளாக கற்பனைக்கு எட்டாத பயங்கரத்தை அனுபவித்தவர்கள் அல்லது வெளியே இருந்து அவதானித்தவர்கள் ஆவர்.

ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நிம்மதிப் பெருமூச்சு விடுபவர்களில் பெரும்பாலான சிங்களவர் ஒற்றையாட்சி நாட்டை வற்புறுத்தி வந்தவர்கள்.

1956 இல் பதவிக்கு வந்த இனவாத பண்டாரநாயக்கா ஆட்சியைத் தொடர்ந்து சுமத்தப்பட்ட அநியாயங்கள், அவமதிப்புக்களுக்குப் பின்னரும் இந்த நாடு பிரிக்கப்படக் கூடாது என்று விரும்பிய தமிழரும் இந்த ஒப்பந்தம் கண்டு நிம்மதி அடைந்தனர்.

இலங்கையில் சமாதானம் நிலவுவது இந்தியாவின் நல்லெண்ணத்திலும் உறுதியிலும் தங்கியுள்ளது என்பது இலங்கையருக்கு ஏமாற்றத்தைத் தரலாம்.

'பெரிய அண்ணா' மனப்பான்மையுடன் விமானங்கள் மூலம் உணவுப் பொதிகளை தமிழருக்கு வழங்கிய இந்தியப் பிரதமரின் நேர்மை குறித்தும் அவர்கள் கவலை கொள்ளலாம்.

ஒப்பந்தம் எவ்வளவு காலத்துக்கு நின்று பிடிக்கும் என்பதில் சந்தேகம் இருந்தாலும் இரண்டு நல்ல விஷயங்கள் நடந்து இருக்கின்றன என்பதை இலங்கையர் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்வர்.

★ கொலைகள் நின்று விட்டன. போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்கின்றார்கள். இந்த வரப்பிரசாதத்தின் மகிமையை எவரும் மறுத்துரைக்கமுடியாது.

★ தென் இந்தியத் தமிழ்நாட்டின் தலையீடு இலங்கையின் அரசியல் மற்றும் மக்களின் வாழ்வில் இடம் பெறுவது நிறுத்தப்பட்டு விட்டது. தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தமிழ்ப் போராளிகளும் உணவு, உடை, ஆயுதம் கொடுத்து பராமரிக்கப் பட்டனர்.

அந்த ஊடுருவலைத் தடுக்கும் ஆற்றல் சின்னஞ்சிறிய ஸ்ரீலங்காவின் முப்படைகளுக்கு இல்லை.

28 மைல் நீள பாக்கு நீரிணையை இந்தியக் கடற்படை இப்போது ரோந்து புரிகின்றது.

ஒப்பந்தத்துக்குத் துணையாக இந்திய இராணுவத்தின் மூன்று டிவிஷன்கள் வடக்கில் நிலை கொண்டுள்ளன.

அமைதியை நிலைநாட்டும்பணியை இந்திய அரசிடம் ஒப்படைக்க ஜனாதிபதி ஜெயவர்த்தனவை எது தாண்டியது? 'மனிதாபிமான உதவி' விமானமூலம் போடப்பட்டதால் (நிக்கரகுவா கொன்றாக் கிளர்ச்சியாளர்களுக்கு ஒலிவர் நோர்த் உதவியது போன்று) இலங்கையின் இறைமை மீறப்பட்டது என்று ஜனாதிபதி ஆத்திரப்பட்டிருந்த பின்னர் இது நடந்திருக்கிறது.

மறுமொழியைக் கண்டுபிடிக்க அவ்வளவு தாரம் செல்லவேண்டியதில்லை.

முதலாவது, இனிச் செய்யக்கூடியதாக ஜனாதிபதியிடம் ஒன்றுமே இருக்கவில்லை.

தமிழ்நாட்டில் இருந்து ஆயுதங்கள் கொண்டு வரப்படுவதைத் தடுத்து நிறுத்தும் சக்தி அவரின் படைகளுக்குக் கிடையாது.

இச்சிறிய தீவின் அரசியல் ஒருமைப்பாட்டை பெரிய வல்லரசுகளுடன் இணைப்பது ஆபத்தானதாக இருந்தது.

பெரிய வல்லரசுகளுக்கு நிரந்தர நண்பர்கள் கிடையா; நிரந்தர நலன்கள்தான் இருந்தன.

இரண்டாவது, தமிழ் நாடு அரசியல், இனப் பேரினவாதம் ஆகியவற்றுக்குப் பலியாவதிலும் பார்க்க இந்தியாவின் கவனிப்பில் இலங்கையை வைப்பதையே ஜனாதிபதி விரும்பினார்.

இலங்கை இனப்பிரச்சினையைப் பாவித்துத் தங்களுடைய பிரிவினை இலட்சியங்களை வளர்த்துக்கொள்வதில் தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் ஈடுபட்டுவந்தனர்.

சில சந்தர்ப்பங்களில் வழிதவறி நடந்தாலும் இந்தியா ஒரு பிராந்திய வல்லரசு.

அணிசேரா இயக்கம், காமன்வெல்த் அமைப்பு, சார்க் அமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர் என்ற முறையில் பொறுப்பாகப் பணி புரிய வேண்டிய சர்வதேசக் கடப்பாடு இந்தியாவுக்கு உண்டு.

தமிழ் நாட்டுக்கு அப்படியான ஒரு பொறுப்பும் இல்லை. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தென் இந்தியாவில் இருந்த பண்டைக்கால ராஜாக்கள் மாதிரி தமிழ்நாடு தலையிட்டு வந்தது.

மூன்றாவது, ராஜீவ் காந்தி முன்னர் சொன்னது போன்று இலங்கையின் ஒருமைப்பாட்டில் இந்தியாவுக்கு தனி அக்கறை உண்டு.

இலங்கையைப் பிரிப்பதற்கு இந்தியா மறைமுகமாக உதவுவது இந்தியாவை இனரீதியாக மொழிரீதியாகப் பிரிக்கும் எண்ணத்தையே வளர்க்கும்.

நான்காவது, இந்த மாதம் 81 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் உள்ளுணர்வு இளம் காந்தியை நம்புகின்றது.

திருமதி பண்டாரநாயக்காவின் தமக்கை போன்று நடந்து கொண்ட திருமதி இந்திரா காந்தியிலும் பார்க்க மகன் வேறுவிதமான ஆளுமை கொண்டவர் என்று திரு. ஜெயவர்த்தன உணருகின்றார்.

அப்படி என்றால் இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விடுமா?

மத்திய கிழக்கின் சரித்திரம் எமக்குத் தெரிந்ததே. ஆகவே இப்படியான பிரச்சினைகளுக்கு நிரந்தரத்தீர்வு காணப்படும் என்ற உத்தரவாதம் இல்லை

பிரச்சினைகளுக்கு அப்படித் தீர்வு கண்டுவிட முடியாது.

ஆனால் பிரச்சினையின் குணத்தையும் தீவிரத்தையும் மாற்ற முடியும்.

இதைத்தான் திரு. ஜெயவர்த்தன அடைந்து இருக்கின்றார்.

ஆபத்து முன்னே உள்ளது. வடக்குடன் கிழக்கை இணைப்பதா என்பதை அறியும் சர்வசனவாக்கெடுப்புக்கு ஒப்பந்தம் வழி செய்கின்றது.

கிழக்கில் மூன்றில் ஒரு பங்கு தமிழர். ஏனையோர் முஸ்லிமும், சிங்களவருமே.

முடிவு 'இல்லை' என்று வந்தால் (அப்படித்தான் வரலாம் என்று சொல்லப்படுகின்றது) போராளித் தமிழர்கள் அமைதியாக அதை ஏற்றுக் கொள்வார்களா?

மீண்டும் ஒரு தரம் வன்செயலில் ஈடுபட அவர்கள் முயற்சிக்கும் நிலை உண்டு.

தமிழ்நாட்டில் இருந்து ஆயுதம் கிடைக்காத பட்சத்தில் அம்முயற்சி சரிவராது.

இதனால் இலங்கையில் இந்தியத் துருப்புக்கள் இருப்பதும் இந்தியக் கடற்படையில் தங்கியிருப்பதும் நீண்டு கொண்டே போகும்.

வெளிநாட்டு இராணுவம் ஒன்று இலங்கையில் நீடித்திருப்பது சிங்களவர்களுக்கு மிதவாதத் தமிழர்களுக்கும்கூட மனப்பயத்தை உண்டாக்கும்.

திருமதி பண்டாரநாயக்காவும் மக்களைத் திரட்ட இதனைப் பயன்படுத்துவார்.

கணவனைப் போன்று இவரும் அதிகாரத்தைப் பெற இனப்பிரச்சினையைப் பயன்படுத்தத் தயங்கமாட்டார்

**- தமிழில்: தீபன்ராஜா -**

இந்தியாவுக்கு இலங்கையை விற்றுவிட்டது என்று கூறி நிலைமையைப் பயன்படுத்த அவர்கள் முயற்சித்தனர்.

அந்த நடவடிக்கை சிங்களவர் மத்தியில் கலவரத்தை ஏற்படுத்தியது. அவசரகாலச்சட்ட நடவடிக்கைகள் மூலம் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதாயிற்று. இன்னும் புரை ஓடிக் கொண்டிருக்கின்றது.

ஒப்பந்தம் பற்றி அறிவிக்கப்பட்டவுடன் ஜெயவர்த்தனவின் கட்சிக்குள் கருத்து வேற்றுமை உருவானது.

எதிர்க்கும் அமைச்சர்களின் ராஜினாமாக்களை ஏற்கத் தயார் என்று ஜனாதிபதி அறிவித்தார். ஒருவரும் அப்படிச் செய்ய முன் வரவில்லை.

அப்படிச் செய்வது என்றால் திருமதி பண்டாரநாயக்காவுக்கு ஆதரவளிப்பதுதான் ஒரே ஒரு மாற்று வழி.

அரசியல் வனாந்திரத்துக்கு திருமதி பண்டாரநாயக்காவை அனுப்பிய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அது கசப்பாக இருக்கும்.

எதிர்ப்புக்கு ஒரு காரணம் 'முடிந்த காரியம்' என்ற விதமாக ஜெயவர்த்தன நடந்து கொண்டதுதான்.

50 ஆண்டு கால ஜனநாயக பாரம்பரியம்



ராஜீவ்காந்தி

இலங்கைக்கு உண்டு.

விவாதம் முடிவின்றி முடிந்தாலும் பேச்சுக்களை நடத்துவதை இலங்கையர் விரும்புவர்.

நீண்ட காலத்துக்கு ஜெயவர்த்தனவினால் பொறுத்திருக்க முடியாது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் திம்புவில் பேச்சுக்கள் நடத்தத் தமிழர் முன் வந்தனர்.

அப்போது திரு. ஜெயவர்த்தனவை நான் சந்தித்து 'நீங்கள் காட்டும் பெருந்தன்மையில் தான் திம்புப் பேச்சுக்களின் பெறுபேறு தங்கியுள்ளது'— என்று கூறினேன்.

வழமை போன்று ஒரு நிமிடம் அவர் சிந்தித்தார்.

ஜெயவர்த்தன சொன்னார்: இப்போது நான் வயது போனவன். இந்த பயங்கர மோதலை சரித்

(8 ஆம் பக்கம் பார்க்க)

> திரு. தார்ஸி வித்தாச்சி இலங்கையின் பிரபல பத்திரிகையாளர். 'நியூஸ்வீக்' அமெரிக்க சஞ்சிகையில் கௌரவ ஆசிரியர்களில் ஒருவராக தனது கருத்துக்களை எழுதி வருகின்றார்.
>
> '1958 இலங்கை இனக்கலவரம்' பற்றி நூல் ஒன்றை இவர் வெளியிட்டிருந்தார்.
>
> அக்கலவரத்தின் போது தமிழர் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளை அதில் அப்பட்டமாக விவரித்து இருந்தார்.
>
> அவர் எழுதிய கட்டுரையே இங்கு பிரசுரமாகின்றது.

## ஒப்பந்தம் பற்றி வித்தாச்சி

---

# இந்தியா, பாகிஸ்தானில் நடைபெறவுள்ள உலக கிண்ண கிரிக்கெட் போட்டி

நான்காவது உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகள் வெகுவிரைவில் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் நடைபெற உள்ளன.

இந்தப் போட்டியில் கலந்துகொள்ளும்நாட்டு அணிகள், போட்டி நடைபெறும் இடங்கள், போட்டியின் நடுவர்குழு ஆகியவை எல்லாம் போட்டிக்காகத் தயாராகிவருகின்றன.

சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நடைபெறும் இடமான கல்கத்தாவில், 70 லட்சம் இந்திய ரூபா செலவில் எலெக்ட்ரோனிக் முறையில் இயங்கும் பாரிய ஸ்கோர்போட் தயாரிக்கப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது.

கிரிக்கெட் செய்திகளை உடனுக்குடன் ரசிகர்களுக்குத் தெரிவிக்கும் நோக்கோடு இந்தியாவில் இருந்து பல நாடுகளுக்கு 'ஹொட்லைன்' தொலைத்தொடர்பு வசதி முறையும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ளும் எட்டு நாடுகளும் இரண்டு அணிகளில் நிரைப்படுத்தப்பட்டுள்ளன.

அணி ஏ:- இந்தியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஸிம்பாப்வே,

அணி பி:- மேற்கிந்திய தீவுகள், இங்கிலாந்து, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா.

எல்லாநாடுகளும் இன்னும் தங்கள் இறுதி அணியை இன்னும் தெரிவுசெய்து அறிவிக்கவில்லை.

ஆனால் அணிகளில் முக்கியமாக எந்த எந்த வீரர்கள் இடம்பெறுவார்கள் என்று கிரிக்கெட் ரசிகர்கள் அனுமானிக்கக்கூடியதாக இருக்கிறது

ஸிம்பாப்வே, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா தவிர்ந்த ஏனைய அணிகள் எல்லாம் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் வெற்றிபெற்று சாதனை படைத்தவை.

எனவே அவற்றுக்கிடையேயான இப்போட்டி இம்முறை மிகவும் கடுமையாகவே இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் உள்ள ஆடுகளங்கள் எல்லாம் சுழல் பந்து வீச்சாளர்களுக்கும், இடைத்தர வேகப்பந்து வீச்சாளர்களுக்குமே சாதகமானவை.

எனவே இம்முறை உலக கிண்ணம் சுழல் பந்து வீச்சாளர் கைகளிலேயே சுழலப்போகிறது. போட்டிகளின் வெற்றிகளை நிச்சயிக்கப்போகிறவர்கள் இவர்கள்தான் என்பதில் ஐயமில்லை.

### மேற்கிந்திய அணி

இருதடவை உலகக் கிண்ணப் பந்தயத்தில் வெற்றிபெற்று ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் முடிசூடா மன்னர்களாகத் திகழ்பவர்கள் மேற்கிந்திய தீவு கோஷ்டியினர்.

இந்த கோஷ்டியை பல வருட காலமாக தலைமை வகித்து பல வெற்றிகளை தேடிக்கொடுத்தவர் கிளைவ் லோயிட் இவர் ஓய்வுபெற்றபின் மேற்கிந்திய தீவுக்கோஷ்டி கிரிக்கெட் ஆட்டங்களில் அவ்வளவாக சோபிக்கவில்லை.

தற்போது மேற்கிந்தியாவுக்கு தலைமை வகிப்பவர், ஓட்டம் பெறும் இயந்திரம் என வர்ணிக்கப்படும் விவியன் றிச்சாட்ஸ். மேற்கிந்திய கோஷ்டிக்கு இம்முறை ஓட்டங்களைக் குவித்து வெற்றிப்பாதையில் இட்டுச்செல்லும் பாரிய பொறுப்பு இவர் மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

இவருக்கு உறுதுணையாக இருந்திருக்கக் கூடிய பல்துறை வீரர் மல்கம் மார்ஷல், ஆரம்பப் துடுப்பாட்ட வீரர் கோர்டன் கிரினிஜ், பந்து வீச்சாளர் ஜோல் கார்ணர், துடுப்பாட்டவீரர் லறி கோம்ஸ் ஆகியோர் இம்முறை இச்சுற்றுப் போட்டியில் ஆடாமல் தவிர்க்கப்போவது மேற்கிந்தியாவின் துரதிஷ்டமே.

ஆனாலும் டெஸ்மண்ட் ஹெயின்ஸ் டுஜோன், பென்ஜமின் போனறோர்களின் திறமை இதனை



மனீந்தர்சிங்

ஈடு செய்யப்போதுமானது எனக்கருதலாம்.

இவர்களின் சுழல்பந்து துறைக்கு பொறுப்பு றொஜர் ஹாபர். இவர் சுழல்பந்து வீச்சில் பல சாதனைகளைச் செய்தவர். இவருக்கு உதவ மைக்கல்ஹோல்டிங், வோல்ஷ் ஆகிய அதிவேக பந்து வீச்சாளர்களும், பல புதிய வீரர்களும் உள்ளனர்.

### இங்கிலாந்து

உலக தொடர் கோப்பையும், ஷார்ஜா கிண்ணத்தையும் வென்றவர்கள் இங்கிலாந்து அணி

## போட்டிகளில் வெற்றியினை நிச்சயிப்பவர்கள் யார்? யார்?

யினர். இவர்களின் அணிக்கு தலைமை வகிப்பவர் மைக்கெட்டிங். தலைமைப் பொறுப்பை ஏற்றபின் மிகவும் பொறுப்பான முறையில் ஆடி, பல வெற்றிகளை ஈட்டிக்கொடுத்தவர்.

இவருக்கு உதவியாக அணியின் உபதலைவராக கடமையாற்றுபவர் ஜோன். எம்பியூறி உலகத்தில் தற்போதுள்ள சிறந்த சுழல் பந்து வீச்சாளர் இவர். இவர் தலைமையில் சென்ற இங்கிலாந்து அணி ஷார்ஜா கிண்ணத்தை வென்றது. இவரின் அபார சுழல் பந்து வீச்சு இங்கிலாந்தின் வெற்றிக்கு எவ்வகையில் உதவப்போகிறது என்பது போட்டி ஆரம்பமான பின்புதான் எமக்குத் தெரியவரும். இவருடன் நெயில் பொஸ்டர் கிரஹாம் டில்லி போன்ற வேகப்பந்து வீச்சாளர்களும்குழுவில்உள்ளனர்.

துடுப்பெடுத்து ஆட்டக்காரர் வரிசையில் போய்க்கொட் ஓய்வு பெற்றபின் அவரின் இடத்தை பிடிக்கக்கூடியவர் என பெயர்பெற்ற ஆரம்ப ஆட்டக்காரர் [illegible] யும், அமர்க்களமாகவும் [illegible] ரொபின்சன் போன்றோரும் உள்ளனர்.

இங்கிலாந்து அணியின் சார்பில் இடக்கை துடுப்பாட்டவீரர் டேவிட் கவர் சகலகலாவல்லவன் இயல்பொத்தம், சுழல் பந்து வீச்சில் அனுபவசாலியான எட்மன்ஸ் ஆகியோர் கலந்துகொள்ளாமல்போனது அவர்களுக்கு நஷ்டமாகும்.

### பாகிஸ்தான்

'ஆஸ்திரல் ஏசிய கோப்பை' ஆட்டங்களுடன் ஆரம்பமாகி திறமையான தலைமைத்துவ வழிநடத்தலாலும், அணியின் கூட்டு முயற்சியினாலும் டெஸ்ட் போட்டிகளிலும் ஒருநாள் போட்டிகளிலும் சக்கை போடு போடும்தரமான அணிதான் பாகிஸ்தான் பட்டாளம்.

இந்த அணிக்கு தலைமை வகிப்பவர் விரைவில் பாகிஸ்தான் அரசியலில் பிரவேசம் செய்யவுள்ள இம்ரான்கான். பந்து வீச்சில் 300 விக்கெட்டுக்

**- ஈசன் -**

களையும் துடுப்பாட்டத்தில் 3ஆயிரம் ஓட்டங்களையும் பெற்ற இரட்டைச் சாதனை வீரர்களில் ஒருவர்.

இவரின் உதவியாளர் ஜாவிட் மியான்டாட். கடைசிப்பந்தில் நான்கு ஓட்டங்கள் தேவைப் பட்டபோது அந்தப்பந்தின்மூலம் ஆறு ஓட்டங்களைப் பெற்று இந்தியா [illegible] வட [illegible] மொன் [illegible] பரப்புக்கு மத்தியில் வென்றுகொடுத்தவர். தொடர்ச்சியாக எல்லாப்பந்தயங்களிலும் சராசரியாக ஓட்டங்களை குவித்துவருபவர்.

தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் மியான்டாட்டுக்கும் இடையில் சிறு சர்ச்சைகள் தோன்றியிருப்பினும் அவர் இப்போட்டிகளில் ஆடலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்களுக்கு ஆதர



ஜோன் எம்பியூறி

வாக இளம் துடுப்பெடுத் தாட்டக்காரர் சலீம் மாலிக், மன்சூர் இலாகி, ரமீஸ் ராஜா போன்றோர் துணை கொடுப்பார்கள்.

பாகிஸ்தானின் சுழல் பந்து வீச்சாளர் அப்துல் காதீர் முதல்தர சுழல் பந்து வீச்சாளர்களில் ஒருவர் அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற போட்டிகளிலும் கவாஸ்கர் அணியுடன் இடம்பெற்ற போட்டியிலும் சிறப்பாகப் பந்து வீசியவர். இந்திய—பாகிஸ்தானிய ஆடுகளங்களின் தன்மையை நன்கு உணர்ந்தவர் தன்னுடைய அனுபவத்தை பயன்படுத்தி உலகக் கிண்ணப் போட்டியில் பிரகாசிப்பார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இவரோடு டாசிவ் அகமட், வாசிம் அக்ரம் போன்றோரும் பாகிஸ்தானிய பந்து வீச்சுக்கு வலுவூட்டுவார்கள்.

### இந்திய அணி

கடந்த உலகக் கிண்ணத்தை எவரும் எதிர்பார்க்காத விதத்தில் தட்டிச் சென்றவர்கள் இந்தியர்கள். சென்ற முறை இந்தியாவுக்குக் கைகொடுத்த கபில் தேவின் தலைமையிலே இம்முறையும் சுற்றுப் போட்டியை எதிர் நோக்குகிறார்கள். கபில் தேவ் மீண்டும் தன்னுடைய சகலதுறை ஆட்டக்காரர் தகுதியை நிரூபிக்க இப்போட்டிகள் ஒரு களமாக அமையும்.

கபில்தேவுக்கு ஒத்தாசையாக கிரிக்கெட்டில் சாதனை பல படைத்து தனது கடைசிப் போட்டித் தொடரைச் சந்திக்கவுள்ளார் சுனில் கவாஸ்கர். ஆரம்ப அதிரடித்துடுப்பாட்டக்காரர் தமிழகத்தின் சிறீகாந்த் இளைய ஆட்டக்காரர் மொகமட் அசாருதீன், ரவிசாஸ்திரி போன்ற ஆட்டத்தின் போக்கைத் திசைதிருப்பும் ஆட்டக்காரர்களின் பங்களிப்பு இந்தியாவின் வெற்றிக்கு நிச்சயம் தேவை.

சுழல்பந்து வீச்சாளர்களில் முதன்மை பெறுபவர் தொப்பிக்கார மனீந்தர்சிங். பிஷன்சிங் பேடியின் பந்து வீசும் இவர் சுழல் பந்து வீச்சில் தந்திரங்கள் பல பல செய்யக் கூடியவர். இவரின் திறமை தகுந்த விதத்தில் பயன்படுத்தப் பட வேண்டும்.

### ஸ்ரீலங்கா

ஆசியக் கிண்ண சாம்பியன்களான ஸ்ரீலங்கா குழுவிற்குத் தலைமை வகிப்பவர் டியூலிப் மெண்டிஸ்.

ரோய் டயஸ், அர்சுன ரணதுங்கா, அசந்த குருசிங்கா போன்றவர்களில்



அப்துல் காதிர்

துடுப்பாட்டமும் இலங்கைக் கோஷ்டியை வலுவான நிலைக்கு எடுத்துச்செல்லக் கூடியவை.

சுழல் பந்து வீச்சாளர் தட்டுப்பாடு என்று கூறும் இலங்கையின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் கண்ணில் தமிழர்களான சிறீதரன் ஜெகநாதனும், நகுலேஸ்வரனும் தெரியாமல் போனது மாயம்தான்.

### ஆஸி அணி

முன்பெல்லாம் ஒரு நாள் போட்டிகளில் மேற்கு இந்திய கோஷ்டிக்கு இணையாக ஆடி வந்தது ஆஸ்திரேலிய அணி. தற்போது அந்த அணியில் பொறுப்பு முழுவதையும் தன் தோள்மீதே தனியே

(8 ஆம் பக்கம் பார்க்க)

விளையாட்டு மஞ்சரி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சஞ்சீவி குறுநாவல்

### அத்தியாயம் 4

உள்ளமும், உணர்வும் விழித்தாலும் விழிகள் திறந்து கொள்ள மறுத்தன. வெறுமையான இந்த உலகத்தை பார்க்கவே வெறுத்தது. உடலை இலேசாக ஒரு தரம் அசைத்துப் பார்த்தாள். புண்ணாக வலித்தது.

''ஸ்ரீரங்கனோ...... ஸ்ரீதேவியோ... வித்தியா! ஸ்ரீரங்கன் நல்ல பெயரென்ன... முதல்ல என்னுடைய சான்ஸ். பிறகு உம்மைப் போலவே அழகா ஒரு ஸ்ரீதேவி...'' — இதமாக அவள் கூந்தலை வருடிய கரங்கள்; கழுத்தைச் சுற்றிவளைக்கின்றன.'' ஓ...என்னுடைய விஜய். அவர் தான் என்னை விட்டுப்போய்விட்டாரே...'' - சுயநினைவு, கண்களைத் திறக்க வைக்கின்றது. பார்வதிதான். அவளைபரிவோடு வருடிக்கொண்டிருந்தாள் எழுந்து பார்வதியைக் கட்டியணைத்துக் கொண்டு, ஆவேசமாகக் கதற வேண்டும் போலிருந்தது.

''புள்ள! ஒளுக்கோசு ஏத்தியிருக்கினம். கையை ஆட்டாதே...'' கருச்சிதைவு உளரீதியாக மட்டுமல்ல; உடலையும் பலவீனமாக்கியிருந்தது. அவனும் அவளும் பங்கு போட்டுக் கட்டிய கனவுக்கோட்டை கரைந்து, மண் மேடாகி, சமாதியாய் வெறித்து நிற்கிறது.''ஆண்டவா! விரதமிருந்து நான் கேட்ட வாழ்க்கைஇதுதானா...?' உள்ளம் கேவிக்கொண்டு அழுதது. பார்வையை மறுபக்கம் திருப்பினாள். சாந்தி; அவளுடன் வங்கியில் ஸ்டெனோவாகக் கடமையாற்றுபவள்; நின்றுகொண்டிருந்தாள்! நிமிர்ந்து அவளை நோக்கினாள். அந்தக் கண்கள்; நினைவுபடுத்தத் துடிக்கின்ற அந்தச் சம்பவம்;

கடமை முடிந்து, ஷொப்பிங் புறப்பட்ட வித்தியாவுக்கு, துணையாக, சாந்தியும் சென்றாள். வித்தியா, தனக்கொரு சேலையும், அதே நிறத்துக்குப் பொருத்தமாக விஜயனுக்கும் காற்சட்டை, சேர்ட் துணி வாங்கினாள்.

''என்ன வித்தியா புடைவை விஷயத்திலும் உம்மோட மெட்ஜ் பண்ண வேணும் என்று பார்க்கிறீரோ......''

''புடைவையிலென்ன... என்னுடைய அழகு, உயரம், குணம் எல்லாவற்றிலுமே பொருத்தமானவர் தான்...'' — அவனோடு பெருமையாக வாழ்ந்த நாட்கள்; ''வித்தியா! எப்பவுமே உம்முடைய செலக்ஷன் சோடை போனதில்லை...'' அவளுடைய மறைமுகமான கிண்டலை ரசித்துச் சிரித்த அந்த சம்பவம்; இதயத்தை நெருடியது.

துர்க்கையம்மன் கோவில் திருவிழாவில், பட்டுவேட்டிக்குப் பொருத்தமாக, மஞ்சள் நிறசாரியுடன், அவனுடைய தோள்களைப் பற்றியவாறு, மோட்டார் சைக்கிளில், அவர்களையே உள்ளூர ரசித்துக்கொண்டிருந்த,அந்த சனங்களுக்கு மத்தியில், பெருமையாகப் பவனி வந்த நாட்கள்; அவனுடைய மார்பில் முகம் புதைத்து, அவன் அழகையே அள்ளிப்பருக வேண்டும் என்ற துடிப்புடன், ஏங்கி நின்ற நாட்கள்; பக்கவாட்டில் சீவியிருக்கும் அவன் தலைமயிரைக் கோதி, விரல்களால் சுருட்டி அழகு பார்த்தநாட்கள்; குழி விழும் அந்தச் கன்னங்களின் மேல், விரலினால் கோலம் போட்டு ரசித்த நாட்கள்;ரசித்த அந்த செவ்விதழுக்கு அழகாக, கடுமையான கருநிறத்தில் முட்களாகவிருக்கும் மீசையை தொட்டு, ஆவலைத் தீர்த்துக்கொண்ட நாட்கள்;

அந்த ஆசைகள், கனவுகள் செத்தால் தானே, மனம் சாந்தியடைய முடியும். 'வித்தியா! இப்போது அன்றாடமாகி விட்ட அகால மரணங்கள், அவலங்கள் இவற்றைத் தாங்கித்தான் வாழ வேண்டும்...'

சூழ்நிலைகள், காலங்களுக்கேற்ப பக்குவமடையாத மனம், பரிதவித்துக் கொண்டிருந்தது.

புழுவாய்த் துடித்துக் கொண்டிருக்கும் வித்தியாவின் அவலம் பார்வதியின் தொண்டையை அடைத்தது. அனுபவித்து வாழ வேண்டிய வயதில், வாழ்விழந்து நிற்கிறாள். வித்தியாவிடம் விடைபெற்றுக் கொண்டு, நடையை விரைவுபடுத்தினாள் பார்வதி. மத்தியானபஸ்ஸில் ஜெகன் மட்டக்களப்பிற்குப் போகின்றான். அவனுக்குச் சாப்பாடு சமைத்துக் கொடுக்க வேண்டும். இவ்வளவு நாளும் அவனிருந்தது பார்வதிக்குத் தெம்பாக இருந்தது. அவனும் போய்விட்டால்...! தனியாக இருந்து, புலம்பிக் கொண்டிருப்பாள். காற்றின் அசைவில் படபடத்துக் கொண்டிருக்கும் படலையைப் பார்ப்பாள். தீபனின் ஞாபகம் வந்துவிடும். அவனை டியூசனுக்கு அனுப்பிவிட்டு காத்திருந்த இரவுகள்; அவன் சாதாரணதரப் பரீட்சையில் விசேட சித்திகளுடன் தேறிய போது, அவனுடைய எதிர்காலத்தைப் பற்றி எத்தனை கனவுக் கோட்டைகளை வளர்த்திருப்பாள். சிறுவயதில் அவள் எந்த வேலைக்குச் சென்றாலும், அவளுடைய சேலைத்தலைப்புடனேயே சுற்றுவான். குடும்பத்தில் மற்றைய குழந்தைகளை விட கடைசிக் குழந்தைக்குத்தான், தாயின் அரவணைப்பு முழுமையாகக் கிடைக்கின்றது. பத்து, பன்னிரண்டு வயதுவரை அவளுடனேயே படுத்துறங்கி வளர்ந்தவன் இப்போது எந்தக் காடு, மேடுகளில் அலைந்து திரிகின்றானோ? இவ்வளவு காலமும் கஷ்டப்பட்டது. இந்த வாழ்வுக்குத்தானா...? இனித்தான் தன்னுடைய வாழ்வில், நிம்மதி வரும்; சாந்தி தரும்; என்றிருந்தவளுக்கு இனிச் சாகும் வரை அவளுடைய மனம் சாந்தியடையாது போலிருந்தது. இவ்வளவையும் கண்டபின் இனியும் இந்த வாழ்வு அவசியந்தானா...?

'அம்மா! இடமாற்றத்துக்கு விண்ணப்பித்திருக்கிறன். அடுத்த வருடத்தோட கிடைக்குமென்று நினைக்கிறன்...'— தாயாருக்கு ஆறுதல் கூறிவிட்டு ஜெகனும் புறப்பட்டு விட்டான்.

வித்தியாவும் ஆஸ்பத்திரியிலிருந்து வந்து ஒரு வாரமாகி விட்டது.

பார்வதிக்கு அன்றுட கடமைகளுடன் பொழுதும் போய்விடும். வித்தியாவும் வேலைக்குச் சென்றுவர ஆரம்பித்தாள். காலமும், கடமையும் துயரங்களிலிருந்து அவர்களைப் பக்குவப்படுத்தியிருந்தது, இப்போது அவளின்மேல் பார்வதியின் அன்பும் அக்கறையும் பன்மடங்கு அதிகரித்திருப்பது போலிருந்தது. காலையில் அவள் குளிப்பதற்கு தொட்டியை நிரப்பி விடுவதுமுதல், சாப்பாடு செய்து, அலுவலத்திற்கு அவளை அனுப்புவதுவரை பார்வதியே கவனித்தாள். பார்வதியின் பரிவும் பாசமும் வித்தியாவுக்கு ஆறுதலையளித்தன.

'அம்மா! நீயும் எனக்கொரு மகள் மாதிரி. எனக்கும் உன்னைப்போல் ஒரு மகளிருந்து அவளும் உன்னுடைய நிலையிலிருந்தால், அவளை விட்டு விடுவேனா? அதைப் போல நீயும் எனக்கொரு மகள் மாதிரி'— பார்வதி அடிக்கடி கூறிக்கொள்வாள்.

அன்றும் கடமையிலிருந்து வந்தவள்,தேநீரை அருந்திவிட்டுக் கட்டிலில் சாய்ந்தாள். வித்தியாவினுடைய தாயாரும் மாமாவும் வந்தார்கள். ஆஸ்பத்திரியில் அவளைப் பார்த்துவிட்டுச் சென்றபின், இன்றுதான் மீண்டும் சந்திக்கின்றார்கள். விஜயனின் மரணச்சடங்கிற்குக்கூட வராதவர்கள் வீடு தேடி வந்தது ஆச்சரியமாகவிருந்தது. மீண்டும் அவள் தங்களுடைய நிழலையே தேடி வருவாள் என்ற எதிர்பார்ப்புக் கைகூடாததால், அவளை அழைத்துச் செல்ல வந்திருக்கிறார்கள்.

'வித்தியா! இந்த வயசில இப்பிடியே இன்னும் எத்தனை காலத்துக்குத் தான் வாழப் போகின்றாய்?'

'அதற்கென்னம்மா? இனி வாழ்ந்துதானே தீர வேண்டும்'

'வித்தியா! நடந்தவைகளை மறந்துவிடு, திரும்பவும் நீ எங்களோடு வந்து வாழ வேண்டும்! உன்னை மீண்டும் அழைத்துச் செல்லத்தான் வந்திருக்கிறோம்...' - அவளுடைய மாமா தான் பேசினார்.

'நடந்தவைகளை மறந்துவிடு' அந்த வசனத்தின் அர்த்தத்தை விரிவுபடுத்திப் பார்த்தாள். உயிருக்குயிராக காதலித்து மணமுடித்தவனை உறவிலும் உணர்விலும் கலந்து, உதிரத்தில் வளர்ந்து, கரைந்துவிட்ட காதல் சின்னத்தை மறந்துவிடு!

'மாமா! உங்களுடைய உறவு முறைகளைத் துறந்து, அவரையே உலகமாக அந்த உறவொன்றையே நம்பி வந்தேன். இப்பவும் அந்த உறவோடு தான் வாழப் போகின்றேன்...'

'வித்தியா! நீ எங்களுடைய வீட்டுக்கு வரத் தேவையில்லை; உன்னுடைய சகோதரங்களோட நீயும் வெளிநாட்டுக்குப் போ...'

தாயன்பு சுயநலமிக்கது. அது எப்படியும் தன்னுடைய பிள்ளையையே பாதுகாக்க நினைக்கின்றது. முதலில் அந்த உறவிலிருந்து அவளை மீட்டெடுத்து, தங்களோடு இணைத்துக் கொண்டால்... அவனோடு வாழ்ந்தது, என்ற சுவடே தெரியாமல் அவளுடைய வாழ்க்கையைத் திசைதிருப்பி, இன்னொரு புதுவாழ்வுக்கு அவளைத் தயார்ப்படுத்திவிடத் துடித்துக் கொண்ருந்தாள் அவள் தாய்.

வித்தியா பிடிவாதமாகவே மறுத்து விட்டாள். அவர்கள் சென்றபின், அமைதியாக இருந்த அவளிடம் பார்வதி கேட்டாள்.

'வித்தியா! உன்னுடைய முடிவுதான் என்ன?...'

'மாமி! அவருடைய நினைவுகளோடு இனி வாழப் போகின்றேன். அந்த நினைவுகளைத் தரும் இந்த வீட்டிலேயே வாழப் போகின்றேன்; அவரைப் பெற்றுத் தந்த உங்களோடு வாழப் போகின்றேன்...'

—வித்தியாவின் உள்ளம், உணர்ச்சியில் அலைபாய்ந்தது.



### மேற்கில் தோன்றும் உதயம்

### அத்தியாயம் 5

காலையில் வழக்கமான வேலைகளை முடித்த பின் கிணற்றடியில் ஊற வைத்திருந்த ஓலைகளைப் பின்ன ஆரம்பித்தாள் பார்வதி. வித்தியா வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். கைகள் தான் பின்னிக் கொண்டிருந்ததே தவிர அவள் மனம், அந்தப் பின்னலுக்கு வழிதேடிக் கொண்டிருந்தது.

முன்னையதைப் போல், இப்போது கந்தப்பு மாஸ்டர் பார்வதியின் வீட்டிற்கு வருவதில்லை. நடக்க முடியாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தார். அடிக்கடி பார்வதிதான், அவரைச் சென்று பார்த்தாள். வசதி கிடைக்கும்போது, தனது வீட்டிலிருந்து உணவும் எடுத்துச் செல்வாள். பார்வதியின் செயலைக்கண்டு, உண்மையிலே மனம் நெகிழ்ந்து போனார் கந்தப்பு மாஸ்டர்.

'பார்வதி! பெத்த பிள்ளைகளும் இப்ப கண்காணாத தேசத்தில வாழுதுகள். நீ ஒரு ஆள் தான் இப்ப சொந்தமென்று இருக்கிறாய்'

'மாஸ்டர் இந்த உலகத்தில ஒருவருமே சொந்தமில்லை! தனியாகவே வந்தனாங்கள். தனியாகவே போய்ச்சேர வேணும்...'

அடிபட்டு நொந்த வாழ்க்கையின் விரக்தியான அனுபவங்கள்; தத்துவங்களாக உதிர்ந்தன. வறுமையில் வாடிக் கொண்டிருந்தபோது, வறுமைகள்தான் வாழ்க்கைத் துன்பத்திற்கு, காரணமென்றிருந்தாள், அந்த வறுமையை திட்டமிடப்பட்ட தன்னுடைய அயராத உழைப்பினால் துடைத்தெறிந்த போதும், துன்பம் தொடர்கின்றது. இதனைத்தான் பூர்வஜென்ம பலன் என்கிறீர்களோ?

''பார்வதி! ரெண்டாவது மகனுடைய அலுவலையும் முடித்துவிடன். ஏன் அநாவசியமாக காலத்தை வீணாக்குவான்...''

அவளுக்கு அழுகை பொத்திக்கொண்டு வந்தது. மூத்த மகனுடைய நினைவு, நெஞ்சில் குமிழிட்டது. ஆரம்பத்தில் மூன்று பிள்ளைகளுடனும் வறுமைத் துன்பத்தில் உழன்றபோது, அந்த போராட்டத்தில், கூடுதலாக அவளுடன் தோள் நின்றவன்விஜயன்தான், அதற்காகத்தான்,அவன் வங்கியில் வேலைகிடைத்ததும்,தன்னுடைய சேமிப்புப்பணத்திலேயே அவனுக்கு மோட்டார் சைக்கிள் வாங்கிக்கொடுத்தாள். இவ்வளவு காலமும் கஷ்டப்பட்டவன் இனியாவது சந்தோஷமாக வாழ வேண்டும் என விரும்பினாள். ஒரு பிள்ளையின் திருமணம் வரையுந்தான், ஒரு தாயின் கடமையென்பார்கள். ஆனால் அவளைப்பொறுத்தளவில், அந்தக்கடமை, அவனுடைய சாவையும் கண்டு விட்டது. அவனுடைய அலுவலையும் முடித்துவிட்டாள். இனி எதனைத் தான் காண வேண்டும்?

**- அநுராசன் மகன் -**

'இப்ப எந்தவொன்றையும் ஆராய நேரமில்லை மாஸ்டர்'

''உப்பிடிச்சொல்லாதை பார்வதி. நேற்றும் என்னை ஒரு ஆள் வந்து கேட்டார். உன்னுடைய சம்மதத்தைச் சொல்லு மிச்சத்தை நான் கவனிக்கிறன்.

''என்னுடைய சம்மதம் என்னத்திற்கு மாஸ்டர். ஜெகன் ஓமென்றால் எல்லாம் சரி தான்...''

'அதுசரி! பார்வதி வித்தியாவ நீயே வைச்சுக்கொண்டு என்ன செய்யப்போறாய்...'

'ஏன் மாஸ்டர் அப்படிக் கேட்கிறீர்கள். அவளும் என்னுடைய மகள் மாதிரி, என்னோடேயே இருக்கப்போறாளாம்...'

'உன்னுடைய மகளாக இருந்தால்... உப்பிடியே வைச்சுக்கொண்டிருப்பியே...' அவளுடைய குழந்தைத்தனமான பதிலுக்குக் கிடைத்த, சீரியஸான பதிலடியை எதிர்பார்க்கவேயில்லை.

'பார்வதி! உன்னைநம்பி எவ்வளவு காலத்துக்குத் தான் அவள் வாழப் போகின்றாள்...?'

இப்போதுதான் அந்தப்பிரச்சினையை ஆழமாகப் பார்க்கிறாள். பிரச்சினையின் ஆழம் புரிந்ததே தவிர; அதற்கான தீர்வுதான் அவளுக்குப் புரியவில்லை. அவளால் என்ன செய்யமுடியும்? வித்தியாவுக்கு என்னத்தைக் கூறமுடியும்? அவளோ தன்னுடைய உறவினர்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு, உங்களோடு வாழப்போகின்றேன் என்கிறாள். இந்த நிலையில் அவளுடைய உறவினர்களுடன் சேர்ந்து வாழும்படி கூறவும் மனந்துணியவில்லை. எங்களையே நம்பி வந்தவள் சரி எங்களோடு வாழ்ந்து விட்டுப்போகட்டும் என்றால் அவளுடைய எதிர்காலம்? மனம் குழம்பிப் போனாள் பார்வதி.

'பார்வதி! நீயே அவளுக்குத் தாயாகவிருந்து மறுமணம் செய்துவை' பார்வதிக்கு கண்ணும் கலங்கி சிரிப்பும் வந்துவிட்டது. இலகுவாகவொரு தீர்வை கூறிவிடலாம். அதனை எப்படிச் செயற்படுத்த முடியும்? இந்த நிலையில் அவளை மறுமணம் செய்ய யார் தான் முன்வருவார்கள்? விஜயன் இறந்தபோதே ஊர்பலவாறாகக் கதைக்கத் தொடங்கிவிட்டது.

'கலியாணம்; பொருத்தம் பார்த்தே செய்தது. உவளுக்குத் தாலிப் பொருத்தமில்லை. அதுதான் அவனையும் கொன்று போட்டுது...' ஆனால் அதனைப்பற்றி, பார்வதி அவ்வளவாக அலட்டிக் கொள்ளவில்லை. இறந்தவனுக்கு மரண விசாரணை நடத்தி உயிரோடு இருப்பவளுக்கு ஏன் மரண தண்டனை வழங்கவேண்டும்? அர்த்தமற்ற போலிக் காரணங்களைச் சுட்டிக் காட்டி அவளைத் துன்புறுத்துவதை விஜயனுடைய ஆத்மாவோ அல்லது அவளுள் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்ற பரிசுத்தமான தாய்மையன்போ இடங்கொடுக்காது! அவளுடைய களங்கத்தைப்போக்க யாரால்முடியும்? உணர்ச்சிக்கொதிப்பில் கண்கள் பனித்தாலும், உள் மனம் அந்த முடிவினை எண்ணிச் சிரித்தது.

இருள் நன்றாகவே கவிழ்ந்து விட்டது. எழுந்து பின்னிய கிடுகுகளை ஒவ்வொரு மட்டையாக மாறி மாறி அடுக்கினாள் முகம் கழுவி சுவாமி தரிசனத்தை முடித்துக் கொண்டு கூடத்துக்கு வந்தாள். பார்வதி, வித்தியா ஏதோ அலுவலக வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். விளக்கின் ஒளியில் அந்த முகம் பௌர்ணமியாக ஒளிர்ந்துகொண்டிருந்தது. நெற்றியில் எந்நேரமும் தவழ்ந்திருக்கின்ற விபூதிப்பூச்சில்; ஒரு பிரகாசம் தெரிந்தது. விதவையானாலும் இந்த வயதில் தனி வெள்ளை நிற சாறியுடனும்,விபூதிப்பூச்சுடனும் அலுவலகத்திற்குச் சென்றுவர எந்தப்பெண்ணால் தான் முடியும்? 'வித்தியா! வேற ஏதும் பிளேய்ன் சாறிகளைக் கட்டலாம்தானே...'

'மாமி! வங்கியில் எத்தனையோ ஆண்களோட பழகவேண்டிருக்கு. நாங்கள் பரிசுத்தமாக வாழ வேண்டுமென்றால் எங்களைப்பற்றி மற்றவர்கள் கொண்டிருக்கின்ற புரிந்துணர்வும் தாய்மையாயிருக்க வேணும். எங்களுடைய உடை நடத்தையிலும்தான். மற்றவர்களுடைய கண்ணோட்டம் தங்கியிருக்கு. ஆகவே எங்களுடைய உடை நடத்தையிலிருந்துதான் மற்றவர்கள் எங்களைப்பற்றி புரிந்து கொள்ளமுடியும்''

அவளுடைய உபதேசத்தைக் கேட்டு, பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் பார்வதி. இந்த வயதில் முதிர்ச்சியடைந்த அவள் மனோ பக்குவம்!

'வித்தியா...' குரல் கேட்டுத் திரும்பினாள். 'இப்பிடியே இருந்து என்னம்மா செய்யப் போறா...'

'ஏன் மாமி! உங்களுக்குப் பாரமாயிருக்கிறன் என்று நினைக்கிறீர்களா...?

'அப்படியில்ல வித்தியா. என்னுடைய வாழ்க்கையும் எவ்வளவு காலத்துக்கோ? உன்னுடைய எதிர்காலத்திற்கொரு பாதுகாப்பு வேணுமா?

'என்னைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய மனோபலம் எனக்கிருக்கு...' வெடுக்கென அந்தப் பிடிவாதம், சிறிக் கொண்டாலும், நிதானமாக, அமைதியாகப் பதிலளித்தாள் வித்தியா.

'மாமி! உங்களுக்குப் பிறகு என்னுடைய வாழ்க்கையைத் தீர்மானிக்க எனக்குத் தெரியும்...'


அதற்குப்பின், ஆராய்ந்து பகுத்து அடுத்த கேள்வி கேட்கக்கூடிய அறிவு, பார்வதிக்கு இல்லை. அந்தப் பதிலோடு அமைதியானாள்.

சமூகம், ஒவ்வொரு பெண்ணையும் ஒரு சுமையாகவே' கருதிக்கொண்டிருக்கிறது. அவளுக்கொரு துணை வேண்டும்! பாதுகாப்பு வேண்டும்; என்ற ரீதியில் சோடி சேர்க்கத் துடிக்கின்றது. திருமணமொன்றே அதனைப் பூர்த்தி செய்யக் கூடியது! என்ற வகையில் ஒரு பெண்ணுக்குத் திருமணமும் அத்தியாவசியமாகி விட்டது. அதற்குத் தடையாக எழுதவிட்ட சீதனச் சுவர், ஒவ்வொரு பெண்ணையும், சுமையாகக் கருத வைத்து விட்டது.

எவனைக் காதலித்து, கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து வாழ நினைத்தாளோ... அதே மனம்; இன்னும் உறுதியாகவே இருந்தது. துன்பங்களினால்தான், மனம் பலமடைகின்றது. முன்னரைவிட, அது இப்போது அவளை உறுதியாக்கியிருந்தது.

(தொடரும்)

## முயன்று பாருங்கள்



**இடமிருந்து வலம்**
1. இது ஓர் ஊர்.
4. காவலாளி (குழம்பி வருகிறது)
7. சிவபெருமானின் மகன் (குழம்பி வருகிறது)
9. சம்மதத்தை இப்படித் தெரிவிக்கலாம்.
10. பிரணவ மந்திரம்

**மேலிருந்து கீழ்**
1. ஆலய மகோற்சவத்தில் கடைசித் திருவிழா.
2. இது ரீங்காரம் செய்யும் மினு மினுப்பாயுமிருக்கும். (தலைகீழாயுள்ளது)
3. வடக்குத் [illegible].
5. இது வந்தால் பத்தும் பறந்து விடும்.
6. இதனுடன் ''ப'' சேர்ந்தால் தான் பலன் கிடைக்கும்.
7. காடு
8. அம்பு

முன்னைய ரஞ்சீவியில் (29. 8. 87) பிரசுரமான ''முயன்று பாருங்கள்'' பகுதிக்கான விடைகள்.

**இடமிருந்து வலம்**
1. சரவணபவ
5. ரசம்
6. காவல்
7. வத்தி
8. வெண்ணிலா
10. நளினம்

**மேலிருந்து கீழ்**
1. சங்காரம்
2. வயல்வெளி
3. பரவணி
4. [illegible]
5. [illegible]
6. காரம்
8. [illegible]
9. நண்டு

## காலை வெட்டிய கதை

ஒரு நாள் மாலைப் பொழுது மன்னரும் படைத்தளபதியும் மற்றும் சில முக்கிய படைவீரர்களும் கலந்துரையாடிக் கொண்டிருந்தனர்.

தளபதியும் மற்றவரும் தங்களின் சாகசச் செயல்களைச் சொல்லி தம்பட்டம் அடித்துக் கொண்டனர்.

'அரசே, ஒருமுறை எதிரியின் படையே நானும், எனது சில படைவீரர்கள் மட்டுமே சேர்ந்து எதிர்த்துப் போராடி வெற்றி கண்டேன்' என்று படைத் தளபதி தனது போர் திறமையைப்பற்றி பெருமையடித்துக் கொண்டார்.

அதைக் கேட்ட குதிரைப் படைத் தளபதி 'மன்னாதி மன்னா, ஒரு முறை எதிரியின் யானைப் படையுடன் நான் மட்டுமே தனியே அகப்பட்டுக் கொண்டேன். என்றாலும் மனம் கலங்காது யானையின் மீதிருந்தே படைவீரர்கள் பலரின் தலையை எனது வாளால் வெட்டி, அந்த யானையிலேயே வெற்றியுடன் திரும்பியுள்ளேன்' என்று தனது சிறப்பை மிகவும் பெருமிதமாய்க் கூறி முடித்தார்.

இப்படிப் படைத் தளபதிகள் நம்பமுடியாதவற்றைத்தங்கள் சாதனைகளாகக் கூறக்கேட்ட, மன்னரின் உடன் இருந்த தெனாலிராமன் ஒரு திட்டம் தீட்டினான். வைரத்தை வைரத்தாலே தான் அறுக்க வேண்டும். இவர்கள் கூறும் நம்ப

தயாரிப்பு:-
**'ஸ்ரீ'**

முடியாத செய்திகளைப் போல தானும் ஓர் நம்பமுடியாத செய்தியைச் சாதனையாகக் கூற முற்பட்டான்.

'வேந்தருக்கும் வேந்தே! வணக்கம். இவர்கள் எல்லாம் அவர்களின் போர்த் திறமைகளைச் சொன்னார்கள். நானும் எனது வீர சாகசத்தைக் கூறுகிறேன் கேளுங்கள்' என தெனா

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைக் கதம்பம்

### இதுவுமொரு அதிசயம்தான்

துப்பாக்கி வேட்டுகளைக் கேட்டுக் கேட்டு
துடித்தெழுந்த பகலவனுர் கிழக்குவானில்
இப்போதுதான் சேவல் சத்தம் கேட்டு
எழும்புகிருர் இதுவுமொரு அதிசயம்தான்!
பகலவனுர் மட்டுமல்ல இந்தமண்ணில்
பறப்பதற்கு இயலாமல் பதுங்கி வாழ்ந்த
வடபுலத்தார், கிழக்கிலங்கை
நாட்டாரெல்லாம்
விடியல்கண்டு எழும்புவதும் அதிசயம்தான்!
குயில்பாடும் பாடலினைக் கேட்டதுண்டா!
கோவில்மணி ஓசைகாதில் விழுந்ததுண்டா!
வயிருர உண்டு பசியாறியில்லாள்
வார்த்தைகளைக்கேட்டுமனம்மகிழ்ந்ததுண்டா!
நிம்மதியாய் முற்றத்தில்படுத்து, வானில்
நீந்திவரும் வெண்ணிலவை அருகழைத்து
செந்தமிழில் தித்திக்கக் கவிதைபாடி
சிரித்திருக்கக் கொடியவர்கள் விட்டதுண்டா!
வேலிவெட்டி மதிலுடைத்து விசர்நாய்போலே
வீழ்ந்துருள வெடிவைத்து தமிழர் நெஞ்சை
கீறிவிட்ட கிழோரின் செய்கை கண்டு
கிளர்ந்தெழவும் முடியாமல் கிடந்தோமே நாம்!
உள்ளவர்கள் ஒளிந்தோட உரிமைப்போரில்
உயிர்கொண்டு வாழ்ந்தவர் நாம் இன்றுதானே
மெல்லமெல்ல விழிதிறந்து விடிவைப் பார்த்து
மெய்சிலிர்த்து நிற்கின்ருேம் வியப்புத்தானே!
காலூன்றி இம்மண்ணில் நிற்போம்! நாளை
கனவுகளை மெய்ப்பித்து வாழ்வோம்! தோழர்
பாலூற்றி எம்வாழ்வை மலரச் செய்வார்
பைந்தமிழின் மணமெங்கும் பரவிவீசும்!

— செ. குணரத்தினம் —

### இல்லற வேள்வி

அவள்
அவனை நினைத்தவுடன்
பூப்பெய்தி விட்டாள்!
அவன்
அவளை நினைத்தவுடன்
பூக் கொய்து விட்டான்!
மனதும், மனதும்
மானசிகமாகத் தழுவிக் கொண்டன.
அந்த
மௌன வேள்வியில்
மானிடம் சிலிர்த்தது!

அவள்
பெரியவள் ஆனதே,
அவனுக்கு
உரியவளாகத் தானே;
என்கிருர்கள்.

நான் சொல்கிறேன்:-
அவனுக்கே
உரியவள் என்பதால்தான்,
அவள்
பெரியவளே ஆனுள்;
என்று.

அடிக்கடி இருவரும்
உதடுகளுக்கு வலியெடுத்தபோது
ஒன்றில் ஒன்றை
உட்கார வைத்துக் கொண்டார்கள்.
கண்கள் சந்திக்கும் போதெல்லாம்
உயர்—
காவியங்கள் பிறந்து
கொண்டிருந்தன.
உயிர் கலந்து விட்ட
அவர்கள் இருவரும்
ஒருநாள்
உடல் கலந்து விட்டபோது,
உருவான அற்புதம் தான்
''இல்லறம்'' ஆயிற்று.
இரு—
இதயங்கள் ஒன்ருனதால்
அந்த
இல்லறம் நன்ருனது!

அவள்
வயிற்றிற் கரு முகிழ்த்தபோது,
தாலிக்—
கயிற்றில் முகம் பதிந்தது.
அதைக்—
கட்டியவன் தானே,
இதை வயிற்றில்
கொட்டியவன் என்று
குதூகலித்துக், குதூகலித்தே
அவள் மீண்டும்
குமரியாகி விட்டாள்!
அவனைப் பார்த்தவாறே
அவள் நினைத்தாள்:-
அடடா!
,'அசல்'' என் எதிரிலே.
அதன்
''நகல்'' என் வயிற்றிலே!
என்று.
தாலி
கட்டிய மழலையும்,
கருவிற்
கிட்டிய மழலையும்;

ஓ!
இப்போது அவளுக்கு
இரு மழலைகள்!

நெஞ்சங் கலந்த
இல்லறத்தில்
ஒரு
வஞ்சங் கலக்க
வாய்ப்பி(ல்)லையே.
இவர்
மஞ்சங் கலக்கும்
நாளெல்லாம்
மனம்
விண்ணில் ஏறி
விளையாடும்!
கவிதை
என்னில் ஆயிரம்
தூளை போடும்!

- ஜெ. கி. ஜெயசீலன்

# பிரிந்த குடும்பம் இணைந்தது கதாப்பிரசங்கம் கேட்ட பலன்

## இதனுலே இறும்பூதெய்தினுர் சைவப்புலவர் இ. வடிவேலனுர்

திருகோணமலையில் தமிழ் இலக்கிய, சமய விழாக்கள், இன எழுச்சி நிகழ்வுகள் என்ருல் எப்போதும் முன்னிற்பவர் சைவப்புலவர் இ. வடிவேல் அவர்கள்.

கோணேஸ்வரா கல்லூரியில் நீண்டகாலம் அதிபராய் பணியாற்றிய அன்னுர் திருகோணமலை சிவயோக சமாஜத்தின் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுபவர். ஓர் ஆத்ம சாதகர்.

இலங்கையின் பல பாகங்களிலும், வானொலியிலும் கதாப்பிரசங்கங்கள் நிகழ்த்தி அந்தத் துறையில் தனி முத்திரை பதித்தவர். அவர் ஓர் அனுபவத்தை சஞ்சீவி வாசகர்களுடன் இதோ பகிர்ந்துகொள்கிருர்:-

**காளிகோயிலில்**

பல வருடங்களுக்கு முன் திருகோணமலைக் காளிகோவில் வீதியில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் நான் கதாப்பிரசங்கம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நள்ளிரவு வரையில் பிரசங்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வீதி நிறைந்த ஜனக்கூட்டம். சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்ற கண்ணகியின் வரலாறு அன்றையப் பிரசங்கத்தின் தலையங்கம். பத்தினித் தெய்வத்தின் பண்புகள் கதாப்பிரசங்கத்தின் உயிரோட்டமாக ஓடிக்கொண்டிருந்தன. கண்ணகியின்கதை பெண்குலத்திற்குப்பெருமையளித்திருக்கக்கூடும். ஆண்களுக்குத் தமது மனைவியரிடமிருந்த அன்பும் இரக்கமும் மேலும் வளருவதற்கு உள்ளத்தில் கிளர்ச்சியேற்படுத்தியிருக்கலாம். பிரசங்கம் முடிந்தபின் ஜனக்கூட்டம் கலைந்து விட்டது. நானும் வீட்டுக்குப்போய்விட்டேன்.

மறுநாள் விடிந்தபின் மேடையை அகற்றுவதற்காக அங்கு வந்தவர்கள், மேடையில் ஒரு கடிதம் கிடப்பதைக் கண்டார்கள். கடித உறையில் எனது பெயர் எழுதப்பட்டிருந்ததால், கடிதத்தை என்னிடம் தந்தார்கள். படித்துப் பார்த்தேன். ஒரு பாமர மகன் பச்சை உள்ளத்தோடு அங்கலாய்த்து எழுதிய கடிதமெனப் புரிந்து கொண்டேன். அதில் தன்னுடைய கண்ணகி எங்கிருக்கின்ருள் என்பதை அறிந்து தன்னிடம் சேர்த்துவிடும்படி கேட்டிருந்தார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆயினும் இதை எழுதியவருடைய வாழ்க்கைத் திரைக்குப் பின்னே ஏதோ ஒரு சம்பவம் மறைந்து கிடக்கக்கூடும் என உணர்ந்தேன்.

**சாம்பல்தீவில்**

ஒரு நாள் விட்டு மறுநாள் திருகோணமலையிலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள சாம்பல் தீவு மாங்கிருய் மாரியம்மன்கோவிலில் எனது கதாப்பிரசங்கத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். மாரியம்மன் கோவிலில் அலங்கார உற்சவம் நடந்து கொண்டிருக்கிறது. பிரசங்கத்துக்கு ஏற்பாடு செய்தவர்களுடைய வேண்டுகோளின்படி உற்சவமுடிவில் கோவில் மண்டபத்திலிருந்து கண்ணகி கதையை நடத்திக் கொண்டிருந்தேன். மண்டபத்திலும் வெளியிலும் ஜனங்கள் திரளாகக் கூடியிருந்தார்கள்.

கதாப்பிரசங்கம் முடிந்தபின் மகிழ்ச்சி தெரிவிக்கவந்த சிலருக்கு நடுவில் நின்ற ஒருவர் நெருங்கி வந்து ஐயா...! என்னுடைய கண்ணகி எனக்குக் கிடைத்து விட்டாள் என்று மகிழ்ச்சி தெரிவித்தார். சற்று நேரம் திகைத்தேன்.

எனினும் இரண்டு நாட்களுக்கு முன் எனக்குக் கிடைத்த கடிதத்தையும் இவர் இப்போது கூறியதையும் ஒட்டிப் பொருத்திப்பார்த்தேன். விஷயத்தைச் சற்று விரிவாக விசாரித்தேன்.

இவருடைய மனைவி பெயர் கண்ணகி. பல நாட்களாக மனஸ்தாபப்பட்டுப் பிரிந்து வாழ்ந்தார்களாம். அவள் எங்கிருக்கிருள் என்பதை அறிய முடியாமலிருந்தாராம். திருகோணமலை ஸ்ரீபத்திரகாளியம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற கதாப்பிரசங்கத்தை இந்தக் கண்ணகி கேட்டுக் கொண்டிருந்தாளாம். கோவலனுடைய மரணத்தினுல் அந்தக் கண்ணகிபட்ட துன்பங்களும் துயரங்களும் இந்தக் கண்ணகியுடைய உள்ளத்தை உறுத்திவிட்டது.

பதி பக்தி இவளைத் தள்ளிக்கொண்டு போய் அவளுடைய கணவனுேடு சமாதானப்படுத்தி விட்டது. சகவாழ்வுக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டாள். இதனுல் இப்போது இருவரும் ஒன்ருக வாழ்கின்ருர்களாமென்ற மகிழ்ச்சியைக் கூறினர்.

உன்னுடைய கண்ணகியை அழைத்து வரவில்லையா என்று கேட்டேன். அவளும் இங்கே தான் இருக்கின்ருள் என்று என்னை அழைத்துச் சென்று காண்பித்தார். வறுமைக்கோட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஏழைகள், வாழ்க்கை வண்டியை இழுப்பதற்காக இருவரும் கடலை, நிலக்கடலை, இனிப்புப் பண்டங்களை வைத்துப் பெட்டிக்கடை நடத்திக் கொண்டிருக்கிருர்கள். என்னைக் கண்டதும் அந்தப் பெண் எழுந்து மௌனமாகத் தலைகுனிந்து நின்ருள்.

அந்த மௌனத்தில் அவர்களுடைய கதை கொடிவிட்டுப் படர்ந்து சென்றது. இது என் வாழ்வில் மறக்கமுடியாத சம்பவமாகி விட்டது.

—இப்படி அவர் விளக்கினுர்:

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இந்துக் கோயில்களின் வரலாற்றினைத் தொகுத்து எமது பாரம்பரிய செல்வத்தை விளக்கி உள்ளார். இதனைப் பிரதேச அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்த நூலுக்கான தகவல்களைச் சேகரிக்கக் கிராமங்கள் பலவற்றுக்குச் சென்றபோது அவருக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்று இதோ:-

'திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள்' என்ற நூலை எழுதுவதற்காக செய்திச் சேகரிப்பின் பொருட்டு திருகோணமலை மாவட்டத்தின் தெற்கே வெருகலம்பதி தொடக்கம் வடக்கே தென்னமரவாடி வரையும் பிரயாணத்தை மேற்கொண்டேன். (தென்னன் மரபடி என்பது இப்போது தென்னமரவாடி என வழங்குகின்றது) கிராமங்கள் தோறும் சென்று ஆங்காங்குள்ள ஆலயங்களுக்குப் போய் வரலாறுகளைச் சேகரித்தேன்.

**கங்குவேலியில்**

அகத்தியர் ஸ்தாபனம் என்ற மிகப் பழமையான ஆலயமொன்றிருந்த இடத்திற்குப் போக வேண்டும். மருத நிலங்களைக் கடந்து முல்லை நிலங்களுக்கூடாகச் செய்ய வேண்டிய பிரயாணமது. முல்லை நிலமென்று செந்தமிழில் இனிக்க இனிக்கச் சொல்லி விட்டேன். அது கொடிய விலங்குகள் வாழும் பயங்கரமான காடு. உதவியின்றித் தனியாகப் போக முடியாது.

அகஸ்தியர் ஸ்தாபனம் எங்கிருக்கின்றதெனக் கூறவில்லையே என்று அங்கலாய்க்கும் வாசகர்களின் பொறுமையைச் சோதிக்காமல் சொல்லி விடுகிறேன். திருகோணமலைப் பட்டணத்திலிருந்து கடல்மார்க்கமாக இயந்திரப்படகில் மூதூருக்குச் செல்லலாம். அங்கிருந்து பத்துமைல் தூரத்தில் கிளிவெட்டி என்ற அழகிய கிராமமுண்டு. அங்கு சிவானந்தம் என்ற அன்பர் ஒருவரை எனக்குத் துணையாகவும் வழிகாட்டியாகவும் சேர்த்துக் கொண்டேன். கிளிவெட்டியிலிருந்து ஐந்துமைல் தூரத்திலிருப்பது பழமையான சிவன் கோவிலொன்றுள்ள கங்குவேலிக் கிராமம். (கங்கைவேலி என்பது கங்குவேலியாயிற்று நாம் செய்து கொண்ட முன்னேற்பாட்டின்படி சிவரெட்டினம் என்பவர் தலைமையில் ஒருகோஷ்டி எங்களைக் கங்குவேலியில் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

மழைக்காலத்தில் இந்தப் பிரயாண முயற்சி நடைபெற்றது. வயல்களையும் காடுகளையும் கடந்து குறித்த இடத்தை அடைவதற்கு அந்தக் கோஷ்டியினர் ஒரு டிராக்டர்வண்டியை ஏற்பாடு செய்திருந்தார்கள். நானும் நண்பர் சிவானந்தமும் கங்குவேலிக்குப் போவதற்காக கிளிவெட்டியிலிருந்து ஆளுக்கொரு மிதிவண்டியில் சென்று கொண்டிருக்கிருேம். வழியில் ஒரு குளம். குளக்கட்டுதான் பிரயாணப்பாதை. அது மண்ணும் களியும் கலந்து அமைக்கப்பட்டது. அப்பாதையில் மாட்டுவண்டிகள் போய்வருவதாலான பள்ளம் படுகுழிகள் மழைபெய்து சேறும் சகதியுமாயிருந்தது. புற்கள் வளர்ந்து திட்டுத் திட்டாகப் பாதை ஒழுங்கற்றுக் காணப்படுகின்றது.

இப்படியான பாதையில் நிதானமாக மிதிவண்டியில் ஓடிக் கொண்டிருக்கிருேம். முன்னே சென்று கொண்டிருந்த நண்பருக்கு அது பழக்கப்பட்ட பாதை. நானும் அவதானமாகத்தான் சென்றேன். என்னை அவதானித்த ஒரு காட்டெருமைக்கு குஷி பிறந்துவிட்டது போலும். அது என்னைத் துரத்தத் தொடங்கியது. எனது புத்திக்கும் சக்திக்கும் ஏற்றபடி ஓடிக் கொண்டிருந்தேன், எனது சமநிலை தவறிக் குளக்கட்டிலுள்ள கல்வெட்டொன்றில் மோதிக் கொண்டேன். மிதிவண்டியுடன் குளத்துக்குள் விழுந்து விட்டேன். அந்தச் சத்தத்தில் காட்டெருமையும் திசை திரும்பி விட்டது. நான் நீருள் மூழ்கிக் கிடப்பதைக் கண்ட நண்பன் பதைபதைப்போடு ஓடிவந்து குளத்திலிருந்து நான் வெளியே



இ. வடிவேல்

வரக் கைகொடுத்துதவினர்.

குளத்தில் மிதந்து கொண்டிருந்த நனையாவராட்டிகளும் சகதியும் எனது உடையை அசுத்தப்படுத்தி விட்டது. அதற்காக நான் கவலைப்படவில்லை. கல்வெட்டில் எனது இடது கால் மோதிக் கொண்டதால் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. வேட்டியிலிருந்த இரத்தக்கறையைக் கண்டு காயத்திலிருந்து இரத்தம் வடிவதை உணர்ந்தேன். இந்த நிலையில் கங்குவேலிக்குப் போகாமல் கிளிவெட்டிக்குத் திரும்பிச் சென்று காயங்களுக்கு மருந்து கட்டி உடையையும் மாற்றிக் கொண்டு போவோமென நண்பர் ஆலோசனை கூறினுர். முன் வைத்த காலைப் பின் வைக்க நான் விரும்பவில்லை. இங்கு எனது அலங்கோலத்தை விமர்சனம் செய்ய மனிதர்களில்லை. காட்டெருமைகள்தான் பார்த்துக் கொண்டு நிற்கின்றன. ஆதலால் முன்னேறிச் செல்வோமென நண்பருக்குக் கூறி கங்குவேலியைச் சென்றடைந்தேன். கங்குவேலிச் சிவனருளால் அங்கு வைத்திய வசதியும் அன்பும் ஆதரவும் கிடைத்தது. எனது உறுதியையும் உற்

(9ஆம் பக்கம் பார்க்க

- செவ்வி: வே. வரதசுந்தரம் -

## நேர்முகம்

# சத்தியசாயிபாபா தன் கைகளை அசைக்க வண்ண வண்ண மலர்கள் சொரிந்தன

பக்தர்கள் பஜனை செய்தபடி பாபாவின் மறு தரிசனத்திற்குக் காத்திருந்தனர். காற்று கடினமாக வீசிற்று. மேகமூம் கறுத்து மழை பெய்வதற்கு அறிகுறி தோன்றிற்று. ''பகவான் மழைபெய்ய விடமாட்டார்'' என்று பக்தர்கள் தங்களுக்குள் கதைத்துக் கொண்டனர். அவர்கள் கூறியவாறே சில விஞடிகளில் ஆகாயம் வெளுத்தது. காற்றும் அமைதி எய்தி, அங்கிருந்தோர் அனைவருக்கும் உற்சாகத்தை அளித்தது.

பாபாவும் மறு தரிசனத்திற்கு வெளியே வந்தார். அவர் என்னை நோக்கி நடந்து வந்தார். அருகில் வந்ததும் என்னை உற்று நோக்கினுர். என் மனம் படபடென்று அடிக்கத் தொடங்கிற்று. அவர் தன் பார்வையை என் பக்கத்திலுள்ளவர் மேல் திருப்பினுர்.

தன் கரத்தை நீட்டி அசைத்ததும் அழகிய சிறு மலர்கள் அவர் கரத்திலிருந்து வரத்தொடங்கிற்று. மலர்களை எனக்கு அருகிலுள்ள நாலு நபர்கள் தங்கள் கைகளை நீட்டிப் பெற்றுக்கொண்டார்கள். அதன் பின் என்மேல் ஒரு கண்ணேட்டம் விட்டார் — ''நான் தற்பொழுது செய்ததை நன்கு கவனித்தீரா?'' என்று குறிக்கும் வண்ணமாக.

அவர் நடத்தியது ஜாலவித்தை அல்ல. அவரின் அங்கியின் அடிக்கைப்பாகம் முழங்கைக்கு மேலிருந்தது. என்முன் வரும்போது விரல்கள் நன்கு திறந்த வண்ணமே இருந்தது. என்னை மயக்கி தன் வசப்படுத்தினுர் என்று சொல்லவும் முடியாது. நான் ஒரு பிரசித்தி பெற்ற மனேதத்துவ சாஸ்திரி. என்னை மற்றவர் மயக்கச் செய்வது இயலாத காரியம். நடந்ததோ வெகு அதிசயக் காட்சி. நடந்தவைகளை என்னுல் ஏற்கமுடியவில்லை.

அடுத்த நாட் காலை ஏதோ ஒரு சக்தியால் உந்தப்பட்டு பாபாவின் தரிசனத்திற்குச் சென்றேன். நான் அமர்ந்திருந்த இடத்திற்குச் சற்றுத் தொலைவில் தனி நபர் ஒருவர் நின்ருர். என்பார்வை அவர்மேல் சென்றது. அவரைப் பார்த்ததும் அவர் எனக்கு ஏதோ ஒரு விசேடச் செய்தி வைத்திருப்பதாகவும், அவருடன் தொடர்பு கொள்



சத்தியசாயிபாபா

ளும்படியும் என் மனம் என்னை வற்புறுத்திற்று.

பாபாவின் ஸ்தானங்களில் ஒழுக்க முறைகள் மிகவும் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படும். அங்கு நடக்கும் வைபவங்களில் ஆண்களும் பெண்களும் புறம்பாகவே கலந்து கொள்வர். நான் சந்திக்க வேண்டிய நபரிடம் செல்வதற்குப் பெண்கள் கூட்டத்திற்கு ஊடாகவே செல்லவேண்டும்.

காணப்போகும் நபரோ அந்நியர்: பாஷை வேறுபாடும் உண்டு. இவைகளை எதிர்த்து என்னுல் முன்னேற முடியவில்லை. என் மனமோ அந்த நபரை உடன்சந்திக்கும்படி நிர்ப்பந்தித்துக் கொண்டே இருந்தது. என்னுடைய மனக்குரலைப் புறக்கணிக்கவோ, அசட்டை செய்யவோ முடியாத நிலையில்; அந்த நபர் நின்ற திசையை நோக்கி நடக்கலானேன், தொண்டர்கள் ஒருவரும் என்னைத் தடுக்கவில்லை.

அவரிடம்ஒன்று 'ஐயா என்னை மன்னிக்க வேண்டும். நீங்கள் ஆங்கிலம் பேசுவீர்களென நம்புகிறேன், நீங்கள் விசேட செய்தி ஒன்று என்னிடம் கூற இங்கு நிற்பதாக என்மனம் எனக்குள் சொல்லிக் கொண்டே இருக்கிறது. இங்கு நடப்பவைகளைப் பார்க்கும் பொழுது எல்லாம் விசித்திரமாகவே எனக்குத் தோன்றுகின்றது,

அந்த நபர் தான் பேராசிரியர் நரேந்திரன் என்றும் சத்தியசாயி பாபா கல்லூரி அதிபரென்றும் தன்னை அறிமுகப்படுத்தினுர். ''நீங்கள் தானு பகவான் குறிப்பிட்ட அன்னியர்! நான் இன்று காலை ஒரு அன்னிய நாட்டவரைச் சந்திக்கப் போவதாகவும் அடுத்துவரும் வெள்ளிக்கிழமை எங்கள் கல்லூரியில் உபந்நியாசம் நிகழ்த்த உங்களை அழைக்கும்படி பாபா ஆணையிட்டுள்ளார்''

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! நான் உலக நாடுகளிலெல்லாம், பல்லாயிரக்கணக்கான கூட்டங்களில் இந்த விஞ்ஞானதுறைபற்றி -சக்தி வளையம்- விரிவுரையாற்றி இருக்கிறேன். இந்த விவரம் இந்த மனிதருக்கு எப்படித் தெரிந்தது! நான் இங்கு என்னுடைய விவரங்களை எவரிடமும் கூறவில்லை. இங்கு நடப்பதெல்லாம் விந்தையிலும் விந்தையாகவே தெரிகிறது.''

பாபாவின் ஆணைப்படி வெள்ளியன்று பேராசிரியர் உரையை நிகழ்த்த சத்திய சாய் பாபாவின் கல்லூரி சென்றிருந்தார். அன்று 30-7-1978 தார்மீக ஆத்மீகக் கல்விப் பயிற்சிக்காக ஆந்திரா முதல்வர் ஸ்ரீ சென்னுரெட்டி 665 ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களை பாபாவிடம் அனுபபியிருந்தார். இவர்களும், மேலும் அங்குள்ள ஆசிரியர்கள், உயர்வகுப்பு மாணவர்களும் பிரசன்னமாயிருந்தனர். எல்லாவற்றிற்கும் மேல் பாபாவே கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

(வளரும்)

- சத்தியா -

## சமயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடையும் அலங்காரமும்

அலங்கரித்துக்கொள்வது என்பது ஒரு தனிக்கலை.

ஆடைகளைத் தேர்ந்தெடுத்து, பாங்காக அணிவது; அதற்கேற்ற நகைகளைப் பொருத்தமாக அணிவது என்பதெல்லாம் இந்தக்கலையைச் சேர்ந்தது தான்.

இப்படி அலங்கரித்துக்கொள்வதிலும் ஒரு விதிமுறை உண்டு. எந்தெந்த இடத்திற்கு எப்படி, எதை அணிந்துகொண்டு செல்வது என்பதுதான் அது.

**எங்கே, எந்தச் சமயத்தில், என்னமாதிரி உடைகளையும், நகைகளையும் அணிந்து சென்றால் எடுப்பாகவும், பொருத்தமாகவும் இருக்கும்?**

### அலுவலகத்திற்குச் செல்லும்போது

கூடுமானவரை விலையுயர்ந்த புடைவைகளையும், பட்டுபோன்றவற்றையும் அலுவலகத்திற்குக் கட்டிக்கொண்டுபோவதைத் தவிர்க்கலாம். பஸ்ஸிலும் செல்லும்போதோ, ஆபீஸின் நாற்காலி மேசைகளில் உள்ள அழுக்காலோ, அல்லது வெளியே நம்மை அறியாமல் தலையை நீட்டிக் கொண்டிருக்கும் ஆணிகளாலோ இந்தப்புடைவைகள் நாசமாகலாம். பளிச்சென்று உள்ள நல்ல ஆர்சண்டி, கோட்டா, கல்கத்தா காட்டன், போன்ற பலவித பருத்திப் புடைவைகள் அலுவலகம் செல்லும்போது உடுத்திச்செல்லமிகவும் ஏற்றவை.

சட்டும் புடைவையின் உடல் அல்லது பார்டருடன் நிறத்திற்கு சரியான மாட்சிங் பிளவுஸும், உள்பாவாடையும் அணிதல் அவசியம்.

தலையைப் பின்னியோ, ஒரிருசமயம் கொண்டைபோட்டோ செல்லலாம். சிறிதளவு பூ வைத்தால் போதும். முகத்திற்கு அதிகம் கண்ணை உறுத்தாத மேக்கப்போதும். லைட்டாக லிப்ஸ்டிக் போடலாம்.

### சினிமா, டிராமா போன்ற இடங்களுக்கு:

குறிப்பிட்ட சிறிது நேரம்வரை ஒரே இடத்தில் உட்காரவேண்டியிருப்பதால் சித்தெடிக் புடைவகள் அணியலாம். ஏனெனில் அவைகள் கசங்காது. சுருக்கமும் விழாது.

பளிச்சென்ற கலரில் புடைவைக்கு மாட்சிங்காக காதணி, வளையல், கழுத்தணியுடன் சென்றால் பார்ப்பவர்கள் கொஞ்சம் ''அட!'' என்று ஆச்சரியப்பட்டுப்போவார்கள்.

### கல்யாணம் போன்ற விசேஷங்களுக்கு:

கல்யாணம் போன்ற விசேஷங்களுக்குச் செல்லும்போது பட்டுப் புடைவை அணிவதுதான் நம் பண்பாடு என்றாலும், ஒரேயடியாக ஜரிகை மின்னச்சென்றால் சிலசமயம் கல்யாணப்பெண் யார் என்ற சந்தேகம் வரலாம்! கையில் கரை வைத்த பிளவுஸுடன் பட்டுப்புடைவை அணிந்து காதில் ஜிமிக்கி அல்லது தொங்கட்டான்களுடன் தலையில் பூவை வைத்துக்கொண்டு செல்வது ''பளிச்'' என்று இருக்கும்.

இருக்கும் நகையெல்லாம் அள்ளிப்போட்டுக்கொள்ளாமல் ஒரு நெக்லஸ், சங்கிலி மட்டும் போட்டுக்கொள்ளலாம். வாட்சைக் கழற்றிவிட்டு இரு கையிலும் மாட்சிங்காக நைலான் ரப்பர் வளையல்களை பவுண் வளையல்களைப் பாலங்களாக்கிப் போட்டுக்கொள்ளலாம்.

கண்ணில் மையுடன் கொஞ்சம் ஐலைனர் இட்டுக்கொள்வது கவர்ச்சியாக இருக்கும். லிப்ஸ்டிக் அவசியமில்லை. வெள்ளிச் சாவிக்கொத்து இருந்தால் இடுப்பில் செருகிக்கொள்ளலாம்.

### கணவனின் அலுவலக பார்ட்டி:

இந்த மாதிரி இடங்களில் ஒரு மனைவி அணிந்து செல்லும் உடையும், பழகும்விதமும் அவளது கணவனின் கௌரவத்தை நிலைநாட்டும். அதிகம் ஜரிகை இல்லாத பட்டுப் புடைவைகளோ, சைனுசில்க் போன்ற புடைவைகளோ இதற்கு ஏற்றவை.

வெள்ளி நகைகள் இந்தமாதிரி இடங்களுக்குப் பொருத்தமாக இருக்கும். பின்னலிடக் கொண்டை எடுப்பாக இருக்கும். பூ அவசியமில்லை. கொஞ்சம் காடியாக புடைவைக் கலருக்கு ஏற்படி லிப்ஸ்டிக் அணியலாம். நகங்களில் பூச்சு இருந்தாலும் நன்றாக இருக்கும்.

### வாக்கிங், ஷாப்பிங், குழந்தைகளுடைய பள்ளி போன்ற இடங்களுக்கு:

மெல்லிய சரிகைக் கரையிட்ட கோயம்புத்தூர் காட்டன் புடைவைக்கு மாட்சிங்காக மெல்லிய கரையிட்ட பிளவுஸும், தலையைப் பின்னாமல் சிறிய கிளிப்பால் பாதியில் கட்டியும் தொங்கவிட்டுக் காதில் சிறிய தங்கத் தோடும், கையில் இரண்டு தங்க வளையலும் போதும்!

முகத்திற்கு வெறும் பவுடரும், நெற்றியில் ஒரு சிறிய ஸ்டிக்கர் பொட்டும் போதும்.

★

நன்றி: சுமங்கலி




# குழந்தைகளின் போஷாக்குணவு

தாய்ப்பாலிலும் சிறந்தது எதுவுமில்லை. தாய்ப்பால் துப்புரவானது. மாவைப்போல் துப்பரவில்லாத இயந்திரத்தில் செய்யப்பட்டதல்ல. தாய்ப்பால் உடனே கிடைக்கக்கூடியது. மலிவானது. அளவான சூடு உள்ளது. நோய்களைத் தடுக்கும் சக்தி தாய்ப்பாலில் உண்டு. அது தாய்க்கும் பிள்ளைக்கும் பாசத்தை உண்டாக்க வல்லது. ஆகையால் தாய்ப்பாலையே பிள்ளைக்குக் கொடுக்கவேண்டும்.

தாய்ப்பாலில் காணப்படும் போசணை குழந்தையின் முதல் 6 மாதங்களுக்கே போதுமானது. ஆகையால் 6 மாதங்களின் பின்னர் பாலுடன் வேறு உணவுகளும் கொடுப்பது மிகவும் முக்கியம். இல்லாவிடின் பிள்ளையின் உடல் வளர்ச்சியும் மூளை வளர்ச்சியும் பாதிக்கப்படும். இந்த உபஉணவுகளை 4ஆம் மாதத்திலிருந்தே கொடுக்கத்தொடங்கலாம். இவ்வுப உணவுகளைக் கொடுக்கும்போது சிறிய அளவாகவே கொடுக்கவேண்டும். ஒரு நாளில் இரண்டு புதிய உப உணவுகள் கொடுக்கப்படாது.

அரை அவியல் முட்டையின் பஞ்சட்கரு, பழம், அவித்த கீரைச்சாறு முதலியன 4 மாதத்தில் கொடுக்கலாம். முட்டைக்கருவும் பழமும் நன்றாக நசித்த பின்பே கொடுக்கப்படவேண்டும். பழங்களில் பப்பாசி அல்லது வாழைப்பழம் கொடுக்கலாம். தொடக்கத்தில் கரு மாத்திரம் ஒரு நாளைக்கு ½ தேக்கரண்டியும் போகப்போக வெள்ளைக்கருவும் சேர்த்து அளவைக்கூட்டி 6 மாதத்தில் பாதிமுட்டை கொடுக்கலாம். பழம், கீரைச்சாறு ஆகியன தொடக்கத்தில் ஒரு நாளைக்கு ஒரு தேக்கரண்டியாகப் போகப்போகக் கூட்டலாம். 6 மாதத்தில் சோறு வடித்த கஞ்சி 2,3 தேக்கரண்டியும், கூழ் அல்லது களியும் 2,3 தேக்கரண்டி, ஒரு நாளைக்குக் கொடுக்கலாம். கூழ், உருளைக்கிழங்கு, பருப்பு கீரையில் செய்யலாம். இன்னும் சில நாட்களில் சோறு இடியப்பம், பாண் முதலியனவற்றை நன்கு அவித்த கீரை உருளைக்கிழங்கு முதலியனவற்றுடன் பிசைந்து 2,3 தேக்கரண்டி கொடுக்கலாம். இவை போகப்போக சிறியதாக அளவைக் கூட்டலாம். தொடர்ந்து முட்டை, பழம் கொடுக்கவேண்டும். 8,9 ஆம் மாதங்களிலிருந்து 'திரிபோஷ' மாவில் தயாரிக்கப்பட்ட களி கூழ் முதலியனவற்றைக் கொடுக்கலாம். கூழை உருளைக்கிழங்கு, பருப்பு, கீரை ஆகியவற்றை நன்கு அவித்து மசித்துக் கொடுக்கலாம். திரிபோஷா மாவைக் குழந்தைச் சிகிச்சை நிலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### நீங்களே தயாரிக்கலாம்

திரிபோஷா மாவிற்குப் பதில் நீங்கள் 2/3 பங்கு அரிசியையும், 1/3பங்கு சோயா, உழுந்து தட்டாப்பயறு ஆகியவற்றில் ஒன்றையும் மாவாக்கிக் கலந்து களி, கூழ் தயாரிக்கலாம்.

8ஆவது 9ஆவது மாதங்களில் குழந்தை பாலுடன் 3நேர உணவும் எடுக்கத்தக்கதாக இருக்கவேண்டும். ஒரு வயது வரும்போது மிளகாய் இல்லாத வெள்ளைக்கறி சேர்த்து உணவு கொடுக்கவேண்டும்.

★

நன்றி: யாழ் வைத்தியசங்கம்

# ஆங்கிலமும் தமிழும் கலந்து பேசும் இராப்பள்ளி வாத்தியார்

அந்தக் கிராமத்தில் வடிவேலுவாத்தியாரைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. ஒருசிலர் அவரை இராப்பள்ளி வாத்தியார் என்றும் அழைப்பதுண்டு. அந்தக்காலத்தில் இரவில் பள்ளிக்கூடம் நடத்தியவர்.

ஆங்கிலம் தெரிந்த ஒரேயொரு நபர் அவர்தான். 'வெள்ளைக்காரனோடையே இங்கிலிஸ் பேசி வெண்டவர்' என்று மக்கள் பெருமைப்படும் அளவுக்குப் புகழ்பெற்றவர்.

இத்தனைக்கும் அவர் படித்தது ஏழாம்வகுப்பு வரைதான். 'அந்தக் காலத்து இங்கிலீசைப் போல் இப்பத்தை பீ.ஏ வருமா' என்று அடிக்கடி சொல்லுவார்,

கட்டையான. உருவம் கதர்வேட்டி, கதர் சால்வை, நெற்றியில் விபூதி சந்தனப்பொட்டு, கையில் ஒரு குடை இவை அவருடைய 'ட்ரேட்'மார்க். இப்படித் தோற்றத்துடன் நீங்கள் ஒருவரைப் பார்த்தால் சந்தேகமே வேண்டாம். அவர்தான் இராப்பள்ளிவாத்தியார்.

இங்கிலீசும் தமிழும் கலந்து அவர் பேசும் போது கேட்பதற்கு மிகவும் சுவையாக இருக்கும். அவருடைய இங்கிலிசை இதுவரை நீங்கள் கேஷ்டிராவிட்டால், நீங்கள் துர் அதிர்ஷ்டசாலிகள்.

அவரது உதட்டில் இருந்து இங்கிலிஸ் உதிராதா என ஏங்கி எப்போது இரண்டொரு வார்த்தைகளை அள்ளி வீசுவார் என எதிர்பார்த்து அவரைச்சுற்றி ஒரு கூட்டமே இருக்கும்.

'என்ரை இங்கிலிசு வெள்ளைக்காரனுக்கே விளங்காதடா தம்பி' என்று அவர் பெருமையுடன் கூறும் போது அவர் வாயும் பேசும், கண்களும் பேசும்.

ஒருமுறை கடும் மழையினால் கிராமத்தில் சிறிய பாலம் ஒன்று உடைந்து விட்டது. அதைப் பார்வையிட வெள்ளைக்காரத்துரை வந்திருந்தார் அங்குவந்த இராப்பள்ளி வாத்தியார் தனது குடையை விரித்தார். அப்போது குடையில் இருந்த மழைத்தண்ணீர் துரையின் கோட்

### நடைச் சித்திரம்

டில் தெறித்துவிட்டது, கோபமடைந்த துரை ''You Fool'' என்றார் வாத்தியாரைப்பார்த்து. வாத்தியாருக்கு வந்ததே கோபம். வலது கை ஆள்காட்டி விரலை துரையின் முகத்திற்கு நேரே நீட்டியபடி 'யூ ஓடாவூல், ஐ ஓயோடாவூல்' என்று கத்தினார். துரைக்கு ஒன்றும் புரியவில்லை. இது இங்கிலீசா, தமிழா என்று விளங்கவில்லை. சத்தம் போடாமல் வேறு பக்கம் திரும்பி விட்டார்.

அங்கு கூடியிருந்த மக்களுக்குப்பெருமை தாங்க முடியவில்லை இராப்பள்ளி வாத்தியாரின் இங்கிலிசுக்கு துரையால் பதில் சொல்ல முடியவில்லையெனத் தங்களுக்குள் பேசிமகிழ்ந்தார்கள்.

இராப்பள்ளி வாத்தியார் ஒரு ஹோட்டலுக்குச் சாப்பிடப்போனார். சர்வர் இலையில் இடியப்பம் வைத்துவிட்டு உள்ளே போனான். போனவன்உடன் திரும்பவில்லை. வாத்தியாருக்குக் கோபம் வந்துவிட்டது. கோபம் வந்தால் இங்கிலிஸ் அவர் வாயில் இருந்து பறக்கும். 'பிரிங் த பச்சடி விதவுட் எனி தடை' என்று உரத்துக் கூறினார். அந்த இங்கிலிஸ் நடையில் தங்களையே மறந்து லயித்து அங்கிருந்த அத்தனை பேரும் திறந்தவாய் மூடாது இவரையே பார்த்து ரசித்தனர்.

வாத்தியார் வீட்டில் ஆட்கள் கும்பலாகக் கூடி இருந்ததால், அந்தக்கிராமத்தில் யாருக்கோ தந்தி வந்திருக்கிறது என்பது அர்த்தம். தந்தி வருவது மிக அபூர்வம். தந்தி வந்தால் கூட்டம் கூடிவிடும். அதை வாசித்து அறிவதற்கு வாத்தியாரிடம் கொண்டுபோவார்கள்.

தந்தியை வாசிப்பதிலும் அவரிடம் ஒரு தனித்தன்மை உண்டு. தந்தியைக் கையில் வாங்கி, சோகம் பிரதிபலிக்க கண்ணாடியை எடுத்து சால்வையால் ஒருதடவைக்கு இருதடவை துடைத்து, கண்ணாடியை காதில்மாட்டியபின் தந்தியை உடைக்காமலேயே விலாசத்தையும் தந்தி மடிப்பையும் நோட்டமிடுவார். பின் பென்சிலை எடுத்து ஒட்டப்பட்டிருந்த இடத்தில் செருகிக் கிழிப்பார். கிழித்த பின்பும் உடன் வாசிக்க மாட்டார். பென்சிலை மீண்டும் கொண்டுபோய் வைத்துவிட்டு தந்தியை மீண்டும் நோட்டம்விடுவார்.

தந்தியில் ஏதாவது ஒரு சொல்லு அவருக்கு நிச்சயம் புரியக்கூடியதாக இருக்கும். உடன் முழுத் தந்தியையும் வாசித்துவிடுவார்.

கிளிநொச்சியிலிருந்து ஒரு தந்தி வந்தது. தந்தியைப் பெற்றவர் குடும்பத்துடனும் அயலவர்களுடனும் வாத்தியார் வீட்டிற்கு வந்தார்கள். அதில் கீழ்க்காணும் வாசகம் இருந்தது. (Tractor Accident Buffaloa Killed -Ramu)

தந்தியை வாசித்த வாத்தியார் முகத்தில் சோகம் பிரதிபலிக்க, ''ராக்டர் விபத்து, எருமை கொன்றது ராமு இறந்துவிட்டான்'' என்றார்.

பிரேதப் பெட்டியுடன் கிளிநொச்சிக்குப் போனவர்களை ராமு எதிர்கொண்டு வரவேற்றான். வடிவேலுவாத்தியார் தவறை பேபஸ்ட் மாஸ்டரில் சுமத்தினார். 'என்ன இங்கிலிசு எழுதுறன் தப்பும் தவறுமாக' என்று கோபித்துக் கொண்டார்.

அவர் எதையும் பொறுப்பார், ஆனால் இங்கிலிஷ் தவறுகள் தென்பட்டால் அவரால் பொறுக்கமுடியாது. இங்கிலிசு தெரியாதவனெல்லாம் இங்கிலிஸ் எழுதுகிறான்'' என்று கொதித்துக்கொண்டே இருப்பார்.

அவர் பேசுவதுதான் இங்கிலிஷ். அவர் எழுதுவதுதான் இங்கிலிஷ். அதிலே யாரும் பிழை கண்டுபிடிக்கமுடியாது.

★

(யாவும் கற்பனை)

- வில்வம் பசுபதி -

# தமிழ் இலக்கிய வினா விடை

1987 ஆம் ஆண்டு முதன்முதலாக நடத்தப்படவிருக்கும் புதிய திட்டத்தையொட்டிய க. பொ. த. ப. சாதாரண தர தமிழ்மொழிப் பாடப்பரப்பில் தமிழ் இலக்கியம் என்னும் தொகுப்பு நூலும் அடங்குகிறது. இதில் சங்கமருவிய காலம் முதல், இக்காலம் வரையுள்ள இலக்கியப் பகுதிகள் சேர்க்கப் பட்டுள்ளன.

| | |
|---|---|
| நூல்: | தமிழ் இலக்கிய வினாவிடை. |
| ஆசிரியர்: | திரு. க. சொக்கலிங்கம். |
| வெளியீடு: | ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை யாழ்ப்பாணம். |
| அறிமுகம்: | எம். எஸ். அப்துல் றஹீம். |

பாடப் புத்தகத்தைக் கற்கும் மாணவரும் கற்பிக்கும் ஆசிரியரும் அப்பாட நூலிலிருந்து எல்லாவித தகவல்களையும் பெறமுடியாத குறை நிலவியது. பாட நூலின் இறுதியில் கொடுக்கப்பட்ட அரும்பதவிளக்கங்கள் போதிய அளவினவாகக் காணப்படவில்லை. முக்கியமாக உரைப்பகுதிகளின் இடையே விரவி வந்த கவிதைகளின் பொருளை நன்கு விளங்கிக் கொள்வதில் சிரமமிருந்தது. சில வேளைகளில் அவற்றிற்கு ஆசிரியர்கள் கூடத் தவறான விளக்கங்களைக் கொடுக்க வேண்டிய நிலை உருவாகியது. புதிய கல்விக் கொள்கை, சமய வேறுபாட்டை மனத்தில் கொள்ளாது தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர் அனைவரும் தமிழ்மொழியிலுள்ள சைவ, வைஷ்ணவ, இஸ்லாமிய, சமண, கிறீஸ்தவ இலக்கியங்களை நன்கு உணர்ந்து பொதுமை பெற வேண்டும் என்னும் இலக்கைக் கொண்டது. இந்த வகையில் பழைமையும் புதுமையும் சேர்ந்து அமைந்தது தமிழ் இலக்கியம் என்னும் பாட நூல்.

மாணவர்கள் தேர்வுக்காகப் படிக்கும் அதே வேளையில் இலக்கியங்களை மேலும் கற்க வேண்டிய ஆவலையும் தூண்டுவதாக அவை அமைதல் வேண்டும். இவ்வாறு அமைய வேண்டுமானால் மாணவருக்குத் தெளிவான விளக்கம் தேவை.

அந்த வகையில் பழைமை இலக்கியங்களில் மூழ்கிப் புதுமை இலக்கியங்களைப் படைப்பவரும் ஆய்வாளரும் தமிழில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றவருமான வித்துவான் க. சொக்கலிங்கம் M. A., மாணவர்களின் சுமையை நீக்கவும் எம் போன்ற தமிழ் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் இடர்களை அகற்றவும் தமிழ் இலக்கிய வினாவிடை ஒன்றினை எழுதி வெளியிட்டுள்ளார்.

1. பல பயன்களை அது நல்குவதாக உள்ளது. தமிழ் கற்பிக்கும் பல்வேறு மதங்களைச் சார்ந்த ஆசிரியர்கள் முக்கியமாக இஸ்லாமிய இந்துமத ஆசிரியர்கள்— பிறமத சம்பந்தமான தகவல்களை இலகுவாகப் பெறக் கூடியதாக உள்ளது.

2. புலவர்கள் எழுத்தாளர்கள் ஆகியவர்களைப் பற்றிய முன்னறிவை வழங்குவதாக உள்ளது.

3. பாடநூலில் தரப்படாது விடுபட்ட அரும்பதங்கள் பலவற்றின் பொருளைக் கொண்டதாக உள்ளது.

4. நாலடியார் போன்ற காலத்தால் முந்திய செய்யுள்களிலிருந்து நாம் வாழும் காலம் வரையுள்ள செய்யுட் பகுதிகளுக்கு ஏற்ற விளக்கம் தரப்பட்டுள்ளது.

5. இந்து மாணவர்கள் இஸ்லாமிய இலக்கிய சம்பந்தமான விளக்கங்களைப் பெற உதவுவதுபோல இஸ்லாமிய மாணவர்கள் இந்து இலக்கிய சம்பந்தமான விடயங்களையும் இலகுவாகக் கிரகிக்கும் வண்ணம் ஆக்கப்பட்டுள்ளது.

6. பொதுவாக மாணவர் தாம் தயாரிக்கப்புகும் ஒப்படைகள் தேர்வில் வரத்தக்க வினாக்கள் ஆகியவற்றுக்கு விடை பெறும் பாங்கில் அமைந்துள்ளது.

7. தமிழ் இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தகவல்களையும் மேலதிக விளக்கங்களையும் தேடி ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய தேவைகள் இன்றி அவர்களுக்கான கைந்நூல்போல அமைந்துள்ளது.

8. மாணவர்கள் முழுப் புத்தகத்தையும் புரட்டி, சாராம்சம் தேடும் பணியில் காலத்தைச் செலவிடாது சுருக்கப்பட்ட சாறு ஆகத் தமிழிலக்கிய வினாவிடை அமைந்துள்ளது.

9. எனவே நிச்சயமாக இந்த இலக்கிய வினா விடை மாணவரின் சுமையைக் குறைத்து தேர்வில் உயர்ந்த புள்ளிகளைப் பெறச் சிறந்த துணை நூலாகக் கொள்ளக் கூடியது.

10. மொத்தத்தில் நூலில் உள்ள 150 குறளை ஒத்த குறுகிய ஆனால் பொருள் பொதிந்த வினாக்கள் முழுப்பாடப் புத்தகத்தினையும் கற்றுப் பெற வேண்டிய பயன் யாவற்றையும் தந்து விடுகிறது. எனவே தமிழ் மாணவருக்கும் ஆசிரியருக்கும் இந்த நூல் ஒரு வரப்பிரசாதம் எனலாம். ★




# அறுபது-எண்பதுகளில் இந்திய அரசியல்

பாரத ரத்ன இந்திரா என்ற நூல் வெறுமனே ஒரு நாட்டுத் தலைவியின் வாழ்க்கைச் சரிதை] மட்டுமன்று. முதல் 15 பக்கங்கள் அன்னை இந்திராவின் வாழ்க்கையை எடுத்துச் சொல்வதாக அமைந்த போதிலும் அவருடைய சிறுபிராயத்திலே விளையாட்டிலே விளையும் பயிர் தெரிவதை இந்நூலின் ஆரம்பம் எடுத்துக் காட்டிய போதிலும் அவருடைய ஆளுமை வளர்ச்சி முதற்பாகத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிற போதிலும் இந்திய நாட்டின் தலைவிதி 60 களிலிருந்து 80 பதுகளின் நடுப்பகுதிவரை எவ்வாறு நிர்ணயிக்கப் பட்டது என்பதனை எடுத்துக் கூறுகின்ற ஓர் அரசியல் நடப்பியலை எடுத்துச் சொல்லும் நூல்.

| | |
|---|---|
| நூல்: | பாரத ரத்ன இந்திரா |
| ஆசிரியர்; | கண. சுபாஷ் சந்திரபோஸ் |
| வெளியீடு: | வீரகேசரிப் பிரசுரம் |
| அறிமுகம்: | வி. வி. எஸ். |

இந்திராகாந்தி முன்வைத்த 20 அம்சத் திட்டங்கள் இந்திய பாகிஸ்தான், இந்திய பங்களாதேஷ், இந்திய நேபாள [illegible] இந்திய அமெரிக்க இலங்கை இந்திய டாஸ்கன்ற் பிரகடனம் இன்னோரன்ன பல சர்வதேச அரசியல் விவகாரங்களை இந்திராவின் வாழ்க்கை வரலாற்றினூடாக எடுத்துச் சொல்லுகின்ற ஒரு நூலாக இது அமைகின்றது. இருப்பினும் இந்திராகாந்தி அணிசேரா இயக்கம் மூலம் உலக சமாதான முன்னேற்றத்திற்கு அளித்த பங்களிப்பு இந்த நூலிலே உரிய முறையிற் கையாளப் படவில்லை.

நூலாசிரியர் கண சுபாஷ் சந்திரபோஸ் நீண்ட காலம் பத்திரிகை அனுபவம் உள்ளவராக இருப்பதாலும் வெளிநாட்டு அரசியல் விமர்சன உலகிலே தனக்கென அவர் ஒரு முத்திரை பதித்திருப்பதாலும் அவர் ஒரு வரலாற்று நூலைப் புதிய கோணத்தால் உருவாக்க முடிந்திருக்கின்றது.

ஈழத்து அரசியல் இலக்கிய [illegible] இந்த நூலுக்கும் ஆசிரியர் [illegible] ஒரு தனி பீடம் உண்டு. ★

### இன்னும் விடியவில்லை

காகங்கள் கரைகின்றன;
வண்டுகள் ரீங்காரமிடுகின்றன
மந்த மாருத மயக்கத்தில்
மலர்கள்தம் விழிதிறக்கின்றன;
ஆ! விடிந்து விட்டதா?
கண்களைத் திறந்தேன்
இல்லை!! கனவில் விடிந்திருக்கிறது
நிஜத்தில் இன்னும் விடியவில்லை
ஆனால் நிச்சயம் ஒன்று: ''விடிவு''
விடிந்து கொண்டிருக்கிறது.

— லோகேந்திரன் கண்ணுத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுங்காவியம்

# புயல்வீசும் பூமி!

சித்திரங்கள் கண்ணீரால் சிதைமீட்டும்
செத்தையிலே 'ஷெல்' வீழ்ந்து கிலியூட்டும்
புத்தகங்கள் தீயினிலே எரியூட்ட......
பித்தடைந்த பீரங்கி பயமூட்டும்!
சத்தமின்றி வந்து 'சன்னதம்' செய்வதற்கு
'சாம்செலினை' மனமொண்ணி வலுவூட்டும்
எத்தனைநாள் இத்தரையில் ரத்தவெறி
என்றநிலை வந்தபின்னே சொத்தேனோ?

மெத்தையிலே நித்திரையில் மிதக்கின்ற மேன்மைமிகு
மக்கள் தலைவரெலாம் மதிமயங்கிப் போனதினால்
சித்திரையில் வந்து ஒளிவீசிச் சிரிக்கின்ற
சிறுநிலவு கூடச் செத்தழிந்து விட்டதுகாண்;
பைத்தியங்க ரைசவையில் பெருகியதால் மண்ணில்
புத்தொளியை வீசும் சூரியனும் கறுக்கிறதோ?
எத்தனைநா ளிம்மண்ணி லடிமைவாழ்வு?
என்றுவரும் எம்மினத்தின் விடுதலைநாள்?

பொங்கியமும் பூமியிலா புயல்வீச வேண்டும்?
பொருமுகின்ற நெஞ்சினிலா புரையேற வேண்டும்?
செங்குருதி பொங்கியெழச் சங்கமித்த பூமி
செத்தழிந்து எத்தனைநாள் சிறுமையுடன் வாடும்?
தங்கமணித் தாய்த்திருநாடு என்று ஒளியை வீசும்
தமிழினத்தின் துயரமெலாம் என்றழுது தீரும்?
வங்கமெனும் பெருங்கடலில் வீசுகின்ற புயலால்
வாழ்வழிந்து போயிடினும் விடிவுதனைக் காண்போம்!

மலர்மணத்தை நுகர்ந்து மகிழும்நா ளென்றோ?
மனிதனெனப் பூமியிலே திகழும்நா ளென்றோ?
புலரும் ஒளியினிலே சுதந்திரத்தின் பெருமையெலாம்
பூத்துநின்று விடுதலையால் பூரிக்கும் நாளென்றோ?
உலரும் குருதியிலே உணர்வுகளின் தீக்கொழுந்து
அணைந்து சுகமிங்கே அடையும்நாள் என்றோ?
கலைந்துவிட்ட பாசக் கயிறுதனை மீண்டும்
கட்டியெழுப்பிக் களிக்கின்ற நாளென்றோ?

ஆடையிழந்து...அரும்பொருளை இழந்து...
கோடையிலே வந்து வீசுகின்ற குளிர்நிலவின்
வாடையினை இழந்து வருந்துகின்றோம்...
பீடையிலே சிக்கிப் பொருமுகிறோம்......
பாடையிலே எம்மினத்துப் பிணங்கூடப்
பக்குவமாய்ப் போவதற்கு வழியின்றி
ஓடையிலே சிக்கித் தவிக்கின்ற உறுமீன்போல்
எப்போதும் இம்மண்ணில் கலங்குகிறோம்!

வீடின்றி எந்நாளும் வாழ்ந்திடலாம்...(கை)
விலங்குடனே எத்தனைநாள் வாழ்வது?
ஏடின்றி எதனையுமே படித்திடலாம்...
எம்மரிய விடுதலையைப் படிப்பதென்று?
கூடின்றி வாழும் குருவியினம் போலே
குமுறி அழுதழுது எத்தனைநாள் கலங்குவது?
நாடின்றி எவனொருவன் வாழுகின்றானோ
நாய்களையும் விட அவனே கீழோனவான்!
(தொடரும்)

— மு. வே. யோ. வாஞ்சிநாதன் —

## விமானங்கள் மட்டுமா ஏறுகின்றன?

சஞ்சீவி சிறுகதை

முருகேசு மாஸ்டரின் முகத்தில் படர்ந்திருந்த சோகத்தைப் பார்த்தபோது எதுவும் கேட்கத் தோன்றவில்லை கனகத்துக்கு. நடந்ததை ஒருவாறு ஊகிக்க முடிந்தது அவளால். வழக்கம் போல, மகளின் கலியாணப் பேச்சில் இந்த முறையும் ஏதோ சிக்கல் என்று புரிந்துகொண்ட அவளால் அதனைத் துருவி விசாரிக்க முடியவில்லை.

பொதுவாகவே யாழ்ப்பாணத்து நடுத்தரவர்க்கக் குமர்களுடைய கல்யாணம் போலவே அவர்களுடைய மூத்தமகள் மோகனாவின் கல்யாணமும் கடந்த நாலைந்து வருடமாக இழுபறிப்படுகிறது.

திம்புப் பேச்சுவார்த்தை, புதுடில்லிப் பேச்சுவார்த்தை, பங்களூர்ப் பேச்சுவார்த்தை என்று நீண்டு செல்லும் தமிழர் பிரச்சினை போலவே மோகனாவின் விடிவுக்கான முஸ்தீபுகளும் நீண்டுகொண்டே போயின.

சோதிடர் பேச்சுவார்த்தையுடன் சிலவும், சீதனப் பேச்சுவார்த்தையுடன் சிலவும் என ஒவ்வொன்றாக முறிந்து போயின. கடந்தவாரம் தொடங்கிய பேச்சு மூன்றும் கட்டத்தையும் தாண்டித் தீர்வுக்கு மிக அண்மையில் வந்து விட்டதாகவே இவர்கள் நம்பிக்கையுடன் இருந்தனர்.

மாப்பிள்ளை கடையொன்றில் பொருள்களை நிறுக்கும் வேலைதான் செய்கிறாரென்றாலும், 'நல்ல குணமான பொடியன்' என்று இவர்களுக்கு நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. மேலும், இவர்களுடைய தராதரத்துக்கு இதற்கு மேல் மாப்பிள்ளை 'பிடிபடுவது' கஷ்டம். அதையும்விட, இந்தப் பொடியன்தான் மோகனாவின் மாப்பிள்ளையெனப் பிரமதேவன் எழுதிவைத்திருப்பதைத்தான் வாசித்ததாக இவர்களுடைய குறிப்புகளைப் பொருத்தம் பார்த்த சோதிடர் அடித்துச் கூறியிருந்தார்.

சீதன விஷயத்திலும் கொஞ்சம் விட்டுக் கொடுக்கும் மனோநிலை தென்பட்டதால் இவர்கள் 'சிக்' கெனப் பிடித்துக்கொண்டார்கள். நேற்றைய பேச்சுவார்த்தையின் பின் 'பந்து' அவர்களின் பக்கம்தான் நின்றிருந்தது. ''தம்பியிட்டை மூற்றுக் கேட்டுப் போட்டு நாளைக்குச் சொல்லிறம்'' என்று அவர்கள் சொல்லியிருந்தனர்.

இன்றைக்குக் காலையில் எழுந்து காலைக்கடன்கள் முடித்தகையோடு தமது அன்றாடக் கடமையான ''புலிகளின் குரல்'' வாசிப்பதைக்கூட ஒத்திவைத்து விட்டு அவர்கள் வீட்டிற்குப் போன முருகேசு மாஸ்டர் வாடிய முகத்துடன் வந்திருக்கிறார். ஏதோ காரணங்களைக் காட்டி இப்போது பந்து இவர்கள் பக்கம் உருட்டி விடப்பட்டிருக்கிறது என்பதைக் கனகம் புரிந்து கொண்டாள்.

தன்னையே பரிதாபமாகப் பார்த்துக்கொண்டிருந்த மனைவியைப் பார்த்து விஷயத்தை இறக்கினார் முருகேசு மாஸ்டர்.

''மாப்பிள்ளை காணி வேண்டாமாம், காசுதான் வேணுமாம்''

''ஏன் இப்ப புதுக் கதையாய்க் கிடக்குது?''

''கலியாணம் முடிச்ச உடனை மாப்பிளை வெளிநாட்டுக்குப்போப்போறாராம். அதுக்கு ஐம்பதினாயிரம் தேவையாம். அதை டொனேஷனாய்த் தரட்டாம்''

கனகத்திடமிருந்து பெருமூச்சுக்கிளம்பியது. ஐம்பது என்பது என்ன நினைத்தவுடன் புரட்டக் கூடிய தொகையா? தங்களிடமிருந்த ஒரேயொரு தோட்டக்காணி நாலுபரப்பையும் எழுதுவதாகவும், சீதனமாக முப்பதினாயிரம் தருவதாகவும் நகைகள் போடுவதாகவும்தான் பேச்சு. இப்போது காணிக்குப் பதில் காசு வேண்டுமாம்.

முப்பதினாயிரமும் மோகனாவின் பெயரில் வங்கியிலிடப்படவேண்டும். நகைகளை அவளே வைத்திருக்கட்டும். அவற்றில் கைவைக்காமல் வெளிநாடு போவதற்காக ஐம்பதினாயிரம் டொனேஷன் வேண்டும். இதுவே மாப்பிள்ளை வீட்டாரின் புதிய கோரிக்கை. பெண்ணுக்கு வீடு கொடுக்காதபடியால் மாப்பிள்ளை வெளிநாடு போய் உழைத்து வந்து காணிவாங்கி வீடு கட்டுவாராம்.

இரண்டு வருடங்களுக்கு முன் அந்தக் காணியின் மதிப்பு முக்கால் இலட்சம். ஆனால், அப்போது கேட்டவர்களுக்குக் கொடுக்காமல் வைத்திருந்தார் முருகேசு வாத்தியார். காணியை விற்பது சுலபம். பிறகு தேவைக்கு வாங்கமுடியாது என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார் அவருக்கு அந்தக் காணியின் மதிப்பு நன்கு தெரிந்திருந்தது அவர் பெறும் சம்பளம் அவர் குடும்பத்துக்குப் போதவில்லை. இந்தக் காணியில் அவர் சிந்திய வியர்வைதான் இன்று முப்பதினாயிரம் ரூபாயாவது மகளுக்காகச் சேமித்து வைக்க முடிந்தது.

இப்போதும் அந்தக் காணியை விற்பதற்கு அவருக்கு மனமில்லை.

ஆனால் மக்களின் கல்யாணம் ஒப்பேறியாகவேண்டும். பணத்துக்கு வேறு எங்கே போவது?

காணிக்கு இப்போது மதிப்பில்லை. விற்பவர் வாங்குபவர்களும் குறைவு. இடையில் தரகர்களுக்குக் கொடுக்க வேண்டிய பங்கு ஒருபுறம். எப்படியாவது காணியை விற்பதற்கு ஓடித்திருந்தார் முருகேசு வாத்தியார். வலியவருகிறதென்றால் மதிப்பும் குறைவு தானே.

கடைசியாக நாற்பத்தையாயிரம் ரூபா தேறியது முருகேசு வாத்தியாருக்கு கைக்கடனும் போட்டு மட்டமாக்கிக் கொடுத்துக் கல்யாணத்தை ஒப்பேற்றி வைத்தார். கல்யாணமாகி இரண்டு மூன்று வாரத்தில் மாப்பிள்ளை கமலநாதன் வெளிநாடு பயணமானான்.

போன அடுத்தமாதத்திலிருந்து வெளிநாட்டுக் கடிதங்கள் அவ்வப்போது வந்தன. ஆனால், 'செக்' ஒன்றும் வரவில்லை. கமலநாதன் அங்கு மிகவும் கஷ்டப்படுவதாகவும், வேலை கிடைக்கவில்லை எனவும் கடிதம் வந்தது.

மோகனாவின் வயிற்றில் கமலநாதனின் வாரிசு வளர்ந்தது. முருகேசு வாத்தியாரின் கடனும் வட்டியும் வளர்ந்தன.

ஒரு வருட முடிவில் மோகனாவின் தலைப்பிரசவம் மிகுந்தசிரமத்துடன் சத்திர சிகிச்சையாக நடைபெற்ற போது அவளின் நகைகள் அடைவில் மூழ்கின. முருகேசு வாத்தியார் பல ஆயிரம் கடலில் மூழ்கினார். கமலநாதன் சில ஆயிரங்களை அனுப்பத் தொடங்கினன்.

வாத்தியாருக்குக் காணியின் வரும்படி இல்லை. தனியே சம்பளம் குடும்பத்தை நடத்தப் போவதில்லை. கல்யாணம் கட்டியும் மகள் தமக்குச் சுமையாகவே இருக்கிறாள் என்ற ஆதங்கம் சில வேளைகளில் வார்த்தைகளாக வெடித்தன.

இரண்டு வருட முடிவில் கமலநாதன் வீடு திரும்பிய போது கடன்கள் ஒரு வகையாக ஒழிந்து குடும்பம் தலை நிமிர்த்தியிருந்தது. ஆனால், குடும்பத்தில் உட்பூசல்கள் நிறைய வளர்ந்திருந்தன. தமக்கொரு தனி வீடு தேவை என்பதைக் கமலநாதனும் மோகனாவும் உணர்ந்தனர். முன்பு விற்ற காணி இருந்திருந்தால் ஒரு கொட்டிலையாவது போட்டிருக்கலாம்என்று மோகனா இடித்துரைத்தபோது கமலநாதனுக்கு ஆற்றாமையும் ஆத்திரமும் பொங்கியது.

அதே காணியை மீண்டும் வாங்கிவீடு கட்டியே தீர்வதெனச் சபதமெடுத்த கமலநாதன் மோகனாவை ஒரு வாடகை வீட்டில் குடியமர்த்திவிட்டு மறுபடி வெளிநாட்டுக்கு ஓடினான்.

இரண்டாவது குழந்தையை மோகனா பெற்றெடுத்த போது கமலநாதன் சற்றுப் பணக்காரனாக வந்திறங்கினான். இவர்களுடைய காணி இப்போது மூன்றாவது கைக்கு மாறியிருந்ததுடன் விலையும் நன்கு ஏறியிருந்தது. தரகர்களிடம் ஓடினான் கமலநாதன் மூன்றாவது தடவை ஒரு கொழுத்த வேட்டை கிடைக்கப் போகிறது எனச் சப்புக்கொட்டியபடி ஓங்குமங்கும் ஓடித்திருந்தனர் தரகர்கள்.

இம்முறை தான் உழைத்த பணத்தில் அந்தக் காணியை வாங்கி சின்னதாக ஒரு வீட்டையும் கட்டிக் கொண்டு இங்கேயே ஒரு சிறு வேலையைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டு

(8 ஆம் பக்கம் பார்க்க)

- கோப்பாய் சிவம் -

# நன்னீர்க் குளங்களின் பொது இயல்புகள் (V)

பாடம் பயில்வோம்

பாடசாலை மாணவர்கள் குறிப்பாக க.பொ.த. சாதாரணதர உயர்தரவகுப்பு மாணவர்களின் நலன்கருதி அவர்கள் பயிலும் பாடங்களுக்கு உசாத்துணையாக அமையும் ஆக்கங்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளியாக உள்ளன.

**அளவீடுகள்**

நன்னீர்க் குளச்சூழலை ஆராயுமுகமாகப் பல தரப்பட்ட அளவீடுகளை மேற்கொள்ளவேண்டியிருக்கும். காணிகளின் அடிப்படையிலேயே அளவீடுகளும் அமையும்.

**படம் வரைதல்**

குளத்தின் படம் வரைந்து அதில் தேவையான குறிப்புக்களைப் போட்டுவைத்திருப்பது அவசியம். படம் அளவுப் பிரமாணத்திற்குரியதாக இருப்பது அவசியம். படம், மேற்பரப்புப் படமாகவிருக்கலாம். நீர்ப்பரப்பைக் காட்ட இது உதவும். அல்லது பக்கக்கோட்டுப் படமாகவிருக்கலாம் (Profile). இது உண்மையில் குளத்தின் வெட்டுமுகத்தைக் காட்டும் படமாகும். பக்கக்கோட்டுப் படம் குளத்தின் ஆழத்தைக் காட்டும். குறிப்பிட்ட இடத்தில் குளத்துக்குக் குறுக்காக ஒரு கயிற்றைக்கட்டி ஒவ்வொரு மீற்றர் தூரத்திற்கும் ஆழத்தை அளந்து பக்கக் கோட்டுப்படம் தயாரிக்கலாம். கயிற்றுடன் தொடர்பாகவுள்ள தாவரங்கள் விலங்குகளைக் குறித்து, படத்திலேயே தாவரங்கள் விலங்குகளின் பரம்பலையும் குறித்துக்கொள்ளலாம்.

**கணக்கெடுத்தல்**

குளத்துடன் தொடர்பான சகல பௌதிக, இரசாயன அளவீடுகளை எல்லாம் பெற்றுக் கொள்ளவேண்டும்.

உயிரியல் அளவீடுகளைப் பின்வரும் முறைகளில் பெற்றுக்கொள்ளலாம். குளம் சிறியதாக இருந்தால் பரவலாக முழுகுளத்தையும் அளவீட்டுக்கு உள்ளாக்கலாம். பெரியதாகவிருந்தால் ஆங்காங்கே கோட்டுக் குறுக்கு வெட்டுக்கள் (Line Transects), பட்டிக்குறுக்கு வெட்டுக்கள் (Belt Transects) வாயிலாகப் பெற்றுக்கொள்ளலாம். நாற்பக்கவுரு (Quadract) வைப் பயன்படுத்தி எழுந்தபடி மதிப்பீடுகள் வாயிலாகவும் பெற்றுக்கொள்ளலாம். அங்கிகளிடையே காணப்படும் உணவுத் தொடர்கள் (உணவுச் சங்கிலிகள், உணவு வலைகள் உணவுக் கூடம்பகங்கள்) அறியப்படுவதன் வாயிலாக குளச்சூழலில் நிகழும் சத்தியோட்டத்தை—அதன் பாதையை—அறிய முடியும். மேலும் போசணை முறைகளையும், நடத்தைகளையும் அறிவதன் வாயிலாக அங்கிகளின் திதிகளையும் (Niche) அறிந்துகொள்ள முடியும்.

**நற்போசணையடைதல்**

நன்னீர்க்குளச்சூழலில் ஒரு குறைபாடு ஏற்படவும் வழியுண்டு. சூழலிலிருந்து சேதனவுறுப்பிற்குரிய அழுக்குகள் சேருவதனால் முதலில் தாவரங்களில் அதிகரித்த வளர்ச்சி ஏற்படும். இது அல்கா மலர்ச்சி எனப்படும். தொடர்ந்து ஒட்சியன் பற்றாக்குறை காரணமாக அங்கிகள் இறக்க ஆரம்பிக்கும். இக்காலகட்டத்தில் ஆரம்பத்தில் அழுகல்வளரிகள் தொகையிலதிகரிக்கும், பின் சகல உயிரிகளும் பெரும்பாலும் இறந்துவிடும் ஈற்றில் குளம் ஒரு உயிரியல் வனந்தரமாக மாற இடமுண்டு.

*

**தாவரங்களில் காணப்படும் தற்காப்புப் பொறிமுறைகள்**

அங்கிகள் சூழலுடன் இயைந்துவாழுவதுடன், தப்பிவாழுவதற்கும் இசைவாக்கங்களைக் கொண்டிருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவை நிலைத்துவாழ முடியும். நோக்கம் ஒன்றாக இருக்கும்போது இசைவாக்கமும் தாவரங்கள் விலங்குகள் என்ற வேறுபாடின்றி ஒரே வகையினதாக இருப்பதுண்டு.

நில வாழ்க்கைக்குரிய தாவரங்கள் உலர்வதிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்குப் புறத்தோல் என்ற போர்வையைக் கொண்டிருப்பதுண்டு. சில இன விலங்குகளிலும் இத்தகைய போர்வையுண்டு.

புல், பூண்டுகள், செடிகளுக்குள் மேயும் விலங்குகளிலிருந்தும், காந்தும் விலங்குகளிலிருந்தும் போதிய பாதுகாப்புக் கிடைப்பதில்லை. ஆனால் உயரமான மரங்களோ இத்தகைய விலங்குகளிலிருந்து தப்பித்துக்கொள்ளும். (ஆயினும் இத்தகைய தாவரங்களையும் உணவாகக் கொள்ள ஒட்டகச்சிவிங்கி, யானை போன்ற விலங்குகளுண்டு. இதுதான் இயற்கையின் நியதி.) நிலத்தில் படரும் கொடிகளைக் காட்டிலும் மரங்களில் ஏறிப்படரும் கொடிகளுக்கு மேயும் விலங்குகளிலிருந்து கூடிய பாதுகாப்புக் கிடைக்கும். சிலதாவரங்கள் நிலக்கீழ்த்தண்டுகளைக் கொண்டிருப்பதனால் மேயும் விலங்குகளிலிருந்து தப்பமுடியும். தகாதகாலங்களைக் கழிப்பதற்கும் இது உதவும். (ஆயினும் பன்றி, அகளான்போன்ற விலங்குகளிலிருந்து இவை தப்பமுடியுமா?)

இத்தகைய சாதாரண இசைவாக்கங்களைத் தவிர தாவரங்களில் பாதுகாப்பிற்கென சிறப்பான பொறிமுறைகளுமுண்டு. அத்தகைய பொறிமுறைகளைச் சுருக்கமாக ஆராய்வோம்.

(வளரும்)

- கே. எஸ். குகதாசன் -
(அதிபர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி)



முன்னைய இதழில் படத்தின் விளக்கம் தரப்பட்டுள்ளது.

## ஒருமைப்பாட்டை உணர்த்திய உத்தம நபிகள்

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் உலகம் கண்ட பலபெரும் சீர்திருத்த வாதிகளிலெல்லாம் தலை சிறந்தவராக பல்கலை வித்தகராக, பண்பாளராக, அன்பாளராக, ஈடியணையற்ற இறையம்சம் கொண்ட தேவதூதராக தனக்குக் காட்சியளிப்பதாக ''ஹிட்டி'' சரித்திரப் பேரறிஞர் ஒருவர் தனது சரித்திர ஏட்டில் பதித்துள்ளது உலகம் காண அறியப்பட்டுள்ளது.

உலக சரித்திர ஏடுகளை நாம் புரட்டினால் பெருந்தலைவர்கள் எனப் புகழப்படுபவர்கள் அனைவரும் ஏதாவது ஒரு துறையில் மட்டும் சிறந்திருந்தனர். ஆனால் நபிகள் நாயகம் அவர்களோ எல்லாத் துறைகளிலும் சிறந்த பண்டிதராக - பல்கலை வித்தகராக வாழ்ந்து காட்டினார் என்பதை திருக்குர்ஆன் ''நாம் உம்மை மக்களுக்கு ஒரு முழுமையாக அனுப்பினோம்'' எனப் புகழ்கிறது.

மனித இனத்தை மனித இனத்துடன் மட்டுமன்றிஎல்லாப் படைப்புகளுடனும் ஒற்றுமைப்படுத்திய பெருமை நாயகம் (ஸல்) அவர்களையே சாரும்.

''நீ எதை விரும்புகிறாயோ அதனையேஉனது சகோதரனுக்கும் அளித்திடுக'' என்றார்கள் நாயகமவர்கள். இதனையே புனித குர்ஆன் ''நீங்கள் உங்களுக்குப் பிரியமானதை செலவு செய்யாதவரை நலனை அடைய முடியாது'' என்று கூறுகிறது.

''வானத்திலும் பூமியிலும் உள்ள எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டுங்கள்'' என்றும்.

''எவன் மக்களுக்குக் கிருபை செய்யவில்லையோ அவனுக்கு அல்லாஹ் கிருபை செய்ய மாட்டான் என்றும் மக்களுக்கு அறிவுரை பகர்ந்தது மட்டுமின்றி தானும் வாழ்வில் செயலில் செய்து காட்டினார்கள் நாயகம் (ஸல்) அவர்கள்.

ஏற்றத்தாழ்வற்ற ஏற்றமிகு சமுதாயம் ஒன்றை அமைக்க வழி வகுத்த நபிபெருமானார் அவர்கள் வேறுமதக் கொள்கை கொண்டவர்களையும் தனது நேசிப்புக்குரியவர்களாக மதித்தார்கள். தன்னை மிகக் கொடுமைக்குள்ளாக்கி சொல்லொணாத் துயர் கொடுத்த 'தாயிபு' மக்களை நோவாமல், சபிக்காமல் அவர்கள் நல்வழி பெற அல்லாஹ்விடத்தில் 'துஆ' செய்தார்கள். ஆணவத்தால், அதிகாரத்தால் நிலைபெறச்செய்யமுடியாத விஷயங்களை, அன்பால், பண்பால், பாசத்தால் பழக்கச் செய்யமுடியும் என்பதைச் செயலில் காட்டினார்கள்.

இஸ்லாத்திற்கு நேர் விரோதிகளாக இருந்த கிறிஸ்தவர்கள், யூதர்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களில் யாராவது நோய்வாய்ப்பட்டிருந்தாலும் அவர்களிடமே சென்று நாயகம் (ஸல்) அவர்கள் நலம் விசாரிப்பார்கள். அவர்கள் உடல் நலம்பெற இறைவனிடத்தில் பிரார்த்திப்பார்கள். ஒருதடவை 'ஏமாற்றுகாரர்களின் தலைவன்' எனப் புகழப்பட்ட இஸ்லாத்திற்கு எதிராக விரோதம் கொண்டிருந்த 'அப்துல்லா பின் உபை' என்பவன் கடும் நோயால் அவதிப்பட்ட போது, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவனது இல்லம் சென்று உடல்நலம் விசாரித்து அல்லாஹ்விடம் துஆச் செய்தார்கள்.



காபிர்களின் தலைவனான அபூஜஹ்ல் ஒருமுறை ஒரு பள்ளத்தில் விழுந்து எழுவதற்குத் தத்தளித்தபோது அவனுக்குக் கைகொடுத்து உதவி கரைசேர்த்தார்கள் நாயகம் (ஸல்) அவர்கள். இன்றுவரை முஸ்லிம்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களது பூதவுடல்சென்றாலும்எழுந்து நின்று மரியாதை செய்து வருவது நாயகத் திருமேனியவர்கள் காட்டிய முன்மாதிரியாகும்.

புனித குர்ஆனையே தனது நல்லொழுக்கமாகக் கொண்டிருந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வில் ஒற்றுமை, ஒருமைப்பாட்டிற்கு வித்திட்டு வளர்க்க வேண்டிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

- ஏ. ஸபாஅத் அஹ்மட் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு இணைப்பை ஆதரிப்பதுடன் முஸ்லிம்கள் தமிழருடன் இணைய வேண்டும்

"வடக்கு கிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் வரவேற்க வேண்டும்"- -இவ்வாறு இந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்ட சர்வதேச முஸ்லிம் இளைஞர் அங்கத்துவச் சங்கத்தின் (Y. M. M. A) 8 பேர் கொண்ட குழுக்கள் சார்பில் இலங்கைக் கிளைத் தலைவர் அல்ஹாஜ் எம். அஷ்ரப் ஹுசைன் சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தின் அரசியல் சூழ்நிலையும் -முஸ்லிம் மக்களின் நிலையினையும் பற்றி ஆராயும் நோக்குடன் வந்திருந்த அல்ஹாஜ் எம். அஷ்ரப் ஹுசையின் (தலைவர் சர்வதேச வை. எம்.எம். ஏ.) அல்ஹாஜ் எம் என்.

## வை. எம் எம். ஏ. தலைவர் பேட்டி

அமீர்தீன் (பிராந்தியப் பணிப்பாளர் வை. எம். எம். ஏ.) ஜனாப் எம் ஐ. எம். ஹலீல் (மாவட்டத் தலைவர்), ஜனாப் ஜிப்ரி ஹனிபா (மாவட்டப் பணிப்பாளர்) ஜனாப். எம். ஏ, எம். நிலாம் (பிரச்சாரப் பணிப்பாளர்), ஜனாப் எம். எஸ். எம். ஹுசைன் (இஹாரியா கிளைத் தலைவர் ஜனாப் முராத் சுலைமான் (குருநாகல் மாவட்டத் தலைவர்) ஜனாப் சாமில் இமாம்தீன் (பல்கலைக் கழக இணை அமைப்பாளர்) ஆகிய எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட குழு கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது.

குழுவின் தலைவர் அல்ஹாஜ் எம். அஷ்ரப் ஹுசைன் சஞ்சீவிக்கு அளித்த பேட்டி வருமாறு:-

கேள்வி: யாழ்ப்பாணத்திற்கு தாங்கள் மேற்கொண்ட விஜயத்தின்போது இங்குள்ள முஸ்லிம்மக்களைச் சந்தித்தீர்களா?

பதில்: முதலாவதாக நாம் அதைத்தான் செய்தோம். அவர்களது குறையினைக் கேட்டறிந்தோம். தென்னிலங்கையில் இருந்து அரசின் தூதுக்குழுவாக நாம் வந்திருப்பதாக அவர்கள் முதலில் கருதினர். வடபகுதிக்கு வரவிருக்கும் அமைச்சர்களின் விஜயத்துக்கான முன்னோடிப் பயணமாக எமது வருகையை அவர்கள் நினைத்தனர். தென்னிலங்கை முஸ்லிம்களின் தலைவர்கள் தம்மை இதுவரையும் எவ்விதத்திலும் கவனிக்கவில்லை என அவர்கள் கூறினர்.

கேள்வி: வடபகுதி அரசியல் வாதிகளும், அரசியற் கட்சிகளும் எவ்விதத்தில் முஸ்லிம் மக்களுடன் இணைந்திருந்தனர் என்பது பற்றிய கருத்தையும் தெரிவித்தார்களா?

> "தமது கலாச்சார மொழி உரிமையினைப் பாதுகாக்க முஸ்லிம் இளைஞர்களும் - தமிழ் இளைஞர்களுடன் இணைந்து போராட வேண்டும்".

பதில்: பல்வேறு விதங்களிலும், தாம் வடபகுதி தமிழ்த் தலைவர்களால் புறக்கணிக்கப்பட்டதாகவே முஸ்லிம்கள் கருதுகின்றனர். தமக்கு சரியான அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்பது அவர்களது பெரும் குறையாக இருந்தது. தொழில் வாய்ப்புக்களிலும் கல்வித்துறை அபிவிருத்தியிலும் கூட தாம் புறக்கணிக்கப்பட்டதாக் உணர்கின்றனர். கடந்த கால மாவட்டசபைப் பிரதிநிதித்துவத்திலும், மாநகர சபைத் தேர்தல்களிலும் ஓரிரு பிரதிநிதித்துவத்தை மட்டும் வழங்கி எம்மைத் திருப்திப்படுத்தமுனைந்ததைத் தவிர சரியான பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை.

கேள்வி: விடுதலை இயக்கங்களைச் சந்தித்திர்களா? அவர்களது நிலைப்பாடுகள் (முஸ்லிம்களைப் பொறுத்து) எப்படி?

விடுதலைப் புலிகளைச் சந்தித்தோம். திரு. திலீபனுடன் மனம்விட்டுக் கதைத்தோம், தேசிய இனமாக முஸ்லிம் மக்கள் தமிழ் இனத்தை விட்டுப் பிரிந்து தனி இனமாக இயங்க முடியாத நிலையினை அவர் தெரிவித்தார். ஒரு தேசிய இனத்துக்கான தனி அம்சங்களான நான்கு அம்சங்கள் பற்றிக் கூறினர். மொழி, கலை, கலாச்சார பண்பாடு, சமூக பொருளாதார நிலை. பாரம்பரியமான வாழ்விட எல்லை- என்பனவற்றைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் தமிழ்த் தேசிய இனத்துடன் இணைந்தவர்களே என்ற கருத்தில் இறுக்கமான நம்பிக்கை கொண்டவராக அவர் இருந்தார்.

கூட்டணித் தலைமை முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைத்ததாகவும்—எதிர் காலத்தில் எமது நடவடிக்கை மூலமே முஸ்லிம் மக்கள் எம்மை நம்பும் வழிக்கு நாம் கொண்டுவர வேண் எனவும் எனவும் கருத்துக் கொண்டிருந்தனர்.

### வடக்கு-கிழக்கு இணைப்பு

கேள்வி:- வடக்குக் கிழக்கு இணைப்பற்றியும்- முஸ்லிப்களின் நிலை பற்றிரிம் உங்கள் கருத்து என்ன?

பதில்:- நிச்சயமாக நாம் வடபகுதிக்கு வர முன்பு வேறுபட்ட கருத்தையே கொண்டிருந்தோம். ஆனால் வடக்குக்



கிழக்கின் இணைப்பு மிக முக்கியமானதெனவும், முஸ்லிம்மக்கள் தமிழர்களுடன் இணைந்து வாழ்வதைத் தவிர தமது மொழி, கலாசாரப் பண்பாட்டினைப் பேணிப் பாதுகாக்க வேறு வழி இல்லை என்பதை மிகத் தெளிவாக உணர்ந்துள்ளோம்.

கேள்வி:- தமிழ்—சிங்கள—முஸ்லிம் மக்க

(9 ஆம் பக்கம் பார்க்க)

செல்வி. கே. எஸ். ராஜு

## கவிதை மன்னன்

சாதியெனும் தாழ்வுயர்வுப் பேதம் காணச்
சகிக்க' த தமிழினத்தின் தந்தை! இங்கோர்
வேதியனே ஆனதினுல் வேள்வித் தீயின்
விறகுயர வைப்பதற்கே வழிகள் செய்தான்!
ஆதிசிவன மைந்தரடா தமிழன் என்றான்!
அவர்களுக்கா அடிமைநிலைச் சாதியென்றான்!
போதிமரக் காட்டினிலோர் புரட்சி தோன்ற
போர்முரசம் கொட்டியவன் பார்ப்பான்
என்போம்!

வருணனைக்குள் அடங்காத கவிதை மன்னன்!
வருங்கால்ம் உரைப்பதற்கே வல்ல ஞானி!
ஒருவனுக்கு உணவில்லை என்றால் இந்த
உலகினையே ஒழிப்பதெனச் சொன்ன பாரதி!
உருசியத்து யுகப்புரட்சி பாடும் போழ்தில்
ஒருபகவான் கீதையதில் சேட்கும் போழ்தில்
உருகுதடா சிந்தையெல்லாம்! உண்மைக்காக
உதறியவன் பூநூலைப் போற்றி வெல்வோம்

— திருமலை பாரதிபாலன்

## விமானங்கள்...

((4ஆம்பக்க தொடர்ச்சி)

மெனத் தீர்மானித்திருந்தான். மோகனாவும் அதையேதான் விரும்பினாள் எவ்வளவு காலம் தான் இங்கேயும் அங்கேயுமாகப் பிரிந்திருப்பது?

நாற்பத்தையாயிரம் ரூபாவுக்கு விற்ற தமது அதே காணியை இப்போது அவர்கள் மீண்டும் வாங்க முற்பட்ட போது அதன் விலை ஒன்றரை லட்சத்துக்கு உயர்ந்து விட்டிருந்தது திகைத்தே விட்டான் கமலநாதன். காணியை வாங்கிய பின் மீதி இருப்புக் கணக்கைப் பார்த்தான். இருபத்தையாயிரத்திச் சொச்சம்... ... ... இதை வைத்து வீடு கட்டுவது எப்படி? பிறந்த இரண்டு குழந்தைகளும் பெண் குழந்தைகள். அவர்களின் எதிர்காலம்? தமது குடும்பத்தின் நாளாந்த வாழ்க்கை

மூன்றாவது வாரிசைஉருவாக்கிவிட்டு மூன்றாம் தடவை விமானம் ஏறுகிறான் கமலநாதன். இருந்த இடத்தில் இருந்தபடி நாற்பத்தைந்துஆயிரங்கள் ஒன்றரை லட்சமாகிய விந்தை இன்னும் அவனுக்கு வியப்பாக இருந்தது முருகேசு வாத்தியாரின் இரண்டாவது மகளுக்கு பேசிவந்த மாப்பிள்ளை வெளிநாடு போவதற்கு அறுபதினாயிரம் ரூபா டொனேஷன் வேணுமென்று கேட்டதற்கு எந்தக் காணியை விற்பதென்று தெரியாமல் தவித்தார் வாத்தியார்.

* ★ ★

## வேறு...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

திரத்தில் எனது பரம்பரைச் சொத்தாக விட்டுப் போவேன் என்று நினைக்கிறீர்களா? நீங்கள் கூறுகின்ற அந்தப் பெருந்தன்மையில் எனக்குத் தனிப்பட்ட அக்கறை உண்டு'—

—இப்படி திரு. ஜெயவர்த்தனா சொன்னார்.

சரியாகச் சொன்னார். இப்போது அது சரியாகச் செய்வதில் தான் தங்கி உள்ளது. *

## ஒருமைப்பாட்டை...

(4ஆம் பக்க தொடர்ச்சி)

உயர்வு இருந்ததில் வியப்பில்லை. ஏனெனில் திருமறையான திருக்குர்ஆனை எங்கெடுத்த போதும் மனித இனத்திற்கு வேண்டிய சட்டங்களும், வாழ்க்கை அமைப்புக்களுமே குறிப்பிடப்பட்டுள்ளன. தனி ஒரு மனிதனுக்காக எந்தச்சட்டமும் இயற்றப்படவில்லை.

எனவே திருக்குர்ஆனையே தனது உள்ள, உருவ, செயல், சொல் அமைப்பாகக் கொண்ட நாயகம் (ஸல்) அவர்கள் ஒற்றுமைக்கும், உயர்தக்கும், ஒருமைப்பாட்டிற்கும்வித்திட்டு வளர்த்வுதில் வியப்பில்லை. ★

## தனிநாயகம் அடிகளாரின் தமிழ், சமயப் பணிகள்

"கண்கள் பஞ்சடைந்து போகின்றன கால்கள் நடக்க மறுக்கின்றன தமிழ் பற்றோ என்னை விட்டு இன்னும் நீங்கவில்லை." என்று இறுதியாக நடந்த பகிரங்கக் கூட்டமொன்றில் உரையாற்றினர். தனிநாயகம் அடிகள் தனது உடல் வலுஇழந்தபோதிலும் அவர் தமிழ்ப் பணியே தன் பணி என்று ஓர் உயர்ந்த நோக்கத்துடன் இலட்சியத்தைக் கைவிடாது இலட்சிய புருஷராக தமிழ்நாடு போற்றும் தனிநாயகம் அவர்கள் வாழ்ந்தார். தனிநாயகம் என்ற பெயரிலேயே அவர்வாழ்க்கை அமைந்திருந்தது. சுயநலம் என்ற போர்வையை விட்டு தமிழ் உலகமெல்லாம் பரவ வேண்டும். தமிழ் ஓசை பாரல்லாம் பரவ வேண்டும் என்ற அந்த நோக்கத்துடன் வாழ்ந்தவர் தனிநாயகம் அடிகளார்.

ஈழம் என்னும் குறுந்தீவிலே உள்ள நெடுந்தீவிலே ஆயிரத்தித் தொளாயிரத்துப் பதின் மூன்றும் ஆண்டு ஆவணித் திங்கள் இரண்டாம் நாளிலே அறிவொளி சேவியர் தனிநாயகம் வந்துதித்தார். நெடுந்தீவிலே நெடுங்காலமாக கத்தோலிக்க சமயத் திலே ஊறித் திளைத் திருந்தனர் அவர் குடும்பத்தினர். அதனால் அவர் தனது ஆரம்பக் கல்வியினை காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியில் ஆரம்பித்தார்.



அதன் பின் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்றார். கல்லூரியின் விருது வாக்கியமான "இறைப்பற்றும் உழைப்பும்" அவரது வளர்ச்சிக்கு ஊன்று கோலாய் அமைந்தது. இளமையிலும் நுட்பமான மாட்சிமையுமுடைய, ஆராயவல்லதான அறிவு கொண்டிருந்த அவர் தனது பதினேழாவது பராயத்திலே கொழும்பில் உள்ள பொரளை செமினரியில் சேர்ந்து மறைக் கல்வி கற்றார். இளமையுடன் இறைமையும் இரண்டறக் கலந்து கொண்டது. தன் இருபத்தைந்தாவது வயதிலே மறைக் கல்வி கலாநிதிப் பட்டம் பெற்றார்.

இறை சேவையுடன் இணைத்து தமிழ் மறைச் சேவையையும் தரணியில் வளர்த்துவிட வேண்டும் என்ற வேணவாவினால் தமிழ்நாடு தூத்துக்குடியிலே 'கிறீஸ்த்தவ தமிழ் இலக்கிய மன்றம்' ஒன்றை அமைத்து ஆய்வுகளை நடத்தி வந்தார். தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவ வேண்டும் என்ற எண்ணத்துடன் தமிழ்த் தாய்க்கு மூதல் மகன் போல் அந்நிய நாடு ஏன் எம் அயல் நாட்டிலும் அவர் செய்த தமிழ்த் தொண்டு இன்றும்நினைக் கற்பாலது.

உலகத்தின் கண்போல் இருக்கும் திருச்சபையில் ஒரு குருவாக இருந்து ஆன்ம காரியத்தில் சிறப்பாகப் பணிபுரிந்துஅதன் உதவியால் தமிழைப் பாரெல்லாம் பரப்பினார் அடிகளார். பரப்பிய அத்தமிழ் வித்து இன்று வளர்ந்து வருகின்றது.

அந்நிய மொழியினைப் போன்று தமிழ் மொழிக்கும் அனைத்துலக ரீதியில் ஆராய்ச்சி நடத்தவேண்டும் என்று உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்துக்கு வித்திட்ட வித்தகர் அம் மன்றத்துக்கு உதிரத்தால் நீரூற்றி வளர்த்தார். அப்போதைய பிரதம அமைச்சர் அப்துல் ரஹ்மானின் பூரண ஒத்துழைப்புடன் அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை முதன் முதலில் மலேசியாவில் 1966ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்தி வைத்தார். 1965 ஆம் ஆண்டு அடிகளார் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றக் கிளை ஒன்றினை அமைத்து வைத்தார். இரண்டாவது மாநாட்டை சென்னையிலும், மூன்றாவது மாநாட்டைப் பிரான்சின் தலைநகரமான பாரிஸிலும், நான்காவது மாநாட்டை ஈழத்தின் யாழ்ப்பாணத்திலே நடத்தி வைத்தார், அன்பு அறிவு ஆராய்ந்த சொல் வன்மை ஆகிய மூன்றும் தூதுரைப்பார்க்கும் இன்றியமையாத பண்புகளாகும், இவையனைத்தையும் நிரம்பப் பெற்ற தனிநாயகம் 'நெஞ்சுவிடு தூது' எனும் நூலின் மூலமாக தமிழின் தூதனாகத் திகழ்ந்தார். ★

- அ. நிக்ஸன் -

## இந்தியா, பாகிஸ்தானில்...

(3 ஆம் பக்க தொடர்ச்சி)

சுமப்பவர் அலன் போடர்.

தற்போது உள்ள அணிகளின் தலைவர்களில் சிறந்த ஒரு தலைவர் இவர்.

சப்பல் சகோதரர்கள் லில்லி, றொட்னி மாஷ் போன்றவர்கள் ஓய்வு பெற்ற பின் அவுஸ்திரேலிய அணி ஒரு பலம் குன்றிய அணியாகவே உள்ளது.

ஆனாலும் அனுபவஸ்தரான அலன் போடர் மிகுந்த தன்னம்பிக்கையுடன் டேவிட்பூன், ஜெல் மான், டீன் ஜோன், பீற்றர் டெயிலர் போன்ற புதிய ஆட்டக்காரர்கள் துணையுடன் தன்னுடைய அனுபவமற்ற அணியை நடத்தி வருகிறார்.

தங்களுடைய இழந்த பெருமையை மீட்க போடர் தலைமையிலான ஆஸ்திரேலியர் உலகக் கிண்ணப் போட்டிகளில் சாதனைகள் படைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

### நியூஸிலாந்து

மாட்டின் குறோ தலைமையில் உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளும் நியூஸிலாந்து அணியில் முன்னணியில் திகழும் சகலதுறை ஆட்டக்காரரான றிச்சாட் ஹாட்லி இல்லாதது மிகவும் கவலைக்குரியது.

சென்ற முறை ஆஸ்திரேலியா அணியை 13 ஓட்டங்களால் தோற்கடித்து [illegible] யையும் இக்கட்டான நிலைக்குத் தள்ளிய ஸிம்பாப்வே அணியும் உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்கிறது.

மேற் கண்ட எட்டு நாடுகளிலும் பாகிஸ்தான், இந்தியா, மேற்கிந்திய இங்கிலாந்து ஆகிய நாடுகளிடையே உலகக் கிண்ணத்தை வெல்வதில் போட்டியிருக்கும் என கிரிக்கெட் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.


இந்தநான்கு நாடுகளில் மேற்கிந்தியா. இங்கிலாந்து, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் ஒரே அணியில் வந்துள்ளது. அவைகளின் நிலையை முதற் சுற்றிலேயே கடுமையாக்கியுள்ளது. [illegible] ஒவ்[illegible] அணியில் இருந்தும் (அணி ஏ, அணி பி) தலா இரண்டு நாடுகளே அரை இறுதி ஆட்டங்களுக்கு தெரிவு செய்யப்படும். இதே பீ அணியிலேயே ஸ்ரீலங்காவும் இருப்பதால் இந்த உலக கிண்ணப் போட்டி தொடரில் ஸ்ரீலங்கா அணி ஓரிரு போட்டிகளில் வெற்றி பெற்றாலும் அது மிகப் பெரிய பெரிய சாதனையே.

அணி ஏ இல் இந்தியாவுக்கு சந்தர்ப்பம் ஓரளவு சாதகமாகவே உள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் போட்டியின் இறுதி முடிவுகளை அறிய நாம் நவம்பர் மாத நடுப்பகுதி வரை காத்திருக்கதான வேண்டும். ★

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 78



அனுப்புபவர் பெயர்:-
திரு/திருமதி/செல்வன்/செல்வி ..........

..........

விலாசம்:- ..........

..........

வயது:- ..........

ஒப்பம்:- ..........

### இடமிருந்து வலம்

1. ஒருவகை பாட்டுத் தொகுதி, 4. பெரியார், 6. உபகரணம், 7. பயனற்றது 8. துணிச்சல், 10. அதிர்ச்சி, 12. தஞ்சம், 13. விரோதி 16. கடிதம், 18. மூத்தஆண்பிள்ளை, 20 ஒரு நோய், 22. ஒருவகை மது, 23. பசு. 24. அலை 25. மிச்சம் 26. சத்தம்

### மேலிருந்து கீழ்

1. கடவுள், 2. செல்வம், 3. செய்யுள் இலக்கியம், 4. சமயம், 5. ஒரு காலம், 7. ஒரு தானியம், 9. சுவர், 11. சிறைப்பிடித்தல், 12. கொடுக்குமதி, 14. மறை, 15. சொரூபம் 16. பெண்பிள்ளை, 17. ஒரு நட்சத்திரம், 19. குழந்தை, 21. பூமி, 23. அவா.

### சொற்சிலம்பம் போட்டி இல. 76 விடைகள்

#### இடமிருந்து வலம்

1. அபகீர்த்தி, 6. முதிரை, 7. அணை, 8. சதுரம் 9. சுபாவம், 11. புகை, 13. ரவை 14. பதவி, 17. பவளம், 18. சாயம், 19. பரி 21. வயிறு, 23. அம்மான்.

#### மேலிருந்து கீழ்

1. அமுதசுரபி, 2. பதி, 3. கீரை. 5. வீணை 7· அம்பு, 8. சம்பவம், 10. பாவை, 12. கைகேயி, 15. தள, 16. விம்பம், 17. பயறு, 18, சாயி, 20. ரிமா.

### சொற்சிலம்பம் போட்டி இல. 76 பரிசு பெற்றவர்கள் விவரம்

முதலாம் பரிசு: ரூபா 50/-
திருமதி பா. பவானி
காவல்கோட்டை,
வல்வெட்டித்துறை.

இரண்டாம் பரிசு: ரூபா 25/-
செல்வி ஆ. புஷ்பராணி
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

மூன்றாம் பரிசு: 15/-
திரு. எஸ். இராமநாதன்
பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

★ குறிப்பு:-
பரிசு பெற்றவர்களின் பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வர வேண்டியதில்லை.

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்களை, 'சொற்சிலம்பம்' போட்டி இல. 78, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தபால் உறையில் வைத்தோ, அல்லது அஞ்சல் அட்டையில் ஒட்டியோ அடுத்து வரும் 16 - 9 - 1987 முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

## காலை வெட்டிய...

(7ஆம் பக்க தொடரச்சி)

விராமன் எழுந்தான்.

மன்னரும் மற்றோரும் தெனாலிராமன் போருக்குப் போனானா? என வியந்து அவனையே பார்த்தனர்.

தெனாலிராமன் தொடர்ந்தான். 'ஒரு முறை நானும் யுத்தகளத்திற்குச் சென்றேன். கையில் வாளும் வீர நடையுடனும் சென்ற நான், எதிரி நாட்டுப் படைவீரர் ஒருவனின் காலை வெட்டி எடுத்து வந்தேன்' என்றான்.

இது கேட்ட மன்னர் 'ராமா, உனக்கு எதிரிகளின் கால் தான் கிடைத்ததா? தலையை வெட்டி வந்திருந்தால் நீயும் ஒரு வீரனே' என வினவினார்.

'மன்னரே, ஏற்கனவே யாரோ தலையை வெட்டிச் சென்று விட்டனரே. அதனால்தான் நான்காலை வெட்டி வர முடிந்தது' என்று கூறினான் தெனாலிராமன். தெனாலிராமன் வீர சாகச் செயல் செய்யாவிட்டாலும் விகடத் தனமாய் பேசியதைக் கேட்டு மன்னரும் மற்றவரும் சிரித்து மகிழ்ந்தனர். *

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒப்பந்தத்தின் பின்னர் திருகோணமலையில் சிங்களக் குடியேற்றம் அதிகரிப்பு

திருகோணமலை பிரசைகள் குழு அமைப்பில் சிங்கள இனத்தவர் ஒருவர் தலைமை வகிப்பதனுலேயே திருமலையில் நடைபெறும் பிரச்சினைகளை அரசின் கவனத்துக்குக்கொண்டுவர முடிகிறது.

இவ்வாறு திருகோணமலை பிரசைகள் குழுவின் இணைச்செயலாளரும் பிரபல சட்டத்தரணியுமான திருமதி சுபாஷினி வரதன் எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

கேள்வி:- திருகோணமலை பிரசைகள் குழுவுக்கும் திருகோணமலைத் தமிழ்மக்களுக்கும் இடையில் ஒரு கருத்து வேறுபாடு நிலவுவதாகக் கூறப்படுகிறதே, உண்மையா?

பதில்:- என்னைப் பொறுத்தவரையில் அப்படியில்லை ஆனுல் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. சில வேண்டாதவர்கள் விஷமத்தனமான வதந்திகளைப் பரப்பி என்னையும் மக்களையும் பிரிக்க முனைகிறார்கள்.

கேள்வி:- திருமலை மாவட்டத்தில் நடைபெறும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவில்லையா?

பதில்:- சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறும் இடங்களை நான் நேரடியாகச் சென்று பார்வையிடவில்லை. எனினும் பொதுமக்கள் செய்த முறைப்பாட்டையடுத்து திருமலை அரச அதிபரிடம் இது தொடர்பாக எடுத்துக் கூறினேன். அதற்கு அவர் அப்படிக் குடியேற்றம் நடைபெறவில்லை என்றும் முன்னர் ஏற்பட்ட அசம்பாவிதங்களினுல் குடிபெயர்ந்தவர்களே மீளவும் வந்து வந்து அமர்கிறார்கள்.

கேள்வி:- திருமலை பிரசைகள் குழு என்ற முறையில் நீங்கள் சிங்களக் குடியேற்றங்களை நேரடியாகச் சென்று பார்வையிடலாமே?

பதில்: நீங்களே இந்தியப் பாதுகாப்புடன்

## திருமலை நிலைமை பற்றி பிரஜைகள் குழுச் செயலாளர்

சிங்களக் குடியேற்றங்களை பார்த்து வருகிறீர்கள். இந்த நிலையில் நான் எப்படி அங்கு செல்ல முடியும்.

கேள்வி:- சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு வேறு வழி இல்லையா?

பதில்:- திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சில அரச உயரதிகாரிகள் இடம் மாற்றம் செய்யப்பட்டால் தான் சிங்களக்குடியேற்றத்தை ஓரளவு தடுக்கமுடியும்.

சிங்கள உயரதிகாரிகள் திருமலையில் இருக்கும் வரையிலும் சிங்களக்குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியாது.

கேள்வி:- திருகோணமலையில் இந்திய இராணுவத்தின் செயற்பாடுகள் எப்படி உள்ளன?

பதில்:- திருகோணமலைக்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவத்தினர் போதாது.

யாழ்ப்பாணப் பகுதியில் மக்கள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள் வேண்டியதைச் செய்கிறார்கள்.

திருகோணமலையில் அப்படிச் செய்யமுடியாது. இந்திய இராணுவத்தினர் கேந்திர இடங்களில் நிரந்தரமாக அமர்த்தப்பட வேண்டும் அதன் பின்னரேயே மக்கள் திருமலையிலும் ஓரளவு சுதந்திரமாக நடமாட முடியும்.

கேள்வி:- உங்கள் இல்லத்துக்குக்குண்டு வீசப்பட்டது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:- ஊரடங்குச் சட்ட வேளையில் நடைபெற்ற இச் சம்பவம் குறித்து நான் மிகவும் வேதனையடைகிறேன். வாகனத்தில் வந்தோரால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின் பின் வாகனத்தின் இலக்கத்தைக்கூட என்னுல் கண்டுபிடிக்கமுடியாமல் போய்விட்டது.

### ஒப்பந்தம்

கேள்வி:- இலங்கை -இந்திய ஒப்பந்தம் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்,

பதில்:- இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட பின்பே திருமலையில் சிங்களக் குடியேற்றங்கள் அதிகரித்து வருகின்றன.

ஆனுல் இப்பொழுது அவர்களால் அதைச் செய்யமுடியாது இருக்கின்றது.

தற்பொழுது ஸ்ரீலங்கா அரசே வெளிப்படையாக ஓலைகளையும், தடிகளையும் சிங்கள மக்களுக்கு வழங்கி அவர்களைக்குடியமர்த்துகிறது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும், ஜே. ஆர். ஜெயவர்த்தனுவும் சிங்களமக்களும் நன்மை அடைந்தார்கள். தமிழ் மக்களுக்கு எந்தவிதமான விமோசனமும் இல்லை என்றே நான் கூறுவேன்.

### அகதிகள்

கேள்வி;- கிளப்பன் பேக் அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவதில்லையாமே?

பதில்:- நிவாரணம் வழங்கப்படுவதில்லை என்பது பிழையான கருத்தாகும். நிவாரணம் வழங்குவதில் தாமதம் உண்டு.

சிங்கள உயரதிகாரிகளே நிவாரணம் வழங்குவதற்குப் பொறுப்பாக இருப்பதன் காரணமாக அவர்கள் அதை ஆமை வேகத்தில் செய்கின்றனர்.

இன்று எத்தனையோ அகதிகள் சாதாரண சாப்பாட்டுக்கே வழியில்லாமல் கஷ்டப்படுகின்றனர்.

நாம் தொடர்ந்தும் அவர்களுக்கு நிவாரணம் வழங்க முயற்சித்து வருகிறோம்.

கேள்வி:- கிளப்பன் பேல் அகதிகளை குறிக்கப்பட்ட திகதிக்குமுன் வெளியேறுமாறு அரசு வற்புறுத்தியுள்ளதாமே?

பதில்:- அரசு வற்புறுத்தித்தான் வருகிறது ஆனுலும் அகதிகளை வெளியேற்றுவதில் அரசு காட்டும் அக்கறை தமிழ்ப் பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றுவதில் இருப்பதாகத் தெரியவில்லை.

கேள்வி:- இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தீர்களா?

பதில்:- பலமுறை அரச அதிபருடனும், இணைப்பதிகாரியுடனும் முகாம் அகற்றும் விவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினேன். இதே வேளை இராணுவ



முகாம்கள் அகற்றப்படும்வரை அகதிகள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பமுடியாது எனவும் தெரிவித்தேன்.

திடீரென்று முகாம்களைவிட்டு வெளியேறும்படி அகதிகளுக்கு உத்தரவிட்டால் அவர்களுக்கு சாப்பாட்டு வசதியில்லை, வீட்டுவசதி இல்லை. குறிப்பாக பாதுகாப்பு வசதி இல்லை. இந்த நிலையில் அவர்கள் எப்படி மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியும்.

### ஊர்காவற் படை

கேள்வி:- ஊர்காவல் படையினரின் நடமாட்டம் தற்பொழுது இருக்கின்றதா?

பதில்:- ஆம்! ஒப்பந்தத்தின் பின்பும் சில தமிழ் மக்கள் ஊர்காவல் படையினரின் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளார்கள்.

போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்கும் போது செஞ்சிலுவைச் சங்கங்கள், பிரசைகள் குழுக்கள், இந்திய அமைதிகாக்கும் படையினர் முன்னிலையில் ஒப்படைத்தனர்.

ஊர்காவல் படையினர் ஆயுதங்களை ஒப்படைத்தபொழுது இவர்கள் யாரும் அழைக்கப்படவில்லை.

இன்னும் ஐம்பது சதவிகிதமான ஆயுதங்களை ஊர்காவல் படையினர் வைத்துள்ளனர் என்றே நான் நம்புகின்றேன்.

### பாரிய பாதிப்பு

கேள்வி:- திருகோணமலையின் தற்போதைய நிலை குறித்து என்ன சொல்கிறீர்கள்?

பதில்:-தமிழர் மாவட்டங்களைப் பொறுத்தவரை திருகோணமலை மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழர் பிரச்சினைகளை முறையிடுவதற்கு எந்த அமைப்பும் திருமலையில் இல்லை.

திருகோணமலைக்கு ஒரு தமிழ் அரச அதிபர் நியமிக்கப்படவேண்டும், நகரசபையில் தமிழ்த் தலைவர் இல்லை பாடசாலைகளின் குறைகளை எடுத்துக் கூறுவதற்கு கல்வித் திணைக்களத்தில் தமிழ் உயரதிகாரி இல்லை. மொத்தத்தில் திருகோணமலையின் நிர்வாகம் சிங்கள அதிகாரிகளின் கையில் இருப்பதனுலேயே திருமலை இன்று பறிபோய்க்கொண்டிருக்கிறது.

தமிழ் மக்கள் மீண்டும் மனமாற்றம் அடைந்து தமது சொந்த இடங்களுக்கு திரும்பவேண்டுமானுல், சிங்கள உயரதிகாரிகள் உடனடியாக இடம் மாற்றப்படவேண்டும். பாதுகாப்புப் படை முகாம்கள் உடனடியாக அகற்றப்படவேண்டும்.

இன்று நீங்கள் இந்திய இராணுவ வாகனங்களில் வந்திருக்கிறீர்கள், எனது வீட்டின் முன்பே வாகனங்கள் நிற்கின்றன.

இந்த நிலையில் இரவு என்ன நடக்குமோ என்ற பயமும் எனக்கு ஏற்படுகிறது.

இவ்வாறு தெரிவித்தார் திருமதி சுபாஷினி வரதன்.

இதேவேளை துப்பாக்கி வேட்டுக்களினுல் சேதமடைந்த தமது வீட்டுப் பகுதிகளையும் யாழ்ப்பாண செய்தியாளர்களுக்கு அவர் காட்டினுர். ★

- செவ்வி: க இரத்தினராஜசிங்கம் -

# கிழக்கு - மேற்கு ஜேர்மன் அதிபர்கள் சந்திப்பு உரிய பலனை அளிக்குமா?

## 38 வருடகால கெடுபிடி யுத்தத்துக்கு முடிவுகாண முயற்சி

கிழக்கு ஜேர்மன் அதிபர் எரிக்ஹொனேக்கர் மேற்கு ஜெர்மனிக்கு இவ்வாரம் 5 நாள் விஜயம் ஒன்றைமேற்கொண்டார்.

இவரது விஜயம் இரு ஜெர்மனிகளுக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வை ஏற்படுத்தாவிட்டாலும் தடந்த 38வருடகாலமாக இருந்துவரும் கெடுபிடியுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முதலாவது பெரிய நடவடிக்கை என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### உலக மகாயுத்தம்

இரண்டாவது உலக மகா யுத்தத்தில் நேச நாடுகளின் படைகளிடம் ஜேர்மனி சரணுகதி அடைந்ததுடன் தற்போதைய ஜேர்மன் வரலாறு ஆரம்பமானது.

யுத்தத்தில் வெற்றி கொண்ட அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சோவியத் யூனியன் ஆகிய நான்கு நாடுகளினுலும் 1949 ஆம் ஆண்டு ஜேர்மனி பங்குபோடப்பட்டது.

அமெரிக்க, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று மேற்கத்திய வல்லரசுகளும் தமது நிர்வாகப் பகுதிகளை ஒன்றுக இணைத்து மேற்கு ஜெர்மனியை உருவாக்கின.

சோவியத் யூனியன் தனது நிர்வாகப்பிரிவை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டது அதுவே கிழக்கு ஜெர்மனி.

இதேபோன்று ஜேர்மனியின் தலைநகரான பேர்லினும் துண்டாடப்பட்டு மேற்கு பேர்லின்-கிழக்கு பேர்லின் என்று இரு பகுதிகள் இருந்து வருகின்றன.

ஐரோப்பாவிலேயே முன்னணி நாடாக பல்லாண்டு காலங்களாக ஒரே நாடாக இருந்து வந்த ஜேர்மனி துண்டாடப்பட்டு முற்றிலும் ஒன்றுக்கு ஒன்று முரணுன இரு வெவ்வேறு ஆட்சி அமைப்புக்குள் கொண்டு வரப்பட்டதே இரு நாடுகளுக்கும் இடையில் பலதசாப்தகாலங்களாக இருந்துவரும் நெருக்கடி நிலைக்குக் காரணமாகும்.

1970ஆம் ஆண்டுவரை கிழக்கு ஜெர்மனியை அங்கீகரிக்க மேற்கு ஜெர்மனி மறுத்து வந்தது. இன்னும் மேற்கு ஜெர்மனியும் கிழக்கு ஜெர்மனியும் இரு வெளிநாடுகள் என்பதை ஏற்றுக்கொள்ள மேற்கு ஜேர்மனி மறுத்துவருகிறது. கிழக்குப் பேர்லினில் கிழக்கு ஜேர்மனியின் ஆதிபத்திய உரிமையையும் மேற்கு ஜேர்மனி ஏற்க மறுத்துவருகிறது.

ஜேர்மனி மீண்டும் ஒரே நாடாக்கப்பட வேண்டும் என்பதே மேற்கு ஜேர்மனியின் நிலைப்பாடாகும்.

இப்படியான நிலையில் கிழக்கு ஜேர்மன் அதிபர் எரிக்ஹொனேக்கரின் மேற்கு ஜேர்மன் விஜயம், கிழக்கு, ஜேர்மனிக்கு சர்வதேச அங்கீகாரம்பெறும் அவரின் போராட்டத்துக்கு ஒரு வெற்றி என்றே நம்பப்படுகின்றது.

கிழக்கு ஜேர்மன் அதிபரின் ஜேர்மன் விஜயம் ஏற்கனவே மூன்று தடவைகள் திட்டமிடப்பட்டுப் பின்போடப்பட்டது. அவ்வப்போது எழுந்த நெருக்கடி நிலைகளே விஜயம் பின்போடப்பட்டதற்குக் காரணம் ஆகும்.

### பிரச்சினைகள்

மேற்கு ஜேர்மனிக்கும் கிழக்கு ஜேர்மனிக்கும் இடையில் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் பல உள்ளன. அவற்றில் சில வருமாறு:-

★ மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள்.

★ கிழக்கு - மேற்கு பேர்லின்களுக் கிடையில் உள்ள முள்ளுக்கம்பித் தடுப்பு.

★ பிரயாணக் கட்டுப்பாடுகள்.

மேற்கு ஜேர்மனிக்கும் கிழக்கு ஜேர்மனிக்கும் இடையிலான கெடுபிடி யுத்தம் 1961ஆம் ஆண்டு இரு பேர்லின்களுக்கும் இடையில் தடுப்பு வேலி போடப்பட்டதை அடுத்து அதிகரித்தது.

கிழக்கு ஜேர்மனியின் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு பேர்லினில் இருந்து மேற்கு பேர்லினுக்குள் மக்கள் செல்ல ஆரம்பித்ததை அடுத்து கிழக்குப் பேர்லின் இந்த தடுப்புவேலியை அமைத்தது.

தடுப்புவேலி அமைக்கப்படுவதற்குமுன் இந்த எல்லையைக்கடக்க முயன்றோர் கிழக்கு ஜேர்மன் பொலீஸாரால் சுட்டுக்கெல்லப்பட்டு வந்தனர்.

1961 ஆம் ஆண்டு தடுப்புவேலி போடப்படும்வரை 188 பேர் இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவுகளுக்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது இந்தத் தடுப்புவேலியே.

பேர்லின் தடுப்புவேலி பற்றி தாம் மேற்கு ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோலுடன் பேசப்போவதில்லை என்று மேற்கு ஜேர்மன் புறப்படமுன்னர் கிழக்கு ஜேர்மன் அதிபர் தெரிவித்திருந்தார்.

கிழக்கு ஜேர்மன் மக்கள் கிழக்குப் பேர்லின் வழியாக மேற்கு பேர்லினிக்குள் வருவது 1961 ஆம்ஆண்டுமுதல் கிழக்கு ஜேர்மனியால் இந்த தடுப்புவேலி மூலம் கட்டுப்படுத்தப்பட்டுவருகிறது.

எனினும் பென்ஷன்காரர்களுக்குமட்டும் மேற்கு பேர்லின் சென்று வர கிழகக்கு ஜேர்மனி அனுமதி அளித்துவந்தது.

கடந்த வருடம் சிறிதளவு தாராளக் கொள்கையைப் பயன்படுத்தி பென்ஷன் வயதுக்குட்பட்டோரும் மேற்கே சென்றுவர அனுமதிக்கப்பட்டனர்.

கடந்தவருடம் மட்டும் 5 லட்சம் பேர் இப்படி மேற்கு பேர்லின் ஊடாக மேற்கு ஜேர்மனி சென்று வர கிழக்கு ஜெர்மனியால் அனுமதிக்கப்பட்டனர்.

60 தினங்களில் இவர்கள் சென்று வரவேண்டும்.

கிழக்கு ஜேர்மன் அதிபர் பிறந்தஇடம் மேற்கு ஜேர்மனியிலேயே இருக்கிறது. 38 வருட காலத்தின்பின்னர் சுடந்த வாரம் அவர் அங்கு விஜயம் செய்தார்.

75 வயது நிரம்பிய அதிபர் எரிக்ஹொனேக்கரின் மேற்கு ஜேர்மன் விஜயம் உரிய பயனை அளிக்கத் தவறுமானுல் வயது முதிர்ந்த தலைவர் ஒருவர் தமது பிறந்த நகரத்துக்கு மேற்கொண்ட விஜயமாகவே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயம் அமைந்துவிடும். ★

உலக உலா
என்.பி.சீலன்

## வடக்கு - கிழக்கு----

(8ஆம் பக்க தொடர்ச்சி)

ளது எதிர்கால ஒற்றுமை பற்றி.........!

திரு. திலீபன் கூறிய கருத்தையே நாமும் ஏற்கின்றோம். இனி சிங்கள மக்களிடமிருந்து தமிழ் மக்கள் பிரிந்து போவது தவிர்க்க முடியாதது. அதாவது ஆகக்குறைந்தது பிரதேச ரீதியில் சுயாட்சிமுறையில் பிரிந்து இருப்பதுதான் ஒற்றுமைக்கு வழி—ஒவ்வொரு இனத்திடையும் இருந்து வளர்ந்துவிட்ட சந்தேக உணர்வு அகல [illegible] வில்லை. ஆனுல் முஸ்லிம்கள்—குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தமிழருடன் இணைந்துதான் வாழவேண்டும். அல்லது முஸ்லிம்களின் இன - கலை - கலாசார, மொழிச் சிறப்புகள் தவிர்க்க முடியாது போகலாம்.

கேள்வி:- வடபகுதிப் போராளிகளுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் உறவுகள் நெருக்கமாக உள்ளதாக நினைக்கிறீர்களா?

பதில்;- போராளிகளுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே அவ்வளவு தூரம் நெருக்கம் [illegible] வில்லை. உதிரியாக ஆங்காங்கே தொடர்புகள் இருந்திருக்கலாம். ஆனாலும் உறவு பலப்படுத்தப்படவில்லை.

கேள்வி:- முஸ்லிம்களையும் - தமிழ் மக்களையும் திட்டமிட்டுப் பிரிக்கவும் அவர்களுக்கிடையில் கலவரங்களை ஏற்படுத்தவும் மூன்றுவது சக்தி ஒன்று வடக்கிலும் கிழக்கிலும் முயல்வதாக நீங்கள் உணரவில்லையா?

பதில்:- முஸ்லிம் மக்களைப் பிரிக்கத் தூண்டிவிடும் சதிமுயற்சிகள் பல நடந்திருப்பதை நாம் நம்புகின்றோம்.

இவற்றின் தாற்பரியத்தை முஸ்லிம்கள் உணர்ந்துகொண்டு மிகக் கவனமாக நடக்கவேண்டும்.

# பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

## மாபியா கும்பலின் மகோன்னத சாதனை!

அமெரிக்க டெலிவிஷின் கம்பனியான என். பி. ஸி. கடந்த வருடம் திடீரென விடுத்த புள்ளி விவர அறிவிப்பு ஒன்று அமெரிக்க மக்களையே திகைப்பில் ஆழ்த்தியது.

போதைப்பொருள் கடத்தும் 'மாபியா' கும்பல் ஒருவருடத்தில் செனட்டர்கள், அரச செயலாளர்கள், நகர மேயர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், பொலீஸார்போன்றோருக்கு 900 கோடி டொலரை லஞ்சமாகக் கொடுத்து வருகிறார்கள் என்றபுள்ளி விவரம்தான் டெலிவிஷனில் வெளியாகியது.

இதில் பொலீஸாருக்கு மட்டும் 450 கோடி டொலர் லஞ்சமாகத் தள்ளப்பட்டதாம். இந்தத் தொகை முழு அமெரிக்கப் பொலீஸ்படைக்கும் வழங்கப்படும் வேதனத்தை விட அதிகமானது என்றுல் லஞ்சத்தின் வலிமை தான் என்னே!

மாபியாவின் ஒரு வருட விற்பனை மட்டும் 15 ஆயிரம் கோடி டொலர் என்றுல் பாருங்களேன்!

ஒரு வருடத்தின் மொத்த விற்பனையைப் பார்க்கும் போது அமெரிக்காவில் எண்ணெய்க் கம்பனிகளுக்கு அடுத்ததாக - இரண்டாவதாக - முன்னணியில் இருப்பது மாபியாதான். மிகப் பெரும் மோட்டார் கம்பனிகள்கூட ஒருவருடத்திற்கான 'டேர்ன் ஓவரில்' மாபியாவுக்கு பின்னுல்தான் நிற்கின்றனவாம். ★

## சிறுநீரகம் "ரிப்பயர்"

சிறுநீரகத்தினுள் கல் உருவாவதால் ஏற்படும் சிக்கலுக்கு சாதாரணமாக அறுவைச்சிகிச்சை செய்வது வழக்கம்.

ஆனுல் சிலமோசமான கேஸ்களில் முழு சிறுநீரகத்தையும் உடலில் இருந்து அகற்றி, உடலுக்கு வெளியே அதை அறுத்து, கல்லை அகற்றி, சிறுநீரகத்தைத் தைத்து சரிசெய்து மீண்டும் உடலில் பொருத்தும் முயற்சியில் மேல்நாட்டு விஞ்ஞானிகள் வெற்றிகண்டிருக்கிறார்கள்.

ஒருவரின் உடலைவிட்டு அகற்றிய சிறுநீரகம் சுமார் ஒரு மணி நேரமாக வெளியில் வைத்து "ரிப்பேர்" செய்யப்பட்டு மீண்டும் பொருத்தப்பட்டது.

இப்போது அந்தச் சிறுநீரகம் சிறப்பாக இயங்குகிறது. இது மாதிரி சுமார் இரு கேஸ்களை கவனித்திருக்கிறார்கள் மேல்நாட்டு விஞ்ஞானிகள். ★

## பிரிந்த---

(5ஆம் பக்க தொடர்ச்சி)

சாகத்தையும் அவதானித்த கங்குவேலிக் கோஷ்டியினர் டிராக்டர் வண்டியில் என்னையும் ஏற்றிக்கொண்டு மகாவலி கங்கைக்கரையில் அடர்ந்த காட்டில் இருக்கும் அகஸ்தியர் ஸ்தாபனத்தையடைந்தார்கள். அங்கு எனக்குச் செய்திப் புதையலும் கிடைத்தது. இது என்னுல் மறக்க முடியாத மகிழ்ச்சிகரமான சம்பவம்.

—இப்படித் தனது பேட்டியில் மேலும் கூறினுர். ★

## மூளை சத்திரசிகிச்சை

★ அறுவை சிகிச்சை சம்பந்தமான பல தொழில் நுட்ப முறைகளை விருத்தி செய்த டாக்டர்ஹார்வி குஷிங் 20 ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்தவர். அந்த நேரத்திலேயே மூளைக்கட்டிகளை அகற்றும் 2 ஆயிரம் சத்திரசிகிச்சைகளை அவர் செய்திருந்தாராம்.

தயாரிப்பு:
வித்தி

## சட்டம் ஒரு கழுதை

★ சட்டம் கழுதை முன்னுல் போனுல் முட்டும். பின்னுல் போனுல் உதைக்கும். ஆகவே கழுதையைப் போல சட்டத்திற்கு பக்கத்தோடு தான் போகவேண்டும். ★

## வெங்காயம்

★ வெங்காயத்தின் பயனை முதலில் அறிந்து கொண்டவர்கள் எகிப்தியர்கள். அவர்களது சமையலில்தான் முதலில் வெங்காயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"உழைப்பே உயர்வுக்கு வழி"**
மகாத்மா காந்தி

சம்பூரண சலவைக்கு நுரைவளம் கூடிய 'மில்க்வைற் நீலசோப்'பை வாங்கி உபயோகியுங்கள்.

20 மில்க்வைற் நீலசோப் அல்லது 5 பார் சோப் அல்லது 5 சுப்ப மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி அழகிய காந்தி ஸ்ரிக்கரையும், படிப்பினை என்ற நூலையும் பெற்றுக்கொள்ளுங்கள்

மில்க்வைற் தொழிலகம், யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி

12 - 09 - 1987 சனிக்கிழமை



**பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் — மில்க்வைற் சகாய விற்பனை —**

11-9-87 பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேர்த்திருவிழாவின்போது, மில்க்வைற் காட்சிச் சாலையில் ரூ 15/-க்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு தேவாரம், அறிவுநூல்கள், வீட்டுத் தோட்ட விதைகள் பொலித்தின் பாக் உடன் மேலதிகமாக அழகிய கிருஷ்ணர் ஸ்ரிக்கர் ஒன்றும் பரிசாக வழங்கப்படும். மில்க்வைற் மேலுறைகளைச்சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அங்கு கொடுத்து அவற்றிற்கான பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம். —மில்க்வைற் யாழ்ப்பாணம்


# அன்னை இந்திரா விரும்பியதை

# ஒப்பந்தம் தமிழருக்குப் பெற்றுத் தருமா?

ஒப்பந்தம் ஜூலை 29 இல் கைச்சாத்திடப் பட்டது.

அத்தினத்தில் இருந்து 6 வாரங்களுக்கு இடையில் ஒப்பந்தத்தில் கூறப் படாத 'எஞ்சிய விஷயங்கள்' பற்றிப் பேசி முடிவு காண வேண்டும்—

இப்படி ஒப்பந்தத்தில் கூறப்பட்டது.

அதன்படி 'எஞ்சிய விஷயங்கள்' பற்றிமுடிவு காணும் காலக்கெடு இம் மாதம் 10ஆம் திகதியுடன் முடிவடைந்து விட்டது.

எல்லாவற்றையும் காலக்கெடுவக்குள் நிறைவேற்ற முடியாது என்று இந்திய, இலங்கை அரசுகள் தரப்பில் அடிக்கடி தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

* அமைதி அங்கும் இங்குமாகத்தான் காணப்படுகின்றது.

* ஆயுதங்களும் 85 சதவீதம் தான் ஒப்படைக்கப்பட்டு உள்ளன.

★ அரசியல் கைதிகள் பெரும் எண்ணிக்கையில் விடுவிக்கப்பட்டாலும் காணாமற் போனவர்கள் எண்ணிக்கையும் ஆயிரத்தைத் தாண்டிவிடும் என்று சொல்லப்படுகின்றது.

★ அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட மாதிரியான அவசரம் காண்பிக்கப்படவில்லை.

★ தமிழர்களுக்கு எஞ்சியிருக்கும் மண்ணை, பறிக்கும் வேலை தான் சுறுசுறுப்பாக இடம் பெறுகின்றது.

இப்படிக் கூறப்படும் நிலையில் 'எஞ்சிய விஷயங்கள்' பற்றிய இறுதிப் பேச்சுக்கள் நடைபெற உள்ளன.

அந்த நாள் முதல் (ஜூலை1983) இந்த நாள் வரை (டிசம்பர் 1986) வரை இடம்பெற்ற பேச்சுக்களுக்கும், 29 ஜூலை 1987க்கும் பின்னர் நடைபெற்று வரும் பேச்சுக்களுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு.

புவியியல் அரசியல் நிலையை உணர மறுத்த இலங்கைஅரசுடன் 1986 டிசம்பர் வரை தமிழர் அமைப்புக்கள் பேச்சுக்களை நடத்தி வந்தன.

இந்திய அரசு அதிகாரிகளும் இடைக்கிடை இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தி வந்தாலும், ''சம்பந்தப்பட்டவர்கள்தான் பேசித் தீர்வு காணவேண்டும்'' என்ற நிலைப்பாட்டை இந்தியா பகிரங்கமாக தெரிவித்திருந்தது.

நான்கு ஆண்டுகளாக இழுபறியாக நடந்து வந்த பேச்சுக்களின் போது தமிழர் அபிலாஷைகளைத் தீர்க்கும் யோசனைகள் இலங்கை அரசினால் முன்வைக்கப் படவில்லை.

## தாம் பண்டாரி அல்லர் என்பதை டிக்ஸிற் நிரூபிப்பாரா?

இந்திய அரசின் நிர்ப்பந்தம், மறைமுகத் தூண்டுதல் காரணமாக யோசனைகளில் சில நல்ல அம்சங்கள் புகுத்தப்பட்டாலும், இலங்கை அரசின் சில அமைச்சர்களே அந்த அம்சங்களைத் துவம்சம்செய்தும் வந்தனர்.

### ஜூலை 29 ஒப்பந்தம்

நான்கு ஆண்டுகளின் இறுதியில், புவியியல் அரசியலில் 'பெரிய அண்ணை'யின் தலைமைத்துவத்தை இலங்கை ஏற்றுக்கொண்டது. அதன் பலன் இந்திய-இலங்கை ஒப்பந்தம், இணைப்பு, கடிதங்களாக உருவாகியது.

பேசித் தீர்க்கவேண்டிய 'எஞ்சிய விஷயங்களாக'த் தமிழர் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்களை ஒப்பந்தம் வரையறுத்தது.

அத்துடன் அவற்றைப் பற்றிப் பேசித் தீர்க்கும் பொறுப்பையும் இந்திய அரசு ஏற்றுக்கொண்டது.

இலங்கை அரசுடன் அவை பற்றித் தமிழர் அமைப்புக்கள் பேச வேண்டிய நிலை ஒப்பந்தத்தினால் தவிர்க்கப்பட்டது.

தமிழரின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பளிக்கும் உத்தரவாத நாடாக மட்டுமல்லாமல், அவர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் நாடாகவும் இந்தியா மாறியது.

இந்த நிலையில்தான்...

### முதற் சுற்றுப் பேச்சு

'எஞ்சிய விஷயங்கள்' பற்றிய முதலாவது சுற்றுப் பேச்சு ஆகஸ்டில் கொழும்பில் நடைபெற்றது.

இந்தியத் தூதர் டிக்ஸிற் தலைமையிலான இந்திய அரசுக் குழுவும், ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான இலங்கை அரசுக்குழுவும் மூன்று தினங்கள் முதலாவது சுற்றுப் பேச்சை நடத்தின.

இந்தியக் குழுவுக்குத் தேவையான ஆலோசனை வழங்குவதற்காக கூட்டணித் தலைவர்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர்களும் கொழும்புக்கு அழைக்கப் பட்டிருந்தனர்.

விடுதலைப் புலிகள் தலைவர்களின் முதல் கொழும்புப் பயணமாகவும் அது அமைந்தது.

இந்திய இராணுவப் பாதுகாப்புடன் விமான மூலம் கொழும்பு சென்றடைந்த அவர்கள், இந்தியத் தூதரக அதிகாரி ஒருவரின் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

## உள்ளும் புறமும்

குறுமுனி

கொழும்பில் புலிகள் தலைவர்கள் நின்றசமயம் இந்திய இராணுவமே பாதுகாப்பு வழங்கியது.

பேச்சுக்களில் கலந்து கொண்ட இந்திய அரசமைப்புச் சட்ட நிபுணர்கள் தாங்கள் தயாரித்த நகல் திட்டம் ஒன்றை இலங்கை அரசுக் குழுவிடம் கையளித்தனர்.

இரண்டாம் சுற்றுப் பேச்சின்போது இந்திய நகல் திட்டம் மீதான கருத்தைத் தெரிவிப்பதாக இலங்கைக் குழு தெரிவித்தது.

### இரண்டாம் சுற்றுப் பேச்சு

இரண்டாம் சுற்றுப் பேச்சு இம்மாதம் இரண்டாம், மூன்றாம் திகதிகளில் புதுடில்லியில் நடைபெற்றன.

மூன்று தினங்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் ஒருநாள் முன்னதாகவே முடிவடைந்தன.

'எஞ்சிய விஷயங்கள்' என்று சொன்னாலும் அவை அடிப்படை முக்கியத்வம் வாய்ந்த விஷயங்களாக புதுடில்லிப் பேச்சுக்களில் ஆராயப்பட்டன.

பெரும்பாலான விஷயங்களில் மேலெழுந்த வாரியாக கொள்கைஅளவில் இணக்கம் காணப்பட்டன. ஆனால் அவை மூன்றும் சுற்றுப் பேச்சுக்களின்போது தான் விவரமாகப் பேசித் தீர்க்கப்பட வேண்டும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டம்- ஒழுங்கு பராமரிப்பு விஷயத்தில் சில முன்னேற்றங்கள் காணப்பட்டாலும், காணிக்குடியமர்த்தல் விஷயத்தில் தீர்க்கமான முடிவு காணப்படவில்லை.

— இப்படி புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டாம் கட்டப் பேச்சு முடிவில் இந்தியக் குழு, கூட்டணித் தலைவர்கள், விடுதலைப் புலிகள் தலைவர்கள் ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசியது.

'சாம்ராட்' ஹோட்டலில் விடுதலைப் புலிகள் தலைவர்கள் தங்கி இருந்தனர்.

'அசோக்' ஹோட்டலில் கூட்டணித் தலைவர்கள் தங்கியிருந்தனர்.

### மூன்றும் சுற்றுப் பேச்சு

மூன்றும் சுற்றுப் பேச்சுக்கள் இம் மாத இறுதியில் கொழும்பில் நடைபெற உள்ளன.

அப்போது — தமிழ் மாகாண சபையின் அதிகாரங்கள், முஸ்லிம்களின் நிலை, இடைக்கால நிர்வாகம் — இவைபற்றி எல்லாம் பேசித் தீர்க்கப் பட்டுவிடும் என்று நம்பப்படுகின்றது.

தமிழரைப் பொறுத்த வரையில் முக்கிய பேச்சாக இது அமையப் போகின்றது.

1983 முதல் இறக்கும் வரை, ''இலங்கைத் தமிழரின் நலன்களைப் பாதுகாப்பது தான் இந்தியாவின் கடமை'' — என்று அன்னை இந்திரா கூறி வந்தார்.

இலங்கைத் தமிழரின் சட்டபூர்வமான அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் அடிக்கடி கூறி வந்தார்.

அன்னையின் வழியைப் பின்பற்றி பிரதமர் ராஜீவ் காந்தியும் அதனையே கூறி வந்தார்.

வடமராட்சித் தாக்குதலைத் தொடர்ந்து 'நொந்து போன தமிழ் உள்ளங்களைச் சாந்தப் படுத்தும் யோசனையை முன் வையுங்கள்'– என்று பிரதமர் காந்தி இலங்கை அரசுக்கு இடித்துரைத்தார்.

இந்த நேரத்தில் 'மிராஜ்' விமானம் வந்தது போன்று இந்திய — இலங்கை ஒப்பந்தமும் வந்தது.

இந்திய மாநிலங்கள் அனுபவிக்கும் அதிகாரங்களுக்கு ஒத்ததான அதிகாரங்களை இலங்கைத் தமிழரும் அனுபவிப்பர்–

இப்படி பிரதமர் காந்தி 'மரீனா பீச்' சில் நின்று ஒப்பந்த வெற்றி விழாவில் பேசினார்.

இப் பேச்சு நிதர்சனமாகக் கூடிய விதத்தில் திரு. டிக்ஸிற் தலைமையிலான இந்தியக் குழு மூன்றும் சுற்றுப் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்று தமிழர்கள் விரும்புகின்றனர்.

1985 திம்புப் பேச்சுக்களில் கடைப்பிடிக்கப் பட்ட பண்டாரி அணுகுமுறை தமிழருக்கு வேதனையை ஏற்படுத்தியது.

''நான் ரொமேஷ் பண்டாரி இல்லை; நான் டிக்ஸிற்'' — என்பதை நிரூபிப்பது போன்று மூன்றும் சுற்றுப் பேச்சுக்களை திரு. டிக்ஸிற் நடத்துவார் என்று நம்புவோமாக!

## வவுனியாவில் இந்திய படையிடம் சிக்கிய இளைஞர்கள்

வவுனியா, செப். 12

வவுனியாவில் மூன்று இளைஞர்கள் பிடிக்கப் பட்டு இந்திய அமைதி காக்கும் படையினரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

வேந்தன், டேவிட். மனோ ஆகிய மூவரும் இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது.

வவுனியாவில் கொலை செய்யப்பட்ட கார்ச் சாரதி குணசிங்கத்தின் வீட்டுப்பக்கம் இருந்து கண்டி வீதிப்பக்கமாக விகாரைப் பகுதியை நோக்கி இவர்கள் ஓடி வந்து கொண்டிருந்த போது பிடிபட்டனர்.

தாம் குணசிங்கத்தின் மரணவீட்டுக்கு சென்ற போது புளொட்இயக்கத்தவர்கள் தம்மைக் கொலை செய்ய துரத்தி வந்தனர் என்றுஇவர்கள் இந்திய அமைதிகாக்கும் படையிடம் முறையிட்டனர்.

## மீட்பு

யாழ்ப்பாணம், செப் 12

ஈ பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் ஆயுதங்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மன்னாரில் கண்டு பிடித்தனர். (ஒ-10)

## உற்சவம்

வண்ணை—சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் 15 ஆம் நாள் அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை நடைபெறும்.

காலை 10 மணி அளவில் தீர்த்தோற்சவமும் மாலை 6 30மணி அளவில் விநாயகப் பெருமான் முத்துச் சப்பறத்தில் வெளி வீதிவலம் வருதலும் இடம்பெறும். (ஒ-161)

## புதிய எம். பி.க்கள்

கொழும்பு, செப். 12

தங்காலை, தெனியாய எம். பி.க்களாக திரு. முனீந்திரதாஸ தேவக வீரசிங்கா,செல்வி கீர்த்திலதா அபயவிக்கிரம ஆகியோர் முறையே நியமிக்கப்பட்டனர். (ஒ-எ)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முன்னைநாள் ஹற்றன் நாஷனல் வங்கி முகாமையாளருமான

## திரு. ச. சூரியகுமாரன்

அவர்களின்

## ★ வருட சிரார்த்தம் ★



**சூரியன் மறையவில்லை**

தூண்டா மணிவிளக்காய் சுடர்விட்ட சூரியனை
கோண்டாவிற் கிராமத்தைச் சிறந்தோங்கி வைத்தவனை
மாண்டுபோகச் செய்தவர்கள் மண்மீது படும்பாட்டை
ஆண்டொன்று ஆகுமுன்னே நிதர்சனமாய்க் காண்கின்றோம்!

மணமுடித்து மாலைசூடும் மாண்பான விழாவினிலே
மணமக்களை வாழ்த்த மக்களுள்ளம் காத்திருக்க
சண்டாளச் சகுனியர்கள் சற்றுமே இரங்காது
குண்டடித்துக் கொன்றதனால் கற்பகமே கலங்குகின்றோம்!

மனதினால் வரித்து கனவிலே கனிந்த
உன்னதக் காதலினை உலகினுக்கே காட்டி
மன்னவனைத் தொடர்ந்த மாண்புமிகு சத்தியாவும்
அன்றிற் பறவையென உடனாவி ஈந்தனளே

வங்கிக் கணக்குமுறை விளங்காத பேர்களுக்கும்
வங்கியிலே தன்வகித்த உயர்பதவி நோக்காது
கைங்கரியம் பலசெய்து கையெழுத்து மட்டும் போடவைத்து
இங்கிதமாய்ச் சேவைசெய்த இனியவனே எங்குசென்றாய்?

ஊரவர்க்கு மட்டும் உடனுதவி செய்யவில்லை
பாரபட்சமின்றிப் பலிசினறிப் பணிபுரிந்த பண்பாளன்
பாருக்குள் உனைப்போல பரிதியே! இல்லையையா
பூரித்த புனிதமுகம் பாராது தவிக்கின்றோம்!

காலைநேரம் தன்னில்நான் கல்விக்கூடம் செல்கையிலே
சாலையோரம் ஸ்கூட்டரோன் றென்னைச் சந்திக்கும்
வேலைக்காய் வங்கிசெல்லும் சூரியகுமாரனவர்
மேலான நோக்குடனே முறுவலித்துத் தலையசைப்பார்!

ஊரிலுள்ள இளைஞரெல்லாம் உவகையுடன் நாடிவர
ஆரிவரென் றெண்ணாது அனைவரையு மன்புடனே
நேரிய நோக்குடனே நேசித்த நண்பனையே
பாரினிலே காணாது பரிதவித்து பார்ப்பதுமேன்?

ஷெல்லடித்த சதிகாரர் செய்துவைத்த சூழ்ச்சியினால்
புலாலுடம்பு அழிந்தாலும் புகழுடம்பு அழியவில்லை
பல்லாண்டு சென்றாலும் பாமாவின் பரந்தாமன்
எல்லோர் இதயத்திலும் ஏகாந்த மாயிருப்பார்!

திருமதி, இ, செல்லத்துரை
இந்துமகாவித்தியாலயம், கோண்டாவில்.

## வடக்கு - கிழக்கை- - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமைகளைப் பார்வையிட்டதன் பின்னர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகளுடன் பிரிட்டிஷ் பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவரும் வந்திருந்தார்.

பிரிட்டிஷ் அமைச்சர் குழுவினர் அரச அதிபருடனும், அதிகாரிகளுடனும் சுமார் அரை மணி நேரம் மாநாடு நடத்தினர்.

அதன் பின்னர் நடந்த சந்திப்பில் பேராசிரியர் சிவத்தம்பி கூறியதாவது:-

புனர்வாழ்வுக்கான திட்டங்கள் புதிய அரசியல் யதார்த்த அணுகுமுறையில் அமைய வேண்டும்.

மாவட்டம், மாவட்டமாக பார்த்து முன்னர் இருந்த நிலைக்கு மாவட்டங்களைக் கொண்டுவருவதை புனருத்தாரணமாகக் கருதாமல்—

வடக்கு, கிழக்கை தனித்தனி மாகாணங்களாக நோக்காமல் புதிய மாநிலமாக நோக்கி அதற்குவேண்டிய முற்று முழுதான புனருத்தாரணத்துக்கு வெளிநாடுகள் உதவவேண்டும்.

புனருத்தாரண உதவிகளை வழங்கும் ஒவ்வொரு நாட்டின் நிபுணத்துவ திட்டங்களும் பூரண பலாபலன்களை பெற்றுத் தரக்கூடிய வகையில் அமைதலும் அவசியம் என்று அவர் தெரிவித்தார். [அ-10]

## தமிழ் அகதிகளுக்கு வெளியேற்ற உத்தரவு

யாழ்ப்பாணம், செப். 12

திருகோணமலை மாவட்டம் சினக்குடாவிலுள்ள சிறப்பம்பே என்ற இடத்திலுள்ள அகதிகளான தமிழ் மக்களை உடனடியாக அப்பகுதியிலிருந்து வெளியேறுமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் செய்வதறியாது உள்ளனர் [ஒ]

## இணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப் 12

தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்திற்கான இணைப்புக் குழுக் கூட்டம் இன்று பிற்பகல் 4-00 மணிக்கு யாழ்ப்பாணம் - பலாலி வீதியிலுள்ள தொழிற்சங்க பணிமனையில் நடைபெறும். [ஒ]

## பன்முகப்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் போதனைகளும் ஒரு பிராந்திய வட்டத்திற்குள் நில்லாமல் உலகளாவிய ரீதியில் அமைந்தன. ஆகையால் அவன் உலக மகா கவியானான்.

அவனது புகழ் பேசுவது பெருமையேயானாலும், அவனது கருத்துக்களை [illegible] வழி நிற்பதே அவனை [illegible] மார்க்கம்.

## சாண்டில்யன்:.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிதுகாலம் அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார்.

விடுதலைப் போராட்ட காலத்தில் தேசியப் பத்திரிகைகளில் இவர் பணியாற்றியிருந்தார்.

எண்பதுக்குமேற்பட்ட சரித்திர நாவல்களை இவர் எழுதியிருக்கின்றார் மூன்று திரைப் படங்களுக்குக் கதை வசனமும் இவர் எழுதினார்.

சாண்டில்யனின் நிஜப் பெயர் பாஷ்யம். தென் ஆற்காடு மாவட்டத்தில் திருக்கோவலூரில் 1910ஆம் ஆண்டில் இவர் பிறந்தார். இவர் ஒரு பட்டதாரி. [இ-எ]

## பூநகரி| . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குழுத்தலைவர் திரு பொ. தங்கராசா தலைமையில் [illegible] உயர் அதிகாரிகளிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 12-09-1987ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 293/2 Navalar Road, Jaffna on 12 - 09 - 1987.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org